கலைக்கதிர்

ஜூன் 1961

DPF பம்புகள்

உணவு உற்பத்தியில்

முன்னணியில் நிற்பவை



பால்பேரிங்குகள் பொருத்தப்பட்ட

'**DPF**' பம்புகள் 2" முதல் 8" வரை

எல்லா சைஸ்களிலும் கிடைக்கும்.

தண்டாயுதபாணி பவுண்டரி பிரைவேட் லிட்.,

பாப்பநாயக்கன்பாளையம்,

கோயமுத்தூர்-1.

போன்: 2419. தபால் பெட்டி: 278. தந்தி: 'மோட்டார்பம்பு'.

The Pioneer Spinner

A
"PIONEER"
AND
"PATTERN"
INDUSTRY IN
TAMILNAD

Selected by the
Government of India
As
A Training Centre
For
Technology Graduates
and
Diploma Holders
UNDER THEIR
PRACTICAL
TRAINING
STIPEND
SCHEME

AN OUTSTANDING OPINION

I have seen a fair number of mills by now and was thinking that there was no special point in seeing one more of them. On seeing this mill, however, I find myself completely mistaken for there are mills and mills and this is certainly a unique one. I find everywhere an atmosphere of cleanliness and good cheer and the machinery is gleaming and the operations silent. I wish the example of this mill is copied all over the country.

(Sd.) *W. R. Natu.*
Textile Commissioner,
Government of India.

23-1-1961

THE COIMBATORE PIONEER MILLS LTD.
PEELAMEDU - COIMBATORE-4.

'B' MILLS.
PERIYANAICKENPALAYAM.

PSG



COOLANT PUMP



SINGLEPHASE MOTOR

Manufacturers of:

- ELECTRIC MOTORS
- PUMPSETS
- MACHINE TOOLS
- DIESEL ENGINES
- LABORATORY EQUIPMENTS



1000 M M. LATHE

P. S. G. INDUSTRIAL INSTITUTE
COIMBATORE-4 S. INDIA.

புதிய வெளியீடுகள்

திரு. தெ. பொ. மீ. மணிவிழா மலர்

பண்பாடு, இலக்கியம், சமயம், இலக்கிய வரலாறு, மொழி வரலாறு, மொழியியல் (Linguistics) முதலியவைகளைப் பற்றி அந்தந்தத் துறையில் புலமை நிறைந்த பெரும் புலவர்களின் அரிய கட்டுரைகளைக் கொண்டது.

பக்கம்: 600 – விலை ரூ. 10–00.

*

திரு. தெ. பொ. மீ. அவர்களின் அரிய நூல்கள்:

சமணத் தமிழ் இலக்கிய வரலாறு

பண்டுதொட்டுச் சமணர்கள் ஆக்கிய தமிழ் இலக்கண இலக்கியங்களின் சிறப்பையும் வரலாற்றினையும் விளக்குவது.

பக்கம்: 167 – விலை ரூ. 2–50.

*

குலசேகரர்

குலசேகரர் பாடிய திருமொழிகளில் முதல் ஐந்தனுக்குரிய விளக்கங்களைச் சுவை ததும்ப நவில்வது.

பக்கம்: 161 – விலை ரூ. 2–50.

*

கானல்வரி

'கானல்வரி'யை மையமாகக்கொண்டு சிலப்பதிகாரம் முழுவதையும் ஆய்ந்துரைக்கும் அறிவுப் பெட்டகம்.

பக்கம்: 323 – விலை ரூ. 5–50.

அஞ்சல் செலவு தனி.

கலைக்கதிர் வெளியீடு, கோவை-1.

கலைக்கதிர்

ஆசிரியர்

ஜி. ஆர். தாமோதரன்

மலர் 13 இதழ் 6

ஜூன் 1961

தாகூர் மலர்

தாகூரின் திருவுள்ளம் — திரு. ஜி. ஆர். தாமோதரன்	2
ஆப்பிரிக்காவின் துயரம் — திரு. அ. சீநிவாசராகவன்	6
தொல்காப்பிய நெறி — டாக்டர் துரையரங்கனர்	10
மிகை அதிர்வு ஒலியின் விந்தைகள் — ரஷ்யச் செய்தித்துறை	15
அனைத்துலகப் பொதுமகன் — திரு. தெ. பொ. மீ.	17
கல்லணையும் கைப்பிடிச் சுவரும் — திரு. கே. எஸ். மகாதேவன்	21
இரவீந்திரரும் சமயமும் — திரு பினய் கோபால் ராய்	26
உள்ளத்தின் உண்மை — டாக்டர் தா. ஏ. சண்முகம்	30
காலமென்னும் கடலோரம் — கவியரசர் தாகூர், தமிழாக்கம்: திரு. ஞா. மாணிக்கவாசகம்	32
ஓவியர் குருதேவர் — மூலம்: நந்தலால் போசு, தமிழாக்கம்: திரு. வீ. இராசமாணிக்கம்	37
அண்ட வெளியில் ஆலன் ஷெப்பர்டு — அமெரிக்கச் செய்தித்துறை	44
தாகூரின் சிறு கதைகள் — திரு. டி. டபிள்யூ. கிளார்க்	50
மாந்தருள் மாணிக்கம் — திரு. அனில் குமார் சந்தா, தமிழாக்கம்: திரு. முத்துவெங்கிட்டராமன்	53
நான் கண்ட தாகூர் — திரு. முத்துவெங்கிட்டராமன்	57
வழியனுப்புதல் (சீவக சிந்தாமணி) — திரு. தா. ஏ. ஞானமூர்த்தி	64
நிலவியல் தந்தை ஜேம்ஸ் ஹட்டன் — திரு. பா. பாலசுப்பிரமணியன்	68

கலைக்கதிர் இதழில் வெளியிடும் கட்டுரை, கதை முதலியவற்றின் கருத்துகட்கு அவற்றை எழுதிய நேயர்களே பொறுப்புடையவர்கள்.

தாகூரின் திருவுள்ளம்

மேனாட்டுப் பண்பாடும் நாகரிகமும் நம் நாட்டில் புகுந்து வேரூன்றத் தொடங்கிய காலத்தில் கவிஞர் தாகூர் பிறந்தார் (1861). பல அறிஞர்கள் மேனாட்டு இலக்கியங்கள், தத்துவம், சமயம் ஆகியவற்றை ஆழ்ந்து பயின்று அவற்றின் தன்மையை உணரலாயினர். இவ்வாறே மேனாட்டறிஞர்களும் கீழைக் கலைகளைப் பயிலலாயினர். அக்காலத்துச் சீர்திருத்தவாதிகள் சிலர் மேனாட்டுப் பழக்க வழக்கங்களைக் கண்மூடித்தனமாகவும் மேற்கொண்டு ஒழுகலாயினர். தாகூர் தோன்றிய குடும்பம் பெருமை மிக்கது; செல்வச் சிறப்பெய்தியது. எனவே, அவர் செல்வத்திலே பிறந்து வளர்ந்தவர் ஆவர். மேனாட்டுப் பண்பினை இந்தியப் பண்போடு இணைத்துப் பிரம்ம சாமாச அமைப்பினைக் கண்டவர் இராம்மோகன்ராய் என்பவர். அவர் மேனாட்டுக் கல்வியை நம் நாட்டில் பரப்பப் பெருமுயற்சி செய்தவராவர். அவருக்கு உறுதுணையாய் நின்று ஆதரவு தந்தவர் தாகூரின் பாட்டனார் துவாரகநாதர் (1794-1846) என்பவர். இராம்மோகன்ராயின் மறைவுக்குப் பிறகு நம் கவிஞரின் தந்தையார் தேவேந்திரநாத தாகூர் (1817-1905) பிரம்மசாமாசத்தின் தலைசிறந்த தலைவரானார். அவருடைய அசையா தெய்வ நம்பிக்கையையும் பக்தியையும் கண்ட நம் நாட்டவர் அவரை மகரிஷி என்று பாராட்டலாயினர். தாகூர் குடும்பம் உபநிடதம், இசுலாமியம் ஆகியவற்றின் மரபு வழி வாழ்ந்த குடும்பமாகும். அம் மரபுகளோடு மேனாட்டுக் கல்வி, வாழ்க்கை முறை ஆகியவற்றையும் அது மேற்கொள்ளலாயிற்று. எனவே, தாகூர் குடும்பம் பல்வகைப் பண்பாட்டில் ஒருமைப் பாட்டினைக் கண்ட ஓர் ஒப்பற்ற குடும்பம் எனலாம். இத்தகைய குடும்பத்தில் நம் கவிஞர் பெருமான் தோன்றி வளர்ந்து ஆளாகியவர். எனவே, அவருடைய உள்ளப் பாங்கை ஓரளவு உணரலாம்.

அவர் செல்வத்திலே வளர்ந்தவராயினும் ஏழை மக்களின் வாழ்க்கைத் தன்மையை நன்கு உணர்ந்திருந்தனர். இதற்கு இளம் பருவத்திலேயே அவர்க்கு ஒரு சிறந்த வாய்ப்பு ஏற்பட்டது. தம் குடும்பச் சொத்துக்களைக் கவனித்துக்கொள்ளும் பொறுப்பை அவருடைய தந்தையார் அவருக்கு அளித்தார். இதற்காகத் தாகூர் பல ஆண்டுகள் கிழக்கு வங்காளத்தி லுள்ள கிராமங்களில் வசிக்க நேர்ந்தது. பெரும்பாலும் அவர் பத்ம ஆற்றில் படகில் சென்று கிராமங்களில் தமக்குரிய இடங்களைச் சுற்றிப் பார்த்து வந்தனர். இதனால் அவர் கிராம மக்களோடும் இயற்கையோடும் நன்கு தொடர்பு கொண்டார்; பொதுமக்களின் இன்பதுன்பங்களை உணர்ந்தார்.

திரு. ஜி. ஆர். தாமோதரன்.

பல்வகை நாடுகள், மொழிகள், மக்கள், இயற்கை முதலியவற்றினிடையே அவர் ஒருமைப்பாட்டினைக் கண்டார். இவ்வொருமைப் பாட்டுள்ளத்தில் மலர்ந்ததுவே சாந்திநிகேதனம். இயற்கைக்கும் மனிதனுக்கு முள்ள நெருங்கிய உறவினை அவர் தம் அனுபவத்தால் உணர்ந்தார். மக்கள் அனைவரும் கடவுளின் குழந்தைகள் என்பது அவர் கருத்து. மக்கள் தத்தம் தனிப்பட்ட நலத்தின் மீதே மிகுதியும் நாட்டமுடையவர்களாய் உள்ளனர். இதனால்தான் உலகில் பிணக்கும் பூசலும் ஏற்படுகின்றன. எல்லோரும் உலக ஒற்றுமைபால் நாட்டமுடையவர்களாய் இருப்பின் தனிப்பட்ட நன்மைகளைத் தக்கபடி அவரவர் பெறுவார்கள் என்று அவர் கருதினார். மேலும் சமயம், ஒற்றுமையையும் எல்லா உயிர்களிடத்து அன்பையும் வற்புறுத்துகின்றது. எனவே, சமய நெறியே மனிதன் மேற்கொள்ளுதற்குரிய சிறந்தநெறி என்றும் அவர் எண்ணினார். அவர் கூறும் சமயம் குறிப்பிட்ட ஒன்றைப் பற்றியது அன்று; பொதுவாக எல்லாச் சமயங்களையும் குறிப்பதாகும்.

அவருக்குக் கடவுளிடத்தில் உறுதியான நம்பிக்கை உண்டு. 1914-ஆம் ஆண்டு முதல் உலகப்போர் மூண்டபோது, அவர் பிரார்த்தனை நிகழ்த்தி ஒரு சொற்பொழிவும் செய்தார். 1905-ஆம் ஆண்டு வங்காளத்தை இருபிரிவாகப் பிளப்பதென இராசப் பிரதிநிதி கர்சன் என்பவர் முடிவு செய்தார். அதை மக்கள் எதிர்த்தனர். கவிஞர் தலைமையில் தெருக்களின் வழியே ஊர்வலம் சென்றது. ஆண்டவனுடைய திருவருட் பார்வை வங்காளத்தின்மீது பட வேண்டுமென்று வேண்டிக் கொள்ளும் ஒரு பாடலை அப்போது கவிஞர் பாடினார். அனைவரும் அப்பாடலைப் பாடிக் கொண்டே ஊர்வலஞ் சென்றனர். இவற்றால் கடவுள்பால் கவிஞருக்குள்ள தளரா நம்பிக்கை புலனாகும். கீதாஞ்சலி என்ற நூலில் கவிஞரின் பக்தி வெள்ளம் பெருக்கெடுத் தோடுவதைக் காணலாம்.

''நான் பாடும்போது நினது உள்ளம் மகிழ்வெய்தும் என்பதை நான் உணர்வேன். நினது அருட் சந்நிதியில் நான் ஒரு பாடகனாகவே தோன்றுகிறேன்.

''தீண்ட முடியாத நினது பாதத்தை எனது பாட்டின் விரிந்த சிறகின் இதழால் நான் தொட்டு இன்புறுகிறேன்.

''பாடிய இன்பத்தில் மயங்கி என்னை மறந்து, எனது தலைவனாகிய உன்னை எனது நண்பன் என அழைக்கின்றேன்.''

இது கீதாஞ்சலியின் இரண்டாவது பாடலின் இறுதிப் பகுதியின் கருத்து. இதன்கண் கவிஞரின் பக்திப் பெருக்கினை உணரலாம்.

தற்காலக் கல்வி முறையைத் தாகூர் சிறிதும் விரும்பவில்லை. தற்காலப் பள்ளிகளை அவர் தொழிற்சாலைகளுக்கு ஒப்பிடுகிறார். ''குறிப்பிட்ட நேரத்தில் மணியடித்ததும் தொழிற்சாலை தொடங்குவது போலப் பள்ளியும் தொடங்கப்படுகிறது. ஆசிரியர் பேசத் தொடங்கியதும் மாணவர்களாகிய எந்திரங்கள் இயங்குகின்றன. ஆசிரியர் பேச்சை நிறுத்தியதும் பள்ளியாகிய தொழிற்சாலை மூடப்படுகிறது. மாணவர்கள் சில பக்கங்களிலுள்ள செய்திகளை அறிந்தவர்களாய் வீடு திரும்புகிறார்கள். அவ்வறிவு எந்திரத்தால் ஆக்கப் பெற்ற பொருள் போன்றது. இவ்வறிவு தேர்வுகளால் மதிப்பிடப் பெற்றுத் தகுதி வழங்கப் பெறுகிறது. எந்திரம் நம் முன்னே பொருளைக் காட்ட முடியும். அதை நம்மிடம் அதனால் கொடுக்கமுடியாது.விளக்கு எரிதற்கு

உரிய எண்ணெயை அது தரமுடியும். ஆனால், அதுவே விளக்கை எரிய வைக்க முடியாது.'' இவ்வாறு அவர் தற்காலக் கல்வி முறையைக் கடிகின்றார். தற்காலப் பள்ளிகள் கீழ்க் கண்ட நோக்கங்களோடு இயங்க வேண்டுமென்பது அவர் கருத்து.

1. கற்பிக்கப்பெறும் பாடங்கள் ஆர்வத்தை வளர்ப்பனவாயும் பல் வகைப்பட்டனவாயும் இருத்தல் வேண்டும். அவை இதயத்தையும் அறிவையும் வளர்க்கும் தன்மை பொருந்தியவையாயும் இருத்தல் வேண்டும்.

2. இள உள்ளங்களில் ஒருமைப் பாட்டுணர்வைக் குலைக்காதபடி கல்விமுறை அமையவேண்டும்.

3. பள்ளியில் சில மணி நேரம் மட்டும் மாணவர்கள் தம் கவனத்தைச் செலுத்தும் கல்வியாய் இருத்தல் கூடாது.

ஆசிரியர்கள் வெறும் எந்திரங்கள் போலல்லாமல் மனிதர்களாகவே விளங்க வேண்டும் என்று கவிஞர் அறிவுறுத்துகிறார். மேலும் அவர் தாய்மொழியிலேயே கல்வி கற்பிக்க வேண்டும் என்றும் வற்புறுத்துகிறார். ''நம் வாழ்க்கையின் கடமைகளை நன்கு ஆற்றுதற்குச் சிந்தனைத் திறமும் கற்பனை ஆற்றலும் இன்றியமையாதவையாம். உண்மை மனிதர்களாக விளங்குதற்கு இவை யிரண்டும் தேவை. இவற்றைக் குழந்தைப் பருவத்தி லிருந்து வளர்த்தாலன்றி, முதிர்ந்த பருவத்தில் அவ்வாற்றல்களை நாம் பெற முடியாது. அவற்றை நாம் வளர்க்கத் தற்காலக் கல்வி இடந் தருவதில்லை. அயல்நாட்டு மொழியைக் கற்பதிலேயே நம் இளமையில் பல ஆண்டுகளைக் கழிக்கிறோம். ஆங்கில மொழியைக் கற்பது கடினம்; ஆங்கில எண்ணம், உணர்வு ஆகியவற்றை நன்கறிவது அதனினும் கடினம். அவற்றையெல்லாம் அறிய நெடுங்காலம் ஆகிறது. அதற்குள் நம் சிந்தனை ஆற்றல் மங்கிப் போகிறது.'' இங்ஙனம் ஆங்கிலம் வாயிலாகப் பாடங் கற்பிப்பதனால் ஏற்படும் குறைபாட்டினை விளக்குதல் மூலமாகத் தாய் மொழியே பயிற்சி மொழியாக ஆதல் வேண்டும் என்பதை நன்கு கவிஞர் தெளிவுறுத்துகின்றார்.

கிராம வாழ்க்கையே சிறந்த தென்பது அவர் கருத்து. நகரங்களை விட கிராமங்களே இயற்கைக்கு அணுக்கமாக உள்ளன. அங்கேதான் மக்கள் இயற்கையோடு இயைந்த வாழ்வு வாழ முடியும். கிராமங்களைக் கவிஞர் பெண்களுக்கு ஒப்பிடுகின்றார். ''பெண்கள் தம் கணவருக்கு அடிப்படைத் தேவைகளையும் உணவும் மகிழ்ச்சியும் அளிப்பதுபோலக் கிராமங்களும் மக்களுக்கு அவைகளை அளிக்கின்றன. அமைதி தரும் ஆற்றல் இயற்கையாகவே கிராமங்களுக்கு உண்டு. ஆனால் அவற்றின் வளம் நகரங்களால் சுரண்டப் பெறும்போது அவை தம் பொலிவையும் ஆக்கத் திறனையும் இழக்கின்றன; மனைவியாகிய நிலையிலிருந்து பணிப் பெண் நிலைக்கு அவைகள் இழிகின்றன. நகரம், தன் செருக்காலும் தற்பெருமையாலும் தன் நலத்திற்கும் மகிழ்ச்சிக்கும் அடிப்படைக் காரணமாயிருக்கும் கிராமத்திற்கு இழைக்கும் தீங்கினைக் கவனிப்பதில்லை.''

அறிவும் ஆற்றலும் வாய்ந்த பலர் கிராமங்களிலிருந்து நகரங்களுக்குக் குடியேறுவதைக் குறித்துக் கவிஞர் வருந்துகிறார். அங்குள்ள வசதிக் குறைவே அதற்குக் காரணம் என்று அவர் கருதுகிறார்; கிராம வாழ்க்கை நிலை மிகுதியும் உயரவேண்டும் என்று வற்புறுத்துகிறார். கல்வி, உடல்நலம் முதலியவற்றின் வளர்ச்சிக் குரிய வசதிகளைக் கிராமங்

களுக்குத் தந்து அவர்தம் வாழ்க்கை நிலையை உயர்த்த வேண்டும் என்றும், வெறும் வாயளவில் கிராமங்களின் இயற்கை அழகை எடுத்துரைப்பதால் மட்டும் அவர்கள் கிராமத்திலேயே தங்கிவிடமாட்டார்கள் என்றும் அவர் அறிவுறுத்துகிறார். தம்முடைய தேவைகளைத் தாமே பெறும் ஆற்றலைக் கிராமங்கள் பெறுமாறு செய்ய வேண்டும். பல கிராமங்கள் சேர்ந்து ஒவ்வொரு இணைப்பாக அமைய வேண்டும். ஒவ்வொரு இணைப்பும் தனக்குரிய தேவைகளைத் தானே ஆக்கிக்கொள்ளும் திறம் வாய்ந்ததாகவும், தன் கிராமங்கள் ஒவ்வொன்றும் அதற்குரிய தேவைகளைப் பெறுமாறும் செய்யவேண்டும். பல கிராமங்களில் பள்ளிகள், தொழிற்சாலைகள், நெற்களஞ்சியங்கள், கூட்டுறவுக் கடைகள், வங்கிகள் முதலியவைகளை ஏற்படுத்தி அவைகள் நன்கு இயங்குமாறு செய்ய வேண்டும். நிலத்துக்குரியவரும் உழவரும் ஒன்றுபட வேண்டும்.

பண்பாடு உள்ளத்தின் உயிராகும் என்பர் கவிஞர் தாகூர். அதனை ஒருவர்க்கொருவர் வாயிலாகவே பெறமுடியும். ஏட்டுக் கல்வி வெறும் அறிவைத் தரவல்லது; அவ்வறிவு இயக்கமற்றது; அளவால் மதிப்பிடத் தக்கது. ஆனால் பண்பாடு வாழ்க்கையில் இயக்கமுடையது; வளர்ச்சியடைவது; பல்கிப் பெருகுவது.

தற்காலத்தில் ஒரு நாடு தனித்து இயங்க முடியாது; பல நாடுகளோடும் ஒன்றி வாழ வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. எனவே நாம் நம் பண்பாட்டோடு மேனாட்டவர் பண்பாட்டையும் ஏற்று, நம் சூழ்நிலைக்கேற்ப அமைத்து வாழவேண்டுமென்றும் தாகூர் அறிவுறுத்தினார். அவரால் தோற்றுவிக்கப் பெற்ற 'விசுவ பாரதி' உலகப் பல்கலைக் கழகமாகும். அங்குக் கீழை நாட்டுப் பண்பாடு, மேலை நாட்டுப் பண்பாடு ஆகிய இவையிரண்டின் இயைபினின்றும் உருவாகிய ஓர் உயரிய பண்பாடு வளர்க்கப் பெறுகிறது. இப் பண்பாடு பொதுவாக மனித நம்பிக்கையின் அடிப்படையில் தோன்றியதாகும்.

"எந்தப் பண்பாட்டிலும் எனக்கு நம்பிக்கை உண்டு. அயல்நாட்டுப் பண்பாடு என்பதற்காக நான் அதன் மீது நம்பிக்கை யிழப்பதில்லை. நம் பண்பின் செழுமைக்குப் பிறநாட்டுச் சக்திகளின் மோதல் இன்றியமையாதது...... அம்மோதல் நம் பண்பினை உறுதியுடையதாக்கும்'' என்று கவிஞர் தாகூர் கூறுகிறார். பன்மையில் ஒருமை காணும் அவருடைய உயரிய நோக்கம் போற்றற்குரியது. உலகின் பல்வேறு துறைகளையும் அவர் இந்த ஒருமைப்பாட்டு நோக்குடனேயே காண்கிறார். அவருடைய கவிதைகள், கட்டுரைகள், நாடகங்கள், புதினங்கள், ஓவியங்கள் ஆகிய அனைத்தும் அவர்தம் ஒருமைப்பாட்டுள்ளத்தில் மலர்ந்த அறிவுச் செல்வங்களாகும்.

''இந்தியாவின் அடிப்படைக் கொள்கை, பன்மையில் ஒருமை காண்பது; அல்லது வேற்றுமையில் ஒற்றுமை காண்பது. இந்திய நாடு வேற்றுமைகளை முரண்பாடாகக் கொள்வதில்லை; அல்லது ஒவ்வொரு அயலவனையும் பகைவனாகவும் காண்பதில்லை. எனவே, அது யாரையும் தாக்குவதில்லை; அழிப்பதில்லை. தன் சமுதாய அமைப்பில் எல்லோருக்கும் இடமளிக்கிறது; ஒவ்வொரு நெறியினையும் ஏற்று அதன்கண் காணும் சிறப்பினை மேற்கொள்கிறது.''

இப்பொன் மொழிகளினின்றும் கவிஞரின் ஒருமைப் பாட்டுணர்வு புலனாகிறது. தற்கால உலகம் ஓங்கி வளர இவ்வொருமையுணர்வு இன்றியமையாதது என்று கூறவும் வேண்டுமோ? ●

ஆப்பிரிக்காவை இருண்ட கண்டம் என்று சொல்வதுண்டு. ஆனால், அது என்றும் இருண்டிருந்ததில்லை. மிகப் பழங்காலத்தில், நைல் நதி தீரத்தில், உயர்ந்த நாகரிக வாழ்க்கையை மக்கள் மேற்கொண்டு வாழ்ந்தார்கள் என்று வரலாறு கூறுகிறது. இந் நாகரிகத்திற்கும் முற்பட்ட பழமையான நாகரிகங்கள் ஆப்பிரிக்காவின் தென்பகுதியில் இருந்தன என்று எண்ணுவதற்கு ஆதாரம் இருப்பதாகப் புதைபொருள் ஆராய்ச்சியில் ஈடுபட்ட அறிஞர் சிலர் கருதுகிறார்கள். என்றாலும், மிகநீண்ட காலத்திற்கு மனிதனுடைய வரலாற்றில் ஆப்பிரிக்கா பங்கு பெறவில்லை. ஆசியாவிலும் பிறகு ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் பற்பல பேரரசுகள் தோன்றின; பற்பல சமயங்கள் முளைத்தன; பற்பல கலைகள் வளர்ந்தோங்கின. பெருந் திரளான சமுதாயம் அமைத்து, ஒன்றாகக் கூடி வாழும் திறமையிலும் அறிவாற்றலிலும் கலை நலத்திலும் தத்துவ ஞானத்திலும் பண்பாட்டிலும் அங்கங்கே வெவ்வேறு காலத்தில் பலபடியாய், மனித இனம் வளர்ந்துகொண்டே சென்றது. இந்த வளர்ச்சிக் கூட்டிசையில் ஆப்பிரிக்காவின் குரல் கேட்கவே இல்லை. அந்தப் பெருநிலப் பரப்பின் இருண்ட காடுகளில், சிறு சிறு கூட்டங்களாக, வெளி உலகத்தோடு எவ்விதமான தொடர்பும் இல்லாமல், மக்கள் இருந்து வந்தார்கள். ஆனால், விலங்குகளோ என்று மற்றவர் எண்ணும்படிக்குக் காட்டுமிராண்டிகளாகவே வளைய வந்தார்கள். பயங்கரமான காடு; வெய்யில் சிறிதும் உள்ளே வராத வண்ணம் அடர்ந்து தழைத்த பிரும்மாண்டமான மரங்களும் கொடிகளும்; ஓயாத நிழலில் ஈரம் உலராது நீர் கசியும் சதுப்பு நிலம்; அல்லது வறண்ட பாறை; காட்டு விலங்குகளின் கோர ஆதிக்கம்; பாம்பும் பன்றியும் மனிதனைச் சுற்றிவந்து சூறையாடிய கொடுமை; உணவைப் பயிர் செய்யவோ மரப்பட்டை, இலை இவற்றைத் தவிர வேறு உடையைப்பற்றி எண்ணவோ இயலாத சூழல்; மரணத்தோடு ஓயாமல் ஒழியாமல் போராட்டம். இந்த நிலையில் நாகரிகம் வளர்வதேது? ஏதோ விலங்குபோல அங்கே மனிதன் இருக்க நேர்ந்தது; நெடுங்காலம் அப்படியே இருந்தான்.

இதை யெல்லாம் எண்ணுகிறார் கவியரசர் இரவீந்திர நாத தாகூர். ஆசியாவிலிருந்து ஆப்பிரிக்காவைப் பிரித்த கடல்கோளுக்கு அவருடைய சிந்தை செல்கிறது. என்றோ, என்றோ, காலத்தின் முதன் முதலில் தன் படைப்பைப் பார்த்து இறைவனே நொந்துகொண்டானாம். 'என்ன சிருஷ்டியோ இது! சிறு பிள்ளைகள் தரையிற் கீறிடும் மண் வீட்டுக் கணக்காகவல்லவா இருக்கிறது!' என்று பேரண்டங்களைப் பார்த்து, இந்த மண்ணுலகத்தைப் பார்த்துக் கடவுள் நகைத்தானாம். அவ்வளவுதான்; அசுர அலையொன்று விம்மி யெழுந்து நிலத்தை விழுங்

கியது; ஆசியாவும் ஆப்பிரிக்காவும் பிரிந்தன; ஆப்பிரிக்காவை இருள் சூழ்ந்தது.

இப்படியாகப் பாடுகிறார் தாகூர்:

அன்றென்றோ காலத்தின் ஆதிமுதற்
கலக்கத்தின் இருள்மை யத்தில்
நின்றிருந்த உலகையெலாம் நிருமித்த
நெடுஞ்சிற்பி தன்கை வண்ணம்
ஒன்றுந்தன் உள்ளத்திற் கேற்றதில்லை
ஓட்டையென எள்ளி, விஞ்சைத்
தன்திறலை மடைமையெனத்
தலையசைத்துச்
சிரித்திட்டான் அந்த வேளை.

அலையொன்று விம்மியது கீழ்த்திசைவிட்
டாப்பிரிக்க நிலமே உன்னை
நிலைகுலையப் பிரித்தெங்கோ நிறுத்தியது
நீளிரவாய்த் திரண்ட பாழில்
வலிமைமிகு பேய்மரங்கள் சூழ்ந்தரணாய்க்
காவல்செய் காட்டின் உள்ளே
உலையுமனம் தன்னைத்தான் உண்டழியும்
தனிமையிலே நீயும் நின்றாய்.

ஆப்பிரிக்காவில் விலங்கு நிலையின் திக்கற்ற பாழிலே அழுந்திக் கிடந்தான் மனிதன். என்றாலும் அவன் மனிதனே என்பதற்கான அறிகுறிகளும் இல்லாமற் போகவில்லை. இயற்கையின் நுட்பமான அசைவைக்கூடக் கவனித்துப் பொருள் காணும் புலனறிவை அவன் வளர்த்து, மிகமிகக் கூர்மையானதாகச் செய்துகொண்டான்; சிறு கூட்டத்தில் ஒருவனாக வாழப் பழகினான்; தன் கூட்டத்திற்குத் தோற்றத்திலும் பழக்க வழக்கங்களிலும் பேச்சிலும் தனித்தன்மை ஒன்றை ஏற்படுத்திக்கொண்டான். வேறு கூட்டங்களில் தன்னைப்போலவே வாழ்ந்த மனிதர்களைத் தன்னைப் போலத்தான் அவர்களும் என்று அவன் எண்ணவில்லை. அவர்களை நம்பவும் இல்லை. எப்படி நம்புவான்? மனிதனை மனிதன் அடித்துத் தின்றே உயிர் வாழும்படிக்கு அமைந்த அந்தக் கூட்டு நரகத்தில், எப்படி நம்புவான்; எப்படி இன்னொரு மனிதனிடத்தில் அன்பு செலுத்துவான்? நாலா திசையிலிருந்தும் பயம் அவனை உறுத்தியது. காட்டின் மாயாத இருளே அவனைச் சுற்றிக் கவிந்தது. அதற்குள்ளிருந்து என்ன வருமோ? எந்த அபாயம் தாவி வந்து தன்னை விழுங்குமோ; விலங்கா, வேற்று மனிதனா; எது, எது, எது உயிரைக் குடிக்க வருகிறது என்ற தணியாத குலை நடுக்கம்; இனம் தெரியாத பயங்கரம் ஒன்று; அழகிலாப் பேய் வடிவம் தாங்கித் தன்னைச் சுற்றி எங்கணும் திரிவதாக ஒரு பிரமை; பிறகு அதுவே நம்பிக்கை ஆயிற்று. அதை வணங்கினான்; மனத்தின் இருளில் தானே சமைத்த எல்லையற்ற குரூரத்திற்குத் தன் கொடுமையை வளர்த்து அதன்மூலமாக வணக்கம் செலுத்தினான். மந்திர உச்சாடனம், சூனியச் சடங்கு, வெறியாட்டு, உயிர்ப்பலி இவற்றையெல்லாம் தன் வாழ்க்கையின் தவிர்க்கமுடியாத அம்சங்களாக அமைத்துக்கொண்டான். பயந்து பயந்து, பயங்கரம் ஆனான்; பேயை வணங்கி வணங்கிப் பேயே ஆனான்.

நீரினிலே நிலத்தினிலே
நிழலாடும் அடையாளம்
யாவும் கூர்ந்து
நேருமியல் கண்(டு)அவற்றின்
உட்பொருளை நீள்நினைவால்
தொட்டாய், நெஞ்சில்
பாரினுளே பதுங்கியுள
மாந்திரிகம் படரவிட்டாய்
உணர்வுக் கப்பால்
காரிருளிற் கலிக்கின்ற
பேயுலகச் சூனியத்தின்
கருமம் கண்டாய்.

எல்லையில்லாப் பயங்கரமும்
பயங்கரமாய் எண்ணியஞ்சும்
கவந்தம் ஆகுய்
தொல்லைதரு நரகபயம்
தொலைத்திடவே அதைவிஞ்சும்
கொடுமை சான்ற
கொல்அசுரத் தோற்றத்தை
மேற்கொண்டாய், குமைந்திட்டாய்;
மனிதன் மாண்பை
அல்லினுளே அழுக்கேறி
அழியவிட்டுப் பழிசுமந்தாய்,
ஐயோ வீழ்ந்தாய்.

இந்த நிலையில்தான் ஆப்பிரிக்காவின் வரலாற்றில் புதிய திருப்பம் ஏற்பட்டது. அந்தக் கண்டத்தின் காட்டு வெளியில், வெள்ளையன் அடியெடுத்து வைத்தான். நாகரிகம் வளர்ந்திருந்த ஐரோப்பாவிலிருந்து அவன் வந்தான். ஆகவே, நாகரிகம் அளித்த உடை, உணவு, வாகனம் முதலிய சாதனங்கள் அவனோடு வந்தன. ஆனால், அவன் நெஞ்சிலோ ஆப்பிரிக்கக் காடுகளில் உள்ள இருளைவிடப் பயங்கரமான இருள் சூழ்ந்திருந்தது; அவன் கையிலோ துப்பாக்கி துடித்தது; பேராசை, குரூரம் என்ற இரண்டிற்கும் அடிமையாகி, மனித விலங்காய் அவன் திரிந்தான்; அவனுடைய நாகரிகப் போர்வை கழன்று விழுந்தது; அவன் பேய்போலக் குதித்தான்; மிருகத்தைப்போல அலைந்து ஆப்பிரிக்க மக்களைத் துன்புறுத்தினன்.

முதலில் வந்து, இப்படி ஆப்பிரிக்காவைச் சூறையிட்ட வெள்ளையர்களைப் பற்றிக் கவிஞர் தாகூர் பேசுகிறார்:

ஓநாயின் கோரைப்பற் கூர்மையினும்
கூர்மைமிகு கொடுமைக் காரர்
ஆகுஉன் இருளடைந்த பாழ்வனத்தின்
குருடான இரும்பு நெஞ்சர்



பறக்கும் மீன்கள்!

பறக்கும் மீன்கள் எளிதாக 500 அடி தூரம் வரை கடத்து செல்ல முடியும். இவை கடலிலிருந்து மேலெழும்பிக் கடும் வேகத்தில் செல்லும். நீரில் நீந்த உதவும் துடுப்புகளே வானில் செல்லும் பொழுது இம் மீன்களுக்குக் காற்றில் பறக்க உதவும். உலகின் வெப்ப அல்லது மிதவெப்பக் கடல்களில் காணப்படும் இம் மீன்களில் சற்று ஆற்றல் மிகுந்தவை. படகுகளையும் சிறு கப்பல்களையும் எளிதில் காற்று வழியாகக் கடந்து சென்றுவிடும்.

கானேறு மிருகமெனக் கதிக்கின்ற
பேராசை கடித்துத் தின்னக்
கூகுகி, நாகரிகப் போர்வைஇழந்
தம்மணமாய்க் குதிக்கும் பேயர்

எண்ணத்தில் எள்ளளவும் வெட்கமிலார்,
இரக்கமிலார், மனிதர் தம்மைக்
கண்ணிவைத்துப் பிடிக்கின்ற கலைபயிலும்
கொலைவேடர், கசடர், வந்துன்
மண்ணதனிற் கால்வைத்தார் நீஅழுதாய்
அவ்வழுகைக் குரலும் தேய்த்தார்
கண்ணீரால் இரத்தத்தால் சேருகிக்
கலங்கியதுன் காட்டுப் பாதை.

ஆப்பிரிக்காவில் இந்தக் கொடுமை நடந்த அதே காலத்தில், மேல்நாடு

களில் பரலோக சாம்ராஜ்யத்தைப் பற்றிப் பறைசாற்றுவதுபோல் ஒவ்வொரு நாளும் கோயில் மணி முழங்கியது; தாய்மார் தமது குழந்தைகளை எடுத்தணைத்துத் தாலாட்டுப் பாடினார்கள்; கவிஞர்கள் அழகுக்குச் சொன்மாலை சூட்டினார்கள். அங்கே அவர்கள் நாட்டில் நாகரிக வாழ்க்கையின் கோலாகலம்; இங்கே ஆப்பிரிக்காவில் மனித வேட்டை:

நாணமிலார் உன்மானம் சூறையிட்ட
நலிவுரைக்கும் வரலாற் றின்மேல்
ஆணிநிமிர் செருப்புக்கள் அழியாத
பழிச்சுவட்டை அழுத்து நாளில்
காணாத கொடுமையெலாம் நீகண்ட
காலத்தின் நீண்ட போக்கில்
சேணில் அலைகடற்கப்பால் அவர்நாட்டுச்
சிற்றூரில் பேரூர் தம்மிற்

ஓயாமற் கோயில்மணி ஓங்கிஒலித்
திறைவன்தன் பரலோகத்தின்
மாயாத அருள்மாண்பை மக்களுக்கு
முழங்கியது வானம் தேய
தாயானார் மதலையரை எடுத்தணைத்தார்
தாலாட்டுப் பாடி நின்றார்
வாய்கிழிய அழகினுக்குத் தோத்திரங்கள்
கவிவாணர் வழங்கிச் சென்றார்.

இந்த நிலையில், ஐரோப்பிய நாடுகளுக்குள்ளேயே கலகமும் போரும் மூண்டன. ஐரோப்பிய நாகரிகத்தின் அத்தமனம் வந்துவிட்டதோ என்று தோன்றியது. மிருக பலமும் யதேச்சாதிகாரமும் மனிதப் பண்பாட்டை அழிக்க முனைந்து, இந் நாச வேலையில் ஒன்றோடொன்று போட்டியிட்டன. இந்த அழிவுக் காலத்தில் கவிஞன் என்ன செய்வான்?

இன்றங்கே மேற்றிசையில் அத்தமன
வான்முழுதும் புழுதிச் சூறை
மன்றெங்கும் இருட்குகைவிட்
டோர்ந்துவந்த
மிருகத்தின் நாச ஊளை
பொன்றியது பகலென்றும் ஏன்றுமெனப்
பறைசாற்றும் ஊழிக் காலம்
இன்றிங்கே இவ்வழிவு வேளையிலே
பாடவந்த கவியே நீகேள்.

கவிஞனுக்கு என்ன சொல்கிறார் இந்த வங்காளக் கவிஞர்? கேட்போம்:

போய்அந்த ஆப்பிரிக்கா பொறற்பழிந்து
கற்பழிந்து புலம்பிச் சோரும்
வாயில்நின்(று) அவள்இந்த வையகத்தை
மன்னிக்கத் தொழுது வேண்டு
நோய்முற்றிப் பித்தேறி உலகமெலாம்
பிணமாகும் கூச்சலூடே
வாயார உன்சொல்லும் மானிடத்தின்
முடிவுரையாய் அமைக, வாழ்க!

எங்கேயோ உள்ளது ஆப்பிரிக்கா; எப்போதோ நடந்தது அதன் பரிபவம். என்றாலும் என்ன? மனிதனுடைய உயர்வில், அவன் கண்ணியத்தில், அக்கறை கொண்டுள்ள வங்காளக் கவிஞனுக்கு மனித குலத்திற்கே ஏற்பட்ட ஒரு பயங்கரப் படிப்பினையாக, எச்சரிக்கையாக ஆப்பிரிக்கா தோன்றுகிறது. நம் பாரதியார் பெல்ஜியத்தைப்பற்றியும், ருஷியாவைப் பற்றியும் பாடவில்லையா? அதுபோலவே கவியரசர் தாகூரும் ஆப்பிரிக்காவைப்பற்றிப் பாடுகிறார்; ஆப்பிரிக்கா, மனித குலத்தை மன்னிக்குமா என்று ஏங்குகிறார்.

இதைத் தாகூருடைய நூற்றாண்டு விழாவின்போது எண்ணுகிறேன்; பெருமையாகத்தான் இருக்கிறது. ஆனால், விழா இருக்கட்டும்; கவிஞனுடைய குரல் உண்மையில் உலகத்தில் கேட்கிறதா? கேட்டால் யாழ்ப்பாணக் கலக்கமும், அஸ்ஸாம் குழப்பமும், காங்கோ கொடுமையும், அலபாமா அட்டூழியமும் இன்று நடைபெறுமா? பாரதியாரும் தாகூரும் இப்போது இருந்தால் என்ன சொல்வார்களோ!

மலேமுகட்டில், சேயோன் ஆன சிவனை நினைந்து, வாழ்த்தி, வணங்கி, அங்கே கடல் வெள்ளத்தால் ஒதுக்கப்பட்ட உணவுப் பொருள்களையும், தேனையும், கிழங்கையும், பிறவற்றையும் உண்டு, தொல்காப்பியரும் பிறரும் சிறிது காலம் தங்கியிருந்தனர் எனலாம். மலேயை அடுத்து நிற்கும் இயல்புடையது மரஞ் செடி கொடிகள் அடர்ந்த அடவி; கடுமை நிறைந்த காடு. வெள்ளத்தால் மூழ்கி அழிவு பெற்ற மரஞ் செடி கொடிகள், வெள்ளம் வற்றியதும், விரைவில் தழைத்துப் பூத்துக் காய்த்துப் பழுத்துப் பழைய அடர்த்தியையும் கடுமையையும் எய்திவிடும். அந் நிலேயில் மலேமுகட்டில் இருந்தவர்கள், ஆண்டிருந்து இறங்கி வந்து தங்கி வாழ்ந் திருந்திருப்பர். இயற்கை வளம் கொழிக்கும் காட்டில் அவர்களுக்கு உணவுப் பஞ்சம் இருத்தற்கு வழியில்லே. வயிருர உண்டு பசியை நீக்கிக்கொள்வதற்குக் காயும் பழமும் கிழங்கும் கீரையும் நிரம்பக் கிடைக்கும் காடு, அவர்களுடைய நெஞ்சை அள்ளிக்கொள்ளுதல் இயல்பேயாகும். மரச்செறிவால் இரவெல்லாம் அடர்ந்த இருள்! அதே காரணத்தால், பகலிலும் கதிரவனின் கதிர்கள் ஊடுருவிப் புகமாட்டாமையால், அங்கே பகலும் செறிந்த இருள்! ஆனுல், அந்த இருட்டால் அவர்கட்குத் துன்பம் இல்லே! இன்பம்! இன்பமே! இருட்டைக் கண்டு அஞ்சும் அச்சம் அவர்கட்கு இல்லே! அஞ்சாமையை அளித்து இன்பத்தை அவர்கட்கு எய்தச்செய்த பொருள் யாது? வெள்ளம் மூடிய இரவிருளில், அவர்கள் மலேமுகட்டில் அஞ்சி அஞ்சி அரற்றி நின்றனரே! வைகறை விடியலில் செக்கரைக் கண்ட பின்னன்றே அவர்களுடைய அச்சம் நீங்கியது! ஆம்! அப்போது இருட்டு அவர்கட்கு அச்சம் விளேவிப்பதாயிற்று! ஆனுல், அதே இருட்டு இப்போது இன்பம் விளேவிப்பதாயிற்று! ஏன்? அப்போது பகலில் சேயோனுக வந்த இறைவன், இப்போது அதே பகலில் இருள் நிறமுடைய மாயோனுக வந்து தம்மைக் காத்து இன்பம் ஊட்டி நிற்பதை அவர்கள் உணர்ந்த உணர்வே அதற்குக் காரணம். தங்கள் முயற்சியால் தேடிப் பெறமாட்டாத இன்பத்தை, மாயோன் தங்களுக்கு அளித்துக் காடு முழுதும் பரவிநின்று தங்களுக்குக் காட்சியளிப்பதாக அவர்கள் உணர்ந்தனர். மலே முகட்டில், சேயோனுக வந்த-சிவனுக வந்த-கடவுளே, இப்போது காட்டில் மாயோனுக வந்து காட்சியின்பம் நல்கித் தம்மைக் காத்து இன்பம் அளிப்பதாக அவர்கள் உறுதியாகக் கருதினர்; அவனேப் போற்றினர். ''மாயோன் மேய காடுறை உலகம்'' என்று தொல்காப்பியர் மாயோனேப் பாராட்டினர். கடவுள் நெறியைத் தொன்று தொட்டுக் கடைப்பிடித்துவந்த தொன்மைத்

தமிழர் வழியில் வந்த தொல்காப்பியர், காட்டில் தாம் இனிதுறைய உடனுறையும் அக் கடவுளையே, மாமை நிறத்தொடு தாம் கண்ட காட்சியையே, மாயோன் என்று பாராட்டினர் எனலாம்.

எவ்வளவுதான் இன்பம் பயப்பதெனினும், தாம் விரும்பியவாறு மனை அமைத்துத் தமக்கேற்ற உணவுப் பொருள்களைச் சமைத்துண்டு, மக்களுடனும் ஒக்கலுடனும் மருவித் தங்கியிருப்பதற்குக் காடு ஏற்ற இடமாகாது. மனையில் வாழ்ந்து மனைவி மக்களொடு மருவி முன் உறைந்துவந்த அவர்கட்கு, அங்ஙனமே உறைதல் வேண்டும் என்ற வேட்கை எழுவது இயல்பேயாகும்.

வெள்ளம் பகைத்தெழுந்தபோது குன்றமே காவல் இஞ்சியாய் (அரணாய்) அவர்கட்கு அமைந்தது. இடையூறு ஏற்பட்ட நேரத்தில் குறிஞ்சி (குன்று + இஞ்சி; குறு + இஞ்சி = குறிஞ்சி) அவர்கட்குக் கூடியுறையும் இடமாயிற்று. அது சிறிது தணிந்தபோது, முல்லைக் கொடிகளால் இயற்கையில் அமைந்த குடில்களில் அவர்கள் தங்கியிருப்பதற்கு அம் முல்லைக் கொடிகள் மிகுந்து படர்ந்திருந்த காடாகிய முல்லை நிலம் அவர்கட்கு வாழ்விடமாயிற்று. இயற்கைக் குறிஞ்சியும், இயற்கை முல்லையும் முறையே கூடியுறைதற்கும், ஆற்றி இருத்தற்கும் இடமாயின என்பது உண்மையே. ஆனால், தாம் விரும்பியவாறு வாய்ப்புடன் தத்தம் மனைவி மக்களொடு தனித்தனியே குடும்பமாய் மருவியுறைதற்கு மருத நிலமே ஏற்ற தென்பதை அவர்கள் முன்பு பயின்று அறிந்தவர்களே அல்லரோ! எனவே, தீம்புனல் யாறும் குளமும் ஏரியும் உள்ள அந் நிலத்திற்கு ஊர்ந்து சென்று பழங்குடிகளாக நிலைபெற அவர்கள் எண்ணினர் எனலாம் எண்ணியவாறே, அந்நிலத்தை யடைந்து விரைவில் வீடுகளைக் கட்டிக்கொண்டு மனைவிமக்களோடு ஊரில் மருவியிருந்து மனைவாழ்க்கையை அவர்கள் நடத்தத் தலைப்பட்டனர் எனலாம். அவர்களைப் போலவே, பிற மலை முகடுகளில் தங்கியிருந்து, வெள்ளத்திலிருந்து உயிர் பிழைத்துத் திரும்பியவர்கள், ஊர்களை அமைத்து இனிது உறையலாயினர் எனலாம். வெள்ளத்தால் வெவ்வேறிடங்களிற் சென்று உயிர் பிழைத்தவர்கள் அனைவரும் நாடிவந்து ஊர்தோறும் ஒருங்கே கூடி மருவி உறையும் நாடு பழைய நாடாயிற்றெனலாம். நாடு நாடாயினபின், உழவும் வாணிகமும் பழைய நிலையை எய்துவதற்கு இடையூறேது? ஆனால், இத்தகைய பழைய நிலையை அவர்கள் தங்கள் முயற்சி மாத்திரையினாலே எய்தினர் என்று கூறியமையலாமா ? வெள்ளத்தில் உயிர்கள் அனைத்தும் அடியோடு அழியாமல், அவற்றுள் சில உயிர்கள் தப்பிப் பிழைத்தது எவ்வாறு? மலை முகட்டையும் வெள்ளம் ஏன் மூடவில்லை? இப்போது விரும்பியதை விரும்பியவாறு ஏய்தி இனிது வாழ வகை ஏற்பட்டது எங்ஙனம்? இவையெல்லாம் மக்கள் செயலால், அவர்தம் முயற்சியால் உண்டாயின என்று கூறி விடலாமா? தான் விரும்பியவாறு ஆக்கவும், அளிக்கவும், அழிக்கவும் ஆற்றல் வாய்ந்த ஒன்றால்-தான் இவையெல்லாம் நடைபெறுவனவாகும் என்பதைத் தொன்று தொட்ட தமிழ் மக்கள் தெளிய உணர்ந்திருந்தனர். அவர்கள் வழியில் வந்த தொல்காப்பியர், அவ்வுணர்வில் பெரிதும் உறுதி கொண்டவர். ஏனைய நிலங்களில், விரும்பியதை விரும்பியவாறு மக்கள் பெறல் இயலாது; மருத நிலத்தில் பெறலாம்; தம் முயற்சியோடு இறைவனிடம் நம்பிக்கையும் அன்பும் உடையவர் விரும்பிய அனைத்தும் பெறலாம்; முயற்சிமட்டும் உடையவர், மெய்வருத்தக் கூலி பெறலாம்; பெறு

மலும் போகலாம். எனவே, அன்புடையவர் விரும்பியதை விரும்பியவாறு அளிக்கவல்ல அதனை 'வேந்தன்' என்று அழைத்தனர். 'வெம்மை வேண்டல்' (உரி., 36) என்பது தொல்காப்பிய மன்றோ! குறிஞ்சியில், சேயோனாகவும், முல்லையில் மாயோனாகவும் உறையும் அதுவே, மருதத்தில் வேந்தனாக உறைந்து, தன்னை அன்புடன் நினைந்து, வாழ்த்தி வணங்குவோர் விரும்பியதை விரும்பியாங்கு நல்குவதாம் என்பதைத் தெற்றென உணர்ந்த தொல்காப்பியர், ''வேந்தன் மேய தீம்புனல் உலகம்'' என்று பாராட்டுவா ராயினர்.

மருதத்தில் பழங்குடிகளாகத் தங்கிச் சிலகாலம் வாழ்ந்த பின்னர், எந்தக் கடல் பொங்கிக் கரைபுரண்டு உலகை மூடியதோ, அந்தக் கடல், கரை கடவாது நிற்கும் காட்சியைக் காணத் தொல்காப்பியரும் பிறரும் அவாக்கொள்ளுதல் இயல்பே யாகும். கடற்கரையை அடைந்து அலைமோதும் கடலை அவர்கள் கண்டு களித்தனர். கடற்கரை யெல்லாம் வார் (நீண்ட) மணற் பரப்பு! கடலில் அலைமோதுகிறது; ஆனால், கரை கடவாது அடுக்கடுக்காக எழுந்தோங்கி வந்து மீளும் அலைகள் இப்போது கண்ணிற்கு நல்விருந்தாகின்றன. கடல் வண்ணம் கண்கொளாக் காட்சியாக நெஞ்சை யள்ளுகின்றது. குறிஞ்சி மலை முகட்டில் கண்ட செக்கரும் (செந்நிறமும்) ஒருவகை வண்ணமே. காட்டில் (முல்லையில்) கண்ட மாமையும் (கறுப்பும்) ஒருவகை வண்ணமே. கடல் வண்ணம், நீல வண்ணம். ஆனால், செக்கரும், மாமையும் அச்சமூட்டும் வண்ணங்கள். ''கறுப்பும் சிவப்பும் வெகுளிப் பொருள்'' (உரி., 74) என்பதும், ''நிறத்துரு உணர்த்தற்கும் உரிய வென்ப'' (உரி., 75) என்பதும் தொல்காப்பியம். ஆனால், கடல் வண்ணம் களிப்பூட்டும் வண்ணம். கடல், கொந்தளித்துக் கரைபுரண்டு எழுங்கால் அழிவு செய்வதே யெனினும், கரை கடவாது அடங்கி நிற்கும்போது ஆக்கம் அளிப்பதேயாகும். அதனின் றன்றோ அமிழ்தாய மழை தோன்றி உலகுயிர்களைப் புரப்பது! அதன் ஆக்கத்தை நினைக்கும்போது மட்டற்ற மகிழ்ச்சியால் உள்ளம் நெகிழ்ச்சியடைகின்றது. அதன் அழிவை நினைக்கும்போதும் எல்லையில்லா இரக்கத்தால் உள்ளம் நெகிழ்ச்சி யடைகின்றது. நெய்ப்பை உண்டாக்கும் இம்முறைமை பற்றியே கடலும் கடல்சார்ந்த இடமும் நெய்தல் எனப்பட்டது போலும்! ஆக்கத்தினும் அழிவே நினைவைவிட் டகலாது நிற்குமாதலால், இரக்கமே நெய்தல் நிலத்தின் உரிப்பொருளானது போலும்! தொல்காப்பியர் கடற்கரை ஓரமாகவே நடந்துசென்று, கடல் வண்ணத்தைக் கண்டு களித்திருப்பர். கண்ணுக்கெட்டிய தொலைவெல்லாம் ஒரே நீலவண்ணம்! நீண்ட கரையோரமாக சென்றுகொண்டேயிருந்ததால் அதன் முடிவிடம் இன்னதென்று அறிந்து தெளியக் கூடவில்லை. வார்ந்து (நீண்டு) சென்றுகொண்டேயிருக்கிறது கரை. வார்ந்து கண்கொளாக் காட்சியாக இலங்குகின்றது கடல் வண்ணம். கடலால் ஆக்கமும் அழிவும் மக்களுடைய வினையைப் பொறுத்தே நிகழ்வனவாகும். அங்ஙனம் ஆக்க அழிவுகளைச் செய்து உறையும் ஆற்றலுடைய ஒன்று, கடலை இடமாகக் கொண்டு விளங்குவதைத் தொல்காப்பியர் உணர்வாரானார். வார் வண்ணத்தோடு இலங்கும் அதனை வார்வண்ணன் என்று அவர் பாராட்டினர். வார்வண்ணன் தொன்றுதொட்டு மக்களால் அறியப்பட்டவனே. கடலும் கடல் சார்ந்த இடமும் தம் உறைவிடமாகக் கொண்டு வாழும் மக்கள், வார்வண்ணனையே தம் பேச்சுவழக்கில் வார்ணன் என்

றும், வருணன் என்றும் வழங்கிய வழக்குத் தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே இலக்கியத்தில் இடம் பெற்றுவிட்டதெனலாம். அதனை அறிந்திருந்த தொல்காப்பியர் கடலுறை தெய்வத்தை, ''வருணன் மேய பெருமணல் உலகம்'' என்று நெய்தல் நிலத்தோடு இயைபுபடுத்திப் பாராட்டுவா ராயினர்.

எழுத்துக்களோ, அசைகளோ கெட்டுப் பேச்சு வழக்கில் வழங்கும் தொடர்களை இலக்கியத்தில் போற்றிக்கொள்வது பண்டுதொட்டு வந்த மரபேயாகும். அருமருந்தன்ன என்பதை அருமந்தஎன்றும், சோழன் நாடு என்பதனைச் சோணாடு என்றும் இலக்கியம் போற்றியிருத்தலை அறியாதார் யார்? இக்காலத்து மொழிஇயல் வல்லுநரும், இங்ஙனம் இடையில் அசை முதலியன கெட்டு வழங்கும் வழக்கு உலகில் எல்லா மொழிகளுக்கும் உரிமையானதே என்று கூறுவது ஈண்டு நினைவு கூர்தற்கு உரியது. இனி, வர்ணம் என்ற வடசொல்லே தமிழில் வருணம் என்றும் வண்ணம் என்றும் திரிந்து வழங்குவதாம் எனவும், வருண: என்ற வட சொல்லே ஈண்டு வருணன் என்று தொல்காப்பியரால் குறிக்கப்பட்டதெனவும் சிலர் கருதுவர். ''வண்ணச் சினைச் சொல்,'' (கிளவி., 26) எனவும், ''வண்ணம் பசந்து புலம்புறு காலை'' (பொருள்., 8) எனவும் வரும் இடங்களில் வண்ணம் என்பதை நிறப் பண்பாகவே தொல்காப்பியர் குறித்திருத்தலாலும், ''பாஅ வண்ணம்,'' (செய்., 211) முதலிய இருபது வண்ணங்களைக் குறிக்குமிடத்தில் வண்ணம் என்பது இசைப் பண்பை உணர்த்துவதாலும், வண்ணம் என்பதைத் தமிழ்ச் சொல் என்றே தொன்று தொட்ட தமிழர் கொண்டிருந்தனர் என்பது விளங்கும். பண்டு, அழிவு செய்ததை நினைந்து நெய்ப்புடன், இரக்கத்துடன், வாருணனை நோக்கி, இனி ஒருநாளும் அங்ஙனம் அழிவு செய்யாதிருக்க வேண்டும் என்று அவனை வேண்டியிருப்பர் தொல்காப்பியர் என்பது கூறாமலே அமையும்.

> சிந்தனை என்பது விருப்பக் கற்பனையே ஆகும். மேலும், நம் ஆசைகள், அச்சங்கள், பேரவாக்கள் அல்லது அறியத் துடிக்கும் ஆர்வங்கள் நம் கவனத்தை ஈர்க்கும்பொழுதே நாம் சிந்திக்க இயலும்.
>
> — ஜி. பி. ஷா.

கடலும் கடல் சார்ந்த இடமுமாகிய பெருமணலுலகத்தைக் கண்ட பின், வெள்ளத்திலிருந்து தப்பி உய்வதற்கு இடமாயிருந்த மைவரை உலகமாகிய மலையும் மலை சார்ந்த இடத்தையும் மீண்டு சென்று கண்டு ஆண்டெழுந்து காட்சியளித்த சேயோனாகிய சிவனைப் போற்றவேண்டும் என்றும், மலைமுகட்டிவிருந்து இழிந்து,காடும் காடுசார்ந்த இடமும் உறைவிடமாகக் கொண்டு முல்லைக் கொடிவீட்டில் வாழ்ந்து இனிதிருந்த போது ஆண்டெழுந்து காட்சியளித்த மாயோனைப் போற்ற வேண்டும் என்றும், தொல்காப்பியர், தமிழர் வழித்தம் நன்றி மறவாப் பண்பாட்டினால் எண்ணியிருப்பர் எனலாம். அங்ஙனம் மீண்டு வந்து கண்டபோது குறிஞ்சியிலும், முல்லையிலும் சில பகுதிகள் பகலவன் கொடுமையால் வறண்டு தம் நல் இயல்பிழந்து நடுங்கு துயர் உண்டாக்கித் தொல்காப்பியரைத் துடி துடிக்கச் செய்து நின்றன எனலாம். குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் என்ற நான்கு நிலங்கள் போன்று தன்னையும் ஒரு நிலமாக, ஒரு பாலாக, ஒரு பகுதியாகக் கொள்ளுமாறு, இயற்கை முல்லைகுறிஞ்சிகட்கும், மருத நெய்தல்கட்கும் நடுவண்

அமைந்த அந் நிலப்பகுதியை 'நடு வணது' (அகத்., 2) எனவும்,'பாலை' (புறத்., 18) எனவும் தொல்காப்பியர் அழைப்பா ராயினர்.

குறிஞ்சி, குறிஞ்சியாகவே இருப்பது இயற்கை; முல்லை, முல்லையாகவே இருப்பது இயற்கை; மருதம், மருதமாகவே இருப்பது இயற்கை; நெய்தல், நெய்தலாகவே இருப்பது இயற்கை; ஞாயிறு தோன்றுவதும் மறைவதும் இயற்கை; புல், பசுமையாக இருப்பது இயற்கை. இயற்கைக்கு வேருக, அதனைச் செயற்படுத்தற்கு ஒரு பொருள், ஒரு தெய்வம் தேவையில்லை என்பர் இயற்கை வாதிகள். அவ்வாருயின் இயற்கைக் குறிஞ்சியையும், இயற்கை முல்லையையும் பாலையாகத் திரித்தது யார்? தாமே அங்ஙனம் திரிந்தனவெனின், அவை இயற்கைப் பொருள்கள் எனப்படா. எனவே, இயற்கையைத் திரித்துக் கொற்றங் கொள்ளும் கொற்றவை என்னும் தெய்வத்தால் தான், பாலை என்பதொரு நிலம் அமைந்தது; அதனுல், இயற்கைப் பொருள்கட்கு வேருக, அவற்றைத் தன் ஆணையின் வழி நடத்தும் ஒரு தெய்வம் உண்டு என்று தொல்காப்பியர் ஈண்டு நமக்கு உணர்த்தப் புகுந்தனர் எனலாம். பாலையாகத் திரிந்து நின்ற குறிஞ்சியும் முல்லையும், பின்பொரு கால் தம் முன்னைய நிலையை எய்தினும் எய்தலாம். எனவே, குறிஞ்சிக்கும் முல்லைக்கும், அவை திரிந்த இடத்தும் முறையே சேயோனும் மாயோனுமே தெய்வமாவர் எனலாம். என்ருலும், இயற்கையைக் கொன்று, கொற்றம் கொண்டு, அதனைத் தனிநிலமாக்கி ஆணைநடத்தும் ஆற்றலும், இயற்கைக்கு அப்பாற்பட்ட கடவுளினதே என்பதை விளங்க உணர்த்துமாறு, பாலைக்குக் கொற்றவையைத் தெய்வமெனத் தொல்காப்பியர் கொண்டனர் எனலாம். மாயோனிடமும் சேயோனிடமும் ஒடுங்கியிருந்து, ஒரொருகால் வெளிப்பட்டு, மீண்டும் அவர்களிடத்து ஒடுங்கும் இயல்பினது அஃது என்றுணர்ந்த பிற்காலத்தவர், சிவபெருமானின் ஒரு பங்குறையும் வெற்றித் திருவாம் கொற்றவை (துர்க்கை) என்றும், மாயோனின் வெற்றித் திருவாம் கொற்றவை (விஜயலட்சுமி) என்றும் அத் தெய்வத்தைக் கொண்டனர் எனலாம். எல்லாம் அழிந்தும் தான் முழுதும் அழியாது நிற்கும் குறிஞ்சித் தெய்வமான சேயோன் (சிவன்) இடத்திலிருந்தே மீண்டும் அனைத்தும் தோன்றுவனவாம் என்பதே உண்மையாம் என்பார், அவனிடத்திலேயே கொற்றவை ஒடுங்கித் தோன்றும் எனல் வேண்டு மென்று கூறுவாராளுல், கொற்றவையைச் சிவனுக்கே ஒரு கூரும் மனைவியாக்கி, மாயோனுக்குத் தங்கையாக உறவு முறைகற்பித் தமைதிகொள்ளுமாறு விட்டுவிடலாம். முருகன் என்னும் சேயோன், சிவனுக்கு வேரும் என்பார், சிவனுக்கும் கொற்றவைக்கும் பிறந்த மைந்தனே அம் முருகன் என்று அவ் வண்ணம் உறவு முறை கற்பித்து அமைதி கொள்ளுமாறும் விடலாம். மாயோன், சேயோன், வேந்தன், வருணன் என்பார்க்கு வேருகக் கொற்றவையைத் தொல்காப்பியர் பாலைநிலத்திற்குத் தெய்மாகக் கொண்டுள்ளார் என்பதைக் 'கொற்றவை நிலை' (புறத்., 4)என்ற மேற்கோள் தெளிவுறுத்தும். வறண்டு கரடுமுரடான நிலமெல்லாம் பாலை எனப்படும். அவ்வழியே, தம் கடமையை மேற்கொண்டு செல்வதற்கு முற்படும் வெட்சிமறவர் தமக்குக் கொற்றம் கொடுக்குமாறு அக் கொற்றவைக்குப் பரவுக்கடன் கொடுக்குங்கால் அவளது நிலைமை கூறுதலே கொற்றவை நிலை எனப்படும்.

(தொடரும்)

களை ஒட்டவைக்கவும் இதை உப யோகிக்க முடியும்.

உருக்கு இயந்திர பாகத்தில் முக் கோண வடிவில் துளையிட வேண்டிய வேலை ஒரு தொழிலாளிக்குக் கொடுக்கப்பட் டிருப்பதாக வைத் துக் கொள்வோம். முன்பெல்லாம் இந்த வேலையைச் செய்வதற்குப் பல மணி நேரம் ஆகும். ஏனெனில், தொழிலாளி முதலில் சிறிய துளை போட வேண்டும், பின்னர் அரவை இயந்திரங்களின் உதவியினாலோ அல்லது வெறும் கைகளாலோ அந் தத் துளையை முக்கோணமாக விரி வாக்க வேண்டும். ஆனால், இப் போது இந்த வேலையைச் செய்ய சில நிமிடங்களே பிடிக்கின்றன.

"கேளா ஒலி"

மிகை அதிர்வு ஒலியைப் பயன் படுத்தியதின் விளைவாக உலோக யியல் நிபுணர்களால் தேனிரும்பின் நீடித்து உழைக்கும் தன்மையை கணிசமான அளவு அதிகரிக்க முடிந் துள்ளது. புது விதமான உலோகக் கலவைகளையும் அவர்களால் உண் டாக்க முடிந்துள்ளது. மிகை அதிர்வு ஒலியின் உதவி யில்லாமல் அவர்கள் இவற்றை உற்பத்தி செய் திருக்க முடியாது. உற்பத்தி செய் யப்பட்ட சாமான்களின் தரத்தை சோதிப்பதற்காக இந்தக் "கேளா ஒலி" பல ஆண்டுகளாகவே பயன் படுத்தப்பட்டு வருகிறது. உலோக

மிகை அதிர்வு ஒலியின் ஆற்றலி னால் முக்கோண வடிவமுள்ள ஒரு இயந்திரக் கருவி உயர் அதிர்வுடன் இயங்கி, வெண்ணெயைச் சூடான கத்தி வெட்டுவதுபோலச், சுலபமாக உருக்கை வெட்டிவிடுகிறது. மிகை அதிர்வு ஒலியின் உதவியுடன் துளை யிடுவதும், கடினமான உலோகக் கலவைகளால் செய்யப்பட்ட இயந் திர பாகங்களைச் செதுக்குவதும், பீங்கானையும் கண்ணாடியையும், வைரங்களையும் கூட நறுக்குவதும் சாத்தியமாகும். "ஒலியில்லா ஒலி" யினால் செதில்களையும் அழுக்கையும் துப்புரவாக நீக்க முடியும். வேறு முறைகளில் ஒட்ட வைக்க முடியாத அலுமினியம் போன்ற உலோகங்

பாகங்களுக்குள்ளும், உலோக இணைப்புகளிலும் இருக்கும் ஊனங் களை "கேளா ஒலி" சுட்டிக் காட்டு கிறது. சோவியத் தொழில்துறையின் சகல பிரிவுகளும் மிகை அதிர்வு ஒலியைப் பயன்படுத்தி வருகின்றன எனலாம்.

சோவியத் நாட்டில் 15 யூனியன் குடியரசுகளிலு முள்ள தொழிற் கூடங்கள், பொருளாதாரக் கவுன் சில்கள், ஆராய்ச்சிக் கேந்திரங்கள், டிசைன் அலுவலகங்கள் முதலிய வற்றின் 1,600 பிரதிநிதிகளுடைய மாநாடு கடந்த நவம்பர் 22-ஆம் தேதியன்று மாஸ்கோவில் நடை பெற்றது, தொழில்துறையில்

ரஷ்யச் செய்தித்துறை.

மிகை அதிர்வு ஒலியைப் பயன் படுத்துவதுபற்றி விவாதிக்கக் கூடிய மாநாடு இது.

மிகை அதிர்வு ஒலியின் ஆற்றலைத் தொழில் துறையில் உபயோகப்படுத்தினல் உழைப்பின் உற்பத்தித் திறனை அதிகரிக்கலா மென்றும், உற்பத்திப் பொருள்களின் தரத்தை மேம்படுத்த முடியு மென்றும் மாநாட்டைத் துவக்கி வைத்த அரசாங்க விஞ்ஞான தொழில் நுட்பக் கமிட்டியின் துணைத் தலைவர் திரு. ஜி. அலெக்செங்கோ குறிப்பிட்டார்.

நுண்கிருமிகளை அழித்தல்

ஒலிக் கருவி இயங்கத் தொடங்குகிறது. மிக மெல்லிய ஒலி அரிதாகக் கேட்கிறது. பிஜோகுவார்ட்ஸ் தகடு மிக வேகமாக அதிர்வதால் ஏற்படும் ஒலி அது. தகடு மேலும் வேகமாக அதிர்கிறது. இதனல் ஏற்பட்ட மிகை அதிர்வு ஒலி குறிப்பிட்ட பொருளின்மீது தாக்குகிறது. இத்தகைய மிகை அதிர்வு ஒலியை குறிப்பிட்ட அளவுகளில் உபயோகப் படுத்துவதின் மூலம் நோய் உண்டாக்கும் நுண் கிருமிகளையும், வைரஸ்களையும், பாசில்லஸ்களையும், பூஞ்சைகளையும் ஒழித்துவிட முடியும். பட்டுப் புழுக்களுக்குத் தொத்து நோய் பரவிவிட்டால் பட்டுத் தொழிலே நசிந்துப் போகும். பட்டுப் புழுக்களின் முட்டைகளின் மூலமாகவே இந்த நோய் பரவுகிறது. மிகை அதிர்வு ஒலிக்கு அவற்றை உட்படுத்துவதன் மூலம் இந்த நோய்க் கிருமிகளை ஒழித்துவிட முடிகிறது.

விதைகளை மேம்படுத்த

விதைப்பதற்கு முன்பு கோதுமை, மக்காச்சோளம் முதலிய தானியங்களையும், செர்ரி, பினம், முந்திரி முதலிய பழ விதைகளையும் மிகை அதிர்வு ஒலிக்கு உட்படுத்தினல் நல்ல பலன்கள் கிடைக்கின்றன. விதைகளின் மேல்தோல் தளர்ச்சியடைந்து சுலபமாக முளை விடுவதற்கும் உதவி செய்கிறது.

''ஒலியியல் கருவிகளை விரிவாகப் பயன்படுத்தும் துறையில் எங்களுடைய ஆய்வுக்கூடம் விஞ்ஞானிகளுடனும் விவசாய நிபுணர்களுடனும் சேர்ந்து பணியாற்றி வருகிறது'' என்று பண்ணை வேலைகளை இயந்திர மயப்படுத்துவதற்கும், மின்சார மயப்படுத்துவதற்குமான ஜார்ஜிய நிறுவனத்தைச் சேர்ந்த கே. திடேபுலிட்ஜே கூறினர். "இதனல் எலுமிச்சை மரங்கள் பட்டுப்போகும்படி செய்யும் நோயை எதிர்த்துப் போராடி நல்ல பலன்களைப் பெற முடிந் துள்ளது. மிகை அதிர்வு ஒலிக்கு உட்படுத்தப்பட்ட திராட்சைச் சாறு புளித்து விரைவில் பக்குவமடைகிறது' என்பதும் சோதனைகளி லிருந்து தெளிவாகியிருக்கிறது.''

பட்டுப் புழுக்களுக்கு ஏற்படும் தொத்து நோயைத் தடுப்பதற்கான சிறியதொரு ஒலியியல் சாதனத்தை மேற்கூறிய ஜார்ஜிய நிறுவனம் தயாரித் திருக்கிறது. விரைவில் இந்தச் சாதனம் அதிக அளவில் உற்பத்தி செய்யப்படும். வேறு விதமான ஒலியியல் சாதனங்களுக்கும் கூட தற்சமயம் டிசைன் திட்டங்கள் தீட்டப்பட்டு வருகின்றன.

கவிஞரின் இளம் பருவம்

கவிஞரும் ஐன்ஸ்டீனும்

தாகூரின் நூற்றுண்டு விழா நினைவாகப்
புதியதாக வெளியிட்டுள்ள
அஞ்சல் தலையின் படம்





தாகூர் உருவச் சிலைக்கு அமெரிக்கச்
சிறுவன் மாலையிடும் காட்சி

— இந்திய அரசியல் செய்தித்துறை

இந்திய நாடு இன்று கவிஞர் பெருமான் தாகூர் அவர்களின் நூற்றாண்டு விழாவை உளம் மகிழ்ந்து கொண்டாடுகிறது. உலகினர் அனைவரும் இதில் உவகையோடு கலந்து கொள்கின்றார்கள். நாம் பாடிவருகின்ற நாட்டுப் பாடலைப் பாடிய பாவாணர் தாகூர் அவர்களேயாம். நம்முடைய நாட்டின் பல்வேறு மக்கள் வாழும் பகுதிகளின் இன்பப் பெயர்களையும், ஆறுகளின் இனிமையையும், மலைகளின் பெருமையினையும் நாம் என்றும் மறவாது எண்ணிச் செருக்குமாறு பாடி, ''வெல்க வெல்க'' என்று அப் பாடலின் வழியே என்றும் நம்மை ஊக்குவித்து வருகின்றார் — வருவார். சாவாப் பெருவாழ்வு பெற்றவர் அக் கவிஞர் பெருமான். ''ஜன கன மன'' என்று பாடிச் செருக்கி நிற்பது நம் சிறுவர்களுக்கும் இன்று வழக்கமாகிவிட்டது.

ஆனால், வீண் ஆரவார நாட்டுப் பற்று உலகினை அழித்துப் போர்க்களமாக்கி மக்களை மாக்களாக மாற்றிக் கேடே விளைவிக்கின்றது என்பது நம் கவிஞர் பெருமானின் நம்பிக்கை. உலகிற்கு வழிகாட்டியாக ஆன்மீகத் துறையிலும் சிறந்து விளங்கித் தொண்டாற்றும் தூய நாட்டு அன்பினையே அவர் வாழ்த்தினர். கீழே கிடப்பவரெல்லாம் மக்கட் சமுதாயத்தின் உயர்வெலாம் பெற்று, வாழ வேண்டும் என விரும்பிய அவருடைய உட்கிடைக்கு ஏற்பக் கீழே தள்ளப் பெற்ற இந்தியாவும் மேலோங்க வேண்டுமென்று விரும்பினர். இந்தியாவின் மீது இவ்வாறு பரிவு காட்டிய அவர் உள்ளம் உலக நாடுகள் அனைத்தின் மேலும் பரிவு காட்டியது. இவ்வாறு பரிவதற்குக் காரணமாய் இருந்த அடக்குமுறை, சுரண்டற் கொள்கை, போராட்டம், எந்திரக் கொள்ளை, பகட்டு நாகரிகம் முதலியவற்றை அவர் உள்ளம் வெறுத்து ஒதுக்கியது. இவற்றையெல்லாம் பண்பாடெனக் கொள்ள மறுத்தது; அன்பு, அறம் என்ற ஆன்மீயக் கொள்கைகளை வற்புறுத்தி ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்று பாடியது. நாட்டுப் பாடல் பாடிய அப் பெருமகனே உலகப் பாடல்களும் பாடுவது இந்த வகையில் எளிதாயிற்று. இதுதானே இந்த நாட்டின் பழம் பெருமை! ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்று பாடினர் பூங்குன்றனர். "யாதானும் நாடாமால் ஊராமால்" என்று பாடினர் வள்ளுவனர். "அப்

பாலும் அடிசார்ந்தார் அடியார்க்கும் அடியேன்'' என்று அண்டம் முழுவதையுமே கடவுட் குடும்பமாகக் கண்டு அந்தத் தொண்டர் குலத்தை வழிபட்டார் நம்பி ஆரூரர். இஃதே எங்கும் நிறைந்த ''அருட் பெருஞ்சோதி தனிப்பெருங் கருணை'' என ஆன்மநேய ஒருமைப் பாட்டில் மலரும் சமரச சன்மார்க்கத்தைப் பாடினுர் இராமலிங்க அடிகள். உலகப் பொது மனிதனுக வாழ்வதே இந்நாடு கண்ட பெருவாழ்வு. இத்தகைய உலகக் குடும்பத்தைச் சேர்ந்தவரே நம் கவிஞர் பெருமான்.

இந்த உண்மையை இவர் பேசினுர் – பாடினுர் – பரப்பினுர்......... இவ்வாறு எண்ணுவது இந்த நாளில் எளிது. ஆனுல், தாம் எண்ணிய எண்ணத்தை உலகம் ஒப்புக்கொள்ளுமாறு செய்வது அருமையிலும் அருமை. அவ்வாறு செயற்கரிய செய்த பெரியார் கவிஞர் பெருமான். உலகம் முழுவதும் இவரை வரவேற்றது; விருந்தளித்தது; புகழ்ந்து பாராட்டியது. அறிஞர் உலகமே இவ்வாறு இவரைச் சுற்றி ஒருங்கு திரண்டது. உலகம் முழுவதிலும் அறிஞர்–அறிவில்லாதவர், செல்வர்–வறியர், ஆண்கள்–பெண்கள், இளைஞர்–முதியோர் எல்லோரும் இவரைக் கண்டு இவருடைய ஆன்மாவின் குரலாம் பாடலைக் கேட்டு இன்பமுற ஓடோடியும் வந்தனர். உலகப் பெருமகன் என்று ஒருவரைக் கூறவேண்டுமாஞல் நம் கவிஞர் பெருமானைத்தான் கூறவேண்டும். சிறந்த பண்பாட்டின் விளக்கமாக எத்தனை முறை உலகைச் சுற்றி வந்தார். எத்தனை முறை மக்கள் உள்ளத்தைக் கவர்ந்தார்! நம்பவும் முடியாத வியப்பினும் பெரிய வியப்பு இது. முதல் உலகப் போரில் புழுங்கிய உலகம், இவருடைய கடவுள் அமைதி நிறைந்த இன்ப அன்புப் பேச்சினைக் கேட்டுத் தன் மனப்புண்ணெல்லாம் ஆறிக் களித்துக் கூத்தாடியது. ஐயத்திலேயே வாழும் உலகம் மறுபடியும் ஐயத்திற்குள் பாய்ந்து இரண்டாம் உலகப் போரில் சிக்கியது. என்ருலும் இவர் பேச்சைக் கேட்டு, உவகை பூத்து ஒரு மனத்தோடு ஓங்கி ஒருபோது வாழ்ந்து நின்றது என்பதை நாம் மறக்கமுடியாது.

இந்தியா இருபதாவது நூற்ருண்டில் சிறந்தோங்குகிற தென்ருல் தாகூரின் பாடலும், காந்தியடிகளின் தவமும் இதற்கு அடிப்படைக் காரணங்கள் எனலாம். பிறரை வெறுக்காத நாட்டுப்பற்று, இவ்விருவரும் வளர்த்த இந்நாட்டுப் பயிர். இந்த நாட்டுப் பற்று நாட்டின் செல்வ வளர்ச்சியை வற்புறுத்தியதோடு பண்பாட்டின் வளர்ச்சியையே அடிப்படையாகக் கொண்டது. இந்தப் பண்பாடு உலகப் பொதுமையாம் பெருமை கொண்டதேனும், இந்நாட்டின் இயல்புக் கேற்ப இது அமைந்து சிறக்கவேண்டு மென்பதும் அவர்கள் கண்ட கடவுட் காட்சி. அன்பாக உருகும் நாட்டுப் பற்று, எளியவர்க்கு இரங்கும் அருளுள்ளம், அனைவரையும் வாழ்விக்கும் பெருந் தொண்டு, இயற்கையோடியைந்த இறைவாழ்வு இவையெல்லாம் நாட்டு மொழியின் வழியே நாட்டு மக்களிடை யெல்லாம் பரவி நாட்டு மொழிக் கல்வி விளக்கமாக ஓங்குவ தொன்றே இந்நாடு உய்வதற்கேற்ற ஒரு பெருந் தனிவழியென இவ்விரு பெருமக்களும் தம் வாழ்வின் நற்செய்தியாக வெளியிட்டு வந்தனர்.

தாய்மொழி வழியேதான் கல்வி அமையவேண்டும் என்பதனை இவ்விரு பெருமக்களும் வற்புறுத்தினுலும் உலகமனைத்தும் ஒரு குடும்பம் என்ற அடிப்படையில் ஆன்மீயத்தையும் பண்பாட்டையும் வளர்க்கும் கல்வியே வேண்டுமெனவும் வற்

புறுத்தி வந்தனர்." எல்லாரும், எல்லா மொழியையும், எல்லாப் பொருளேயும் கற்றுத் தலைசிறந்து விளங்க முடியாது. ஆனுல், எந்தக் கல்வியிலும், எந்தத் துறையிலும் வெறுப்பின்றி விருப்பத்தோடு ஈடுபட்டுக் கற்கும் உள்ளமே மக்கள் இயல்பின் சிறப்பு நிலையாகும். அதற்கேற்பப் பல்கலைக் கழகங்கள், உலகப் பொதுநிலையங்களாக அமைதல் வேண்டும். அங்கே மக்கட் சிறப்பினை விளக்கும் எல்லாக் கலைகளும், எல்லா மொழிகளும் கற்பதற்கு ஏற்ற வாய்ப்புகள் அமைய வேண்டும். இயற்கையோடியைந்த சூழ்நிலையில் அவரவர்கள் அவரவர்கட்கு விருப்பமான துறையில் ஈடுபட்டு அறிவும், அன்பும், அழகும், உண்மையும், தொண்டும் சிறந்தோங்கும் வகையில் இக்கல்வி முறையெல்லாம் அமைதல் வேண்டும். இத்தகையதொரு பல்கலைக் கழகத்தை "விசுவ பாரதி" என்ற பெயரில் கவிஞர் பெருமான் அமைத்தார். அங்கேயே ஆசிரியராகவும் உழைத்தார். மாணவர்களோடு மாணவராய் ஒருங்கிருந்து வாழ்ந்து மாணவர்களோடு பாடியும், ஆடியும், ஓவியம் எழுதியும், காவியம் புனைந்தும், இயற்கையில் ஈடுபட்டும், கடவுளை வழிபட்டும், தாமும் வாழ்ந்து பிறரையும் வாழ்வித்து வந்தார். அவருடைய தந்தையார், சாந்திநிகேதனத்தில் அமைக்க விரும்பிய கடவுட் கோயில் கடவுட் கலைக்கோயிலாக வளர்ந்தது. உலகப் பொது மனிதராகிய கவிஞர் பெருமான் இவ்வாறு தாம் கண்ட உலக ஒருமைக் கனவுகளை யெல்லாம் நனவாக்கினுர். முதுமையிலும் உழைத்தார். கவிஞரைக் குருதேவர் என்று போற்றிய காந்தியடிகள், இந்த உலக நிலையம் ஓங்குவது இந்தியாவின் கடமை என்று வற்புறுத்தினுர். முதுமையில் கவிஞர் இதற்கெனப் பணம் திரட்டுவதற்காக அலையாதபடி, காந்தியடிகளின் மாணவர்

தாகூரின் பொன்மொழிகள்

பாலையின் மணற்பரப்பு கண்ணைப் பறிக்கும் வகையில் பளிச்சிடுகிறது; ஆனுல், பலன் எதிர்பார்க்கக்கூடிய கரிசல் நிலத்திலேயே நான் விதை விதைக்க விரும்புகிறேன்.

*

உலகில் எத்தனை வகையான அழகுகள் நிறைந்து கிடக்கின்றன— ஆனுல், எவ்வளவு எளிதில் அவை அத்தனையும் அழிந்து படுகின்றன!

*

காதல் ஒரு தான்தோன்றி! அரண்மனைகளில் சிறந்து விளங்கும் பல்வண்ணப் பூத் தொட்டிகளை விட, பாதையோரங்களில் உள்ள தூசிலேயே சிறந்த மலர்களை, மலர வைக்கின்றது.

ஒருவரே நன்கொடை வழங்கினுர். "விசுவபாரதி" என்ற இந்த அனைத்துலகப் பல்கலைக் கழகம் இந்தியாவின் தனிப் பெரும்பேருக விளங்குகிறது. இந்தியத் துரைத்தனமும் இதனைக் கண்ணும் கருத்துமாகப் போற்றி வளர்த்து வருகிறது.

இத்தகைய அனைத்துலகப் பொது மகனுகிய கவிஞர் பெருமான், தாம் கண்ட உயரிய கருத்துக்களை யெல்லாம் எல்லோர் உள்ளத்தையும் தொடும் கவிதைகளாகப் பாடியுள்ளார். சின்னஞ்சிறு பொழுதி

லிருந்தே சொல்லினிமையிலும், பொருளழகிலும் ஈடுபட்ட நம் கவிஞர் நூற்றுயிரக் கணக்கான செய்யுளடிகளை எழுதியெழுதிப் பழகித் தம்மையும் உலகையும் கடவுளழகில் ஈடுபடுத்தியவர். எங்கும் கடவுளைக் காணும் கண்ணை அப் பாடல்கள் வழியே நாமும் பெறலாம். அவர் பழங்காலத்தை வெறுத்தவரும் அல்லர் — அதற்கு அடிமையானவரும் அல்லர். புதுமையில் விருப்பம் கொண்டவரேனும் அதற்கும் அவர் அடிமையானவர் அல்லர். தம் நெஞ்சறிந்ததைப் பொய்யாது எடுத்துக் கூறும் துணிவு பெற்றவர். அயல் நாடுகள் சென்றபோதும் அவை தந்த விருந்தில் மயங்கியவர் அல்லர். அவ்வவர்களிடத்தே யுள்ள குற்றம் குறைகளைத் துணிவோடு ஒளிவு மறைவின்றி ஆனல், வெறுப்பின்றி அன்போடு எடுத்துரைத்து வந்தார். அது பற்றி அவரை வெறுத்தவர்களும் உண்டு. மேனுட்டுப் பண்பாட்டில் நம்பிக்கை கொண்டவராஞலும், அதன் ஆரவார எந்திரப் பண்பாட்டினைக் கடிந்தே பேசியுள்ளார். ''சர்'' பட்டம் அந்நாளையத் துரைத்தனத்திடம் பெற்றிருந்தும், ஜாலியன்வாலாப் படுகொலைக்குப் பின்பு அதனை உதறித் தள்ளினர். காந்தியடிகளிடம் எல்லையற்ற அன்பு கொண்டிருந்தாலும், கட்டவும் துணியற்றுக் கிடக்கும் இந்திய நாட்டில் பிறநாட்டுத் துணிகளை மனமார எரியிட்டுக் கொளுத்துவது என்ற கருத்தை வெறுத்ததோடு மிகக் கடுமையாக ஆனல், இனிமையாக மறுத்துரைத்தார். இவ்வாறு உண்மை என்ற கடவுளையே, இயற்கை என்ற கோயிலுக்குள் கண்டு எதற்கும் அஞ்சாது வழிபட்டு வந்தார்.

ஆதலின் அவருடைய பாடல்கள் உயரப் பறக்கும் உள்ளத்தில் பூத்து மலர்ந்தவை. அழகு நிறைந்த ஒளி மலர்கள்; அவரோர் இசைவாணருமாதலின் அவை தலைசிறந்த இசைப் பாடல்களாகவும், இனிமை கொழிப்பவை. இத்தகைய பெருமையை எல்லாம் கண்ட உலகம் இவருடைய குறிக்கோள் இலக்கியத்தைப் போற்றி இவரது ஐம்பதாம் ஆண்டிலேயே நோபெல் பரிசு வழங்கியது. இந்த இலக்கிய நெறியிலும் புத்தம் புது நெறி கண்டார். பழைய வைணவ வங்காளப் பாக்களென்றே உலகம் மருண்டு நம்புமாறு பாடத்தக்க பேராற்றல் படைத்திருந்தும் தம் காலத்து மக்கள் உயிர்த் துடிப்புடன் பேசும் பேச்சுமொழி வங்காளத்திலேயே எழுதி அதனல் மக்களைத் தட்டியெழுப்பித் தம்முடன் கொண்டு சென்றார்.

இவர் கண்ட உண்மையை யெல்லாம் தமிழ்நாடும் காணும் வாய்ப்புப் பெற்றது. பலமுறை தமிழ் நாட்டைச் சுற்றி வந்தார். இளைஞருலகம் அவர் செந்நெறியைக் கண்டு அவருடைய பாட்டுலகில் மூழ்கியது. அவர் பாடிய பாடல்கள் தமிழில் வெளி வரலாயின. கவிமணி அவர்கள் இந்த வகையில் சிறந்த தொண்டாற்றினர். அவருடைய உரை நடை நூல்களும், கதைகளும், இன்னும் சிறந்த வகையில் தமிழில் வந்து உலவுதல் வேண்டும். பாரதியாரும் தாகூரோடேயே போட்டி போட்டு உயரும் வகையில் பாடவேண்டுமென்று ஊக்கம் பெற்று எழுந்த கதை யாவரும் அறிந்ததே. உலக மொழிகளி லெல்லாம் வழங்கும் அவருடைய நூல்கள் தமிழ் மொழியிலும் வெளிவருதல் வேண்டும். தமிழுள்ளத்தில் ஆழப்பதிதல் வேண்டும். அவருடலம் மறைந்தது. ஆனல், என்றும் மறையாத அவருடைய புகழுடம்பாக அவர் தந்த இலக்கியச் செல்வம் என்றும் மறையாது நம்மை வாழ்விப்பதாக!

"**கரிகாலன் கட்டிய கல்லணை இன்னும் கரையாமல் இருக்கின்றது; ஆனால், அதன் மீது அண்மைக் காலத்தில் எடுக்கப்பட்ட கைப்பிடிச் சுவர் பல முறை இடிந்துபோய்க் கட்டப்பட் டிருக்கின்றது**" என்ற ஒரு செய்தியைத் திருச்சிக்கு அருகில் காவிரியின் குறுக்கே கிடக்கும் கல்லணையைக் கண்டு திரும்புகின்றவர்களெல்லோரும் ஒரு நகைச்சுவைப் பொருளாகச் சொல்லி மகிழ்கின்றனர்! இவர்களுடைய நகைச்சுவையை நாம் கெடுக்க விரும்பவில்லை; ஆனாலும், பழங்காலத்து நினைவுச் சின்னமாக நிற்கும் கட்டடங்கள் போல இக்காலத்தில் நாம் எழுப்பும் கட்டடங்கள் நீண்ட காலம் நீடித்தல் இயலாது என்ற கருத்தை அவர்கள் பரப்புவதுதான் **உண்மைக்குப் புறம்பானது** என்று நாம் சொல்ல விரும்புகின்றோம்!

கல்லும் சிமிட்டியும்

பழங்காலத்தில் கருங்கல் துண்டங்களைக்கொண்டு கட்டடங்களைக் கட்டினார்கள். இன்றோ நாம் **சிமிட்டியைக்** (Cement) கொண்டு கட்டுகின்றோம். பழங்காலக் கற்களுக்கு நேரானதாக இன்றைய சிமிட்டியைக் கொள்ளலாமா? அல்லது, அந்தக் கற்களைக் காட்டிலும் இன்றைய சிமிட்டி விரைவில் உறுதி குலையக்கூடியது என்று பேசுவதில் ஏதேனும் உண்மை இருக்கின்றதா? ஏறத்தாழ ஒன்றரை நூற்றாண்டிற்கு முன்னர் சிமிட்டி கண்டுபிடிக்கப்பட்ட பொழுது, மக்கள் அதன்மீது பெரும் நம்பிக்கை கொண்டிருந்தனர். அதனைச் **செயற்கைக் கல்** (artificial stone) என்றும், பழங்காலத்து இயற்கைக் கல்லுக்குப் போட்டியாக மனிதனால் கண்டுபிடிக்கப்பட்டது என்றும் புகழ்ந்து பேசினர். இது கண்டுபிடிக்கப் படுவதற்குக் காரணமாக இருந்தவருள் ஒருவர் இதனைப் "**போர்த்து லாந்து சிமிட்டி**" (Portland cement) என்றும் பெயரிட்டு அழைத்தார். இங்கிலாந்தின் தென்பகுதியிலுள்ள போர்த்து லாந்து என்னுமிடத்தில் வெட்டி எடுக்கப்படும் கற்கள் போன்றே இந்தச் சிமிட்டியும் உறுதியுடையதாக இருக்கும் என்பது அவர் கொள்கை!

நம்பிக்கை தளர்ந்தது!

ஆனால், இவ்வகை நம்பிக்கைகளெல்லாம் விரைவில் ஏமாற்றமாக மாறிவிட்டன. சிமிட்டியானது எஃகுக் கம்பி கொடுத்து **வலியூட்டப் பெற்ற காரையாகப்** (reinforced concrete) பயன் படுத்தப்படும் இன்

றைய நிலையில் பல சிறப்பியல்பு களைப் பெற்று இக்காலத்துப் பொறி யியலார் செய்யும் வியத்தகு செயல் கட்கெல்லாம் இடங்கொடுக்கின்றது என்பது உண்மையாக இருந்தாலும், **இரசாயனப் பொருள்**களின் (chemical agents) தாக்குதல் ஏற்படும்போது அதனை எதிர்த்து நிற்கும் ஆற்றல் அதற்கு அவ்வளவாக இல்லை என்பது பல சூழ்நிலைகளில் வெளிப்படத் தொடங்கியது. பிரான்சு நாட்டின் வேனே (Vannes) என்ற நகரிலே *1913*-ஆம் ஆண்டில் நடந்த ஒரு நிகழ்ச்சி சிமிட்டிபற்றி மக்கள் கொண்டிருந்த நம்பிக்கையைத் தகர்த்தது. அந் நகரத்தின், காரைகளால் அமைக்கப்பட் டிருந்த மாபெரும் நீர்க்குழாய்கள் எவரும் எதிர்பார்க்காத வகையில் கரையத் தொடங்கியது! இந் நிகழ்ச்சி தூய நீருக்கு, சிறப்பாகக் **கருங்கல்** (Granite) பகுதியில் உள்ள நீருக்குச் சிமிட்டியை அரிக்கும் இயல்பு உண்டு என்பதனை நிறுவியது.

குறைகள் நீக்கப்பட்டன

இந்த நிகழ்ச்சியைத் தொடர்ந்து மேலும் பல உண்மைகள் சிமிட்டியின் குறையினை வெளிப்படுத்தின. அதனுல், அறிஞர்கள் பல ஆராய்ச்சிகளைத் தொடர்ந்து நடத்திப் பல சுவையான உண்மைகளைக் கண்டறிந்தனர். அதன் விளைவாக கண்ணை மூடிக்கொண்டு சிமிட்டிக் காரையைப் பயன்படுத்துவதைப் பொறியியல் வல்லுநர்கள் கைவிட்டனர்! எத்தகைய சூழ்நிலையில் எத்தகைய இரசாயனப் பொருள்களுக்கு இடையிலே அதனைப் பயன்படுத்தலாம் என்பதனை மிகுந்த எச்சரிக்கையுடன் வரையறை செய்து கொண்டனர். ஆனுல், இவ்வாறு செய்த ஆராய்ச்சிகளையும் முடிவுகளையும் வைத்துக் கொண்டு இன்று சிமிட்டிக் காரையால் நாம் 'கட்டும் கட்டடங்களும் பழங்கால நினைவுச் சின்னங்களைப் போல நீண்ட ஆயுளைப் பெற்று நிற்கும் என்று நாம் எதிர்பார்ப்பது தவருகும். இதற்கு, மக்கள் கற்பனை செய்துகொண்டது போன்று, **இக்காலக் கட்டடக் கலை நுட்ப முறையைக் காரணமாகக் கூறமுடியாது**. நம் காலத்துக் கட்டடங்களின் ஆயுட் குறைவிற்கு முற்றிலும் வேறுபட்ட அடிப்படைகள்தாம் காரணமாக அமைந்திருக்கின்றன.

இரண்டு உண்மைகள்

பழங்கால நினைவுச் சின்னங்களின் ஆயுளைப் புகழ்ந்து பேசுகின்றவர்கள் இரண்டு உண்மைகளை உணர்ந்தாக வேண்டும். முதலாவதாகப் பழங் காலத்தில் கட்டிய கட்டடங்கள் யாவும் இன்று அழியாமல் நிற்கின்றன என்று யாரும் சொல்லிவிட முடியாது. கட்டப்பட்டவற்றுள் மிகச் சிலவே இன்று அழிவுக்குத் தப்பி எஞ்சி நிற்கின்றன. அழிந்தவற்றுள் பல மனிதன் கைகளாலேயே அழிந்தும் இருக்கலாம். இருந்தாலும், அங்குமிங்குமாக நிற்கும் சில கட்டடங்களை வைத்துக்கொண்டு அன்றைய கட்டடக் கலைமுறை இன்றைய கட்டட முறையைவிட உறுதியானது என்று முடிவு செய்வது பொருந்தாது. ஏனெனில், **பழங்கால நினைவுச் சின்னங்களில் பெரும்பகுதி காலவெள்ளத்தால் தளர்ந்து இயற்கையான முடிவைத்தான் எய்தியிருக்கின்றன!**

இரண்டாவதாக, இன்றைய தொழில் நுட்ப, பொருளாதாரச் சூழ்நிலையில் பார்க்கும்போது, நமக்குக் கிடைத்திருக்கும் **சிமிட்டிக் காரையினையும், பழங்காலக் கருங்கற்களையும் ஒப்பிட்டுப் பேசுவதே தவருனதொரு போக்காகும்**. ஏனென்ருல், இரண்டும் இருவேறு சூழலில், இருவேறு நோக்கத்துடன் விரும்பிப் பயன்படுத்தப்படுகின்றன.

பெரிய கோவிலும் சட்டசபை மன்றமும்

எடுத்துக்காட்டாகத் தஞ்சைப் **பெரிய கோவிலைச்** சென்னையில் அண்மையில் கட்டிய **சட்டசபை மன்றத்துடனே**, அல்லது சிதம்பரம் **ஆயிரக்கால் மன்றத்தை** எட்டயபுரத்தில் சில ஆண்டுகட்கு முன்னர் கட்டிய **பாரதி மணி மன்றத்து**டனே ஒப்பிடுவதாக வைத்துக்கொள்வோம்! இப் புதிய கட்டடங்களை நேரில் காணும் எவரும் இவை தஞ்சைப் பெரிய கோவில் போன்று ஆயிரம் ஆண்டுக்காலமோ அல்லது சிதம்பரம் ஆயிரக்கால் மன்றம் போன்று எண்ணூறு ஆண்டுக் காலமோ நீடித்து நிற்கும் என்று சொல்லமாட்டார்கள்! ஆனல், இந்த ஆயுட்குறைவுக்குக் காரணம் இன்றைய கட்டடக் கலையின் திறமைக் குறைவோ சிமிட்டியின் உறுதிக் குறைவோ அல்ல. **மனிதனது அடிப்படை நோக்கம் மாறுபட்டது தான் அதற்குக் காரணமாகும்!** கோவில் கோபுரங்களிலும், ஆயிரக் கால் மன்றங்களிலும் காணப்படும் கற்சுவர்களையும், இடை வெளி அதிகம் விடாது நிறுத்தியிருக்கும் தூண்களையும், பெருங்கற்களாலாகிய உத்திரங்களையும், மேலே அடுக்கி அமைக்கப்படும் கனமான கற் கூரையினையும் மனத்துட் கொண்டு பார்த்தால், அங்குக் குறிப்பிட்ட அளவு நிலப் பரப்பில் அளவுகடந்த நிலையில் **கட்டிப் பொருள்** (Solid structure) அமைப்பே இடம் பெற்று இருத்தலை உணரலாம். ஆனல், இன்றைய சட்டசபைக் கூடங்களிலும், மணி மன்றங்களிலும், அதே விகித நிலப்பரப்பின் மீது கட்டப்பட்ட அமைப்பிலே கட்டிப்பொருள் மிக மிகக் குறைவு! நிறைந்த தூண்களும், நெருங்கிய உத்திரங்களும் இல்லாத நிலையில் கட்டடம் முழுவதும் கூடான அமைப்பினைக் (hollow structure) கொண்டிருக்கின்றது. குறைந்த அளவு சிமிட்டிக் காரையைப் பயன்படுத்தி மிகுந்த இடத்தைக் கொள்ளளவாகப் பெறும் நோக்கமே இங்குச் சிறப்பிடம் பெறுகிறது! மனிதனுக்கு வேண்டியது இடம்! எனவே, சுவர்களும் தூண்களும் மிகவும் மெலிந்து விடுகின்றன; கூரையோ வெய்யிலையும் மழையையும் மறைக்கும் வெறும் தகடாக மாறிவிடுகின்றது! இந்த நிலையில் பழங்கால நினைவுச் சின்னத்துடன் இன்றைய கட்டடத்தை ஒப்பிடுவது **ஒரு கட்டியான கல்லுருண்டையுடன் கவிழ்த்து வைத்ததொரு முட்டை யோட்டினை ஒப்பிட முயல்வதை ஒக்கும்!** கல்லுருண்டையினும் முட்டையோடு விரைந்து சிதைந்து விடுவதில் வியப்பதற்கு என்ன இருக்கின்றது?

சிமிட்டியாலும் கட்டலாம்!

இனி, இன்று நாம் கையாளும் சிமிட்டியையும் காரையையும் கொண்டு தஞ்சைப் பெரிய கோவில் போன்றோ, அல்லது எகிப்திய பிரமிட்டுகள் போன்றோ கட்டினல் (இன்று நாம் வைத்திருக்கின்ற கருவிகளை வைத்துக்கொண்டு, இருபது ஆண்டுகளில் கட்டிய எகிப்துப் பெரும் பிரமிட்டை ஐந்தே ஆண்டுகளில் கட்டி முடித்து விடலாம்; நான்கு ஆண்டில் முடிந்த தஞ்சைக் கோவில் இன்று ஒரே ஆண்டில் முற்றுப் பெற்றுவிடும்). **அவை பழங் காலக் கட்டடங்கள் போன்றே காலத்தை வென்று நிற்கும் என்பதில் யாருக்கும் ஐயம் வேண்டுவதில்லை.** ஏனென்றல், சிமிட்டிக் காரையும் கல்லைப் போன்றே உடைக்க முடியாத உறுதியினைப் பெற்றுள்ளது. நெடுங் காலத்திற்கு முன்னரே ரோமானியர்கள் சிமிட்டியைக் கொண்டு கட்டடங்களை எழுப்பியிருக்கின்றனர். அவை சுற்றிலும் உள்ள கருங்கற் கட்டடங்கட்கு

எந்த வகையிலும் தாழாமல் உறுதியுடன் நின்றுகொண்டிருக்கின்றன. ஆனால், ஏனோ, அந்தச் சிமிட்டியின் கலவை முறை இடைக்காலத்துக் கட்டடக் கலைஞர்களால் திரும்பவும் காணமுடியாமல் போயிற்று! சுண்ணாம்பினையும் எரிமலையின் ஒருவகைச் சாம்பலையும் கலந்து அதனை அவர்கள் செய்தனர் என்று நாம் கருதலாம்.

> உரிமைகளை நல்குவதைவிட கட்டுப்பாட்டை வற்புறுத்துவதே மதத்தின் முக்கியப் பண்பாகும். தனி மனிதனிடமிருந்து எத்தனைத் தியாகங்களை ஒரு மதம் வலிந்து பெறுகின்றதோ அதிலிருந்தே அம் மதத்தின் மதிப்பு நிலைப்படுத்தப்படும்.
>
> —ஃப்ரெடிரிக் ஏமைல்.

கல்லினும் மேலானது சிமிட்டி!

இன்று சிமிட்டியிடம் உள்ள குறை, அது இரசாயன தாக்குதலைச் சிறந்த வகையில் எதிர்த்து நிற்கவில்லை என்பதே யாகும். பல பொருள்களால் சிமிட்டி காலப் போக்கில் எளிதில் அரிக்கப்பட்டு விடுகின்றது. (இதற்குக் கருங்கல் மட்டும் விதிவிலக்கு என்று யாரும் எண்ணிவிட வேண்டாம்; இரசாயனத் தாக்குதல் நடைபெற வாய்ப்பில்லாத இடங்களில் உள்ள கற்கட்டடங்கள் தாம் இன்றுவரை அழியாமல் இருக்கின்றன!) இருந்தாலும் இந்தக் குறைபாட்டை நீக்குவதும் கடினமான ஒரு செயலன்று. சூழ்நிலைக்கு ஏற்ற வகையில் வெவ்வேறு தன்மையுள்ள சிமிட்டியைக் கொண்டு வெவ்வேறு வகைக் காரையை உற்பத்தி செய்து கொள்ளலாம். அலுமினியப் பொருள்கள் அதிகமாகக் கலந்துள்ள சிமிட்டி தூய நீரின் அரிப்பினை நன்கு எதிர்த்து நிற்கின்றது. கந்தகச் சார்புள்ள சிமிட்டியோ உப்பு நீராலும் அரிக்கப்படுவ தில்லை. எனவே, கட்டடம் கட்டுவதற்குக் கிடைக்கும் எவ்வகை கற்களுக்கும் இணையான ஒன்றாகச் சிமிட்டியைக் கொள்ளலாம் என்றாலும், சிமிட்டி முற்றிலும் மாறுபட்ட ஒரு சூழ்நிலையில் பயன்படுத்தப்படுகிறது என்பதைத் தான் நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். கற்களை அடுக்கி எழுப்பிய பழம் பெருங் கோவில்களும் ஆயிரக் கால் மன்றங்களும் பெரிய நீண்ட காலத் திட்டத்தில் பொருட் செலவு பற்றிய எண்ணமே இல்லாமல் தொடங்கப் பட்டனவாகும். வெளிநாட்டிலிருந்து கொண்டு வந்த உடல் கட்டுள்ள ஆயிரக் கணக்கான அடிமைகளை ஆள் வைத்து அடக்குவதை விட வேலை கொடுத்து அடக்குவது எளிதாக இருக்கும் என்ற ஒரு கொள்கையால் அன்று பிரமிட்டுக்களும் பெருங் கோபுரங்களும் எழுந்தன! ஆனால், இதற்கு முற்றிலும் மாறான நிலையில் இன்று நம் சமூக, பொருள் நிலைகள் இருப்பதால், பொறியியல் அறிஞர்கள் முன் கூட்டியே செலவினங்களைக் கணித்துக் கொண்டுதான் எதனையும் தொடங்க வேண்டிய நிலையில் இருக்கின்றார்கள்! சிமிட்டியின் சிறப்பியல்புகளை யெல்லாம் பயன் படுத்திக் குறைந்த அளவு காரையினைக் கொண்டு நிறைந்த அளவு நலத்தைப் பெறுவதே அவர்கள் நோக்கம்.

காரையினுள் வைக்கப்படும் எஃகுக் கம்பிகள் துருப்பிடித்து, அவற்றை மூடியிருக்கும் காரைப் பகுதியிலும் விரிசலை ஏற்படுத்துவதால் சில கட்டடங்கள் குறைந்த ஆயுட் காலத்திலேயே ஒடிந்து வீழ்ந்து அழிகின்றனவே என்று சிலர் கேட்கலாம். இதுவும் தடுக்க முடி

யாத குறையன்று. தகுதியான சிமிட்டியைப் பயன்படுத்தாத இடத்தும், சரியான விகிதத்தில் காரை கலக்கப்படாத இடத்தும், போதுமான அளவு ஆழத்திற்குக் கம்பிகள் காரையில் மூழ்காத இடத்துமே இத்தகைய கேடுகள் நிகழ்கின்றன. ஆனால், இங்கும் பொருளாதாரக் காரணங்கள் தாம் நாம் கட்டும் கட்டடங்களின் ஆயுளை முடிவு செய்கின்றன! விரும்பினால், உப்புநீர் ஓயாது வந்து மோதும் கடற்கரைப் பகுதிகளில் கூடக் காலத்தை வென்று நிற்கும் வகையில் எஃகுக் கம்பிகளையும் சிமிட்டியையும் கொண்டு கட்டடங்களை எழுப்பலாம்; **எல்லாம் நாம் செலவழிக்க இருக்கும் பணத்தையே பொறுத்திருக்கின்றன!**

> பொறாமை என்னும் பொல்லாப் பண்பை எவனொருவன் தன் மனத்திலிருந்து வேருடன் களைந்தெறிகின்றானோ, அவனே இரவிலும் பகலிலும் மன அமைதியை இடையறாது துய்க்க இயலும்.
>
> — தம்ம பதம்.

நமது நோக்கம்

இன்றைய சட்டசபைக் கூடங்களையும் மணி மன்றங்களையும் கட்டுகின்றவர்கள் முடியுடை மூவேந்தரல்லர்; எகிப்து நாட்டுப் பரோக்களும் (Pharaohs) அல்லர்! இவர்கட்குத் தாங்கள் கட்டும் கட்டடங்கள் என்றும் இந்த உலகில் தங்கட்கு நினைவுச் சின்னமாக நிற்கவேண்டும் என்ற ஆசையும் இல்லை! இவர்கள் நோக்கமெல்லாம், தாங்கள் செலவழித்த சிறு தொகையில் எழுந்த கட்டடங்கள் நூறு, அல்லது மிகுதியாகப் போனால் இருநூறு ஆண்டுகள் வரையில் இருந்தால் போதும் என்பதே யாகும்! நகரங்கள் மக்களின் தேவைக் கேற்ப மாறிக் கொண்டே செல்கின்றன. நகரங்களின் அமைப்பு பற்றிய கொள்கை முறைகளும் என்றும் ஒரே தன்மையில் இருப்பது மில்லை. எனவே, **அறுபது ஆண்டுக் காலத்திற்குள் பயன்படாமல் போகும் ஒரு கட்டடத்தை என்றும் நீடித்திருக்கும் வகையில் ஏன் கட்டிவைக்க வேண்டும்?**

நிறையா? குறையா?

போக்கு வரத்திற்குப் பயன்படாது பழுது பட்டுவிட்ட ஒரு பழைய காலத்துப் பாலம் வெடி குண்டாலும் தகர்க்க முடியாத அளவிற்குத் திண்மை பெற்றிருந்ததைக் கண்ட ஒரு நண்பர் ''இதுதான் பழங்காலக் கட்டடங்களின் சிறப்பு'' என்று பாராட்டினார். பாலம் இடிக்கப்படுவதை மேற்பார்வையிட்டுக் கொண்டிருந்த பொறியியலார் உடனே நண்பர் பக்கம் திரும்பி ''இதுதான் பழங்காலக் கட்டடங்களில் காணப்படும் ஒரு குறை'' என்றார்! **ஆம்! கட்டடம் இருந்தால் பயன்படும் நிலையில் இருத்தல் வேண்டும். பயன்படாவிட்டால் எளிதில் மறைந்துவிட வேண்டும்.** தானாகவும் இடியாமல், இடிக்கவும் முடியாமல் இடத்தை அடைத்துக்கொண்டு ஒருவகைப் பயனுமில்லாமல் நிற்கும் நினைவுச் சின்னங்களாக நம் கட்டடங்கள் எதிர்காலத்தில் இருக்கவேண்டுமா? **மலையை உடைத்துக்கொண்டு வந்து காவிரியைத் தூர்த்துக் கரிகாலன் கட்டிய கல்லணை இன்றும் கரையாமல் இருக்கலாம். ஆனால், அதனை எந்த நேரத்திலும் மனிதன் விரிவுபடுத்தி மாற்றியமைக்க வேண்டிய கட்டம் வந்தே தீரும்! இந்த நிலையில், கருங்கல்லோடும், கரிகாலனோடும் போட்டி போட்டுக்கொண்டு கைப்பிடிச் சுவருக்கும் அழியா நிலை கொடுத்துக் கட்ட வேண்டு மென்பது தேவையில்லையன்றோ?** ●

நமது பரம்பரையில் தோன்றிய பல மனோசக்திகளையுடைய கவிஞர் இரவீந்திரநாதர், மனித சமயம் (Humanism) என்ற ஒரு மதத்தில் நம்பிக்கை கொண்டவர். தீர்க்கதரிசியான (Saint) இவரது தந்தையார் மஹாரிஷி தேவேந்திர நாத் தாகூர் இந்துவாகப் பிறந்திருப்பினும் இந்து மத வைதீக விக்கிரக வழிபாட்டில் அதிருப்தி கொண்டு, பரம்பரைப் பழக்கத்திற்கும் நம்பிக்கைக்கும் மாறாக 'தத்துவ ரஞ்சனி' என்ற மதக்குழுவை நிறுவினர். இத்தத்துவ ரஞ்சினி என்ற குழுவே பின்னால் ''தத்துவ போதினி சபா'' என மாறி விட்டது. தேவேந்திர நாத் தாகூர் அவர்கள் 1843-ஆம் ஆண்டினிலே 'பிரம்மோயிச'த்தைப் பின்பற்றுவதாகத் தீர்மானித்தார் இப் 'பிரம்மோயிச'த்தின் தத்துவங்கள் யாதெனில் 1. ஆதியில் பிரம்மன் ஒருவனே அவதரித்திருந்தார்; நம்மைச் சுற்றி நாம் காண்பவைகளும் பார்ப்பவைகளும் அவனால் படைக்கப் பட்டவைகளே. 2. அவர் ஆதி அந்த மில்லாத எல்லையற்ற, எல்லாமறிந்த ஏக மூர்த்தி, அவர் எங்கும் நிறைந்தவர், எல்லாம் வல்லவர். பரிபூர்ணமானவர் அவரே குணக்குன்று. அவர் யாருடனும் எவற்றினுடனும் ஒப்பிடமுடியாதவர். 3. அவர் நாமத்தைத் தியானிப்பதன் மூலம் இம்மையிலும், மறுமையிலும் பயன் பல பெறலாம். பேரின்ப மடையலாம். 4. அவரைப் பரவச மூட்டும் திருப்பணிகளைச் செய்வதில்தான் பிரார்த்தனை அமைந்திருக்கின்றது.

இரவீந்திரர் 'பிரம்மோயிச' சூழ்நிலையில் வளர்க்கப்பட்டவர். வளர வளர அவர் பிரம்மோ ''இச''த்தின் முக்கியத்துவம் பரம்பொருளை அடையவேண்டும் என்ற அவாவில்தான் இருக்கிறது என்பதை உணர்ந்து கொண்டார். மனிதன் தற்போதைய சிறிய நிலையில் திருப்தி கொள்ளவில்லை. அவன் எல்லையற்ற வரை அடைய விரும்புகின்றான். உண்மையான பேரின்பம் பரம்பொருளிடம்தான் இருக்கிறது என்று உணர்கிறான்.

1884-ஆம் ஆண்டு இவரது தந்தையால் நிறுவப்பட்ட ஆதி பிரம்மோ சமாஜத்தின் செயலாளராயினர். எனவே, இவர் புதிய மதக் கொள்கையை வைதீக இந்துக்களின் தாக்குதலி லிருந்து காப்பாற்ற வேண்டியதாயிற்று. இவர் விக்கிரகக் கொள்கையைச் செயற்கை முறையென்று கூறி ஆர்வத்துடன் அதை எதிர்த்து சமர் செய்தார் 'ஷாகார் ஓ நிராகர்' (Sakar O Nirakar) என்ற கட்டுரையில் தன் கருத்தை நிரூபிக்கத் தக்க எடுத்துக் காட்டுகளுடன் விவரிக்கின்றார். மனிதனது கற்பனையைக் கிளருவதற்காகவே விக்கிரகங்களும் வடிவங்களும் (images) நிறுவப்பட்டன. ஆனால், நம்

ருவனத்தை இவ் வடிவங்களில் ஒருமு கப்படுத்திஞல் நாளடைவில் இவ் வடிவங்கள் எதற்காக உண்டாக்கப் பட்டனவோ அக் காரணத்தையும் கடந்து, இவைகளே முக்கியத்துவம் அடைந்து விடுவதைப் பார்த்து நாம் வருந்தவேண்டி யிருக்கின்றது. உருவங்கள் கருவிகளாக எடுத்துக் கொள்ள வேண்டியவைகள். ஆனல், உருவ வழிப்பாட்டில் நாம் ஒரு முறை இறங்கிவிட்டால் அதிலிருந்து நம்மால் மீள முடியாது. உருவங்கள் நமது கற்பனையை இயக்குவதற்கே. ஆனல், ஆதி அந்த மற்ற கடவுள் ஒரு வெறும் கற்பனைப் பொருளல்ல அவரை நாம் நேரிடையாக அடைய முடியும். அவர் நம்மால் அறிந்துகொள்ளக் கூடியவர். சேர்க்கை வழியான கற்பனையின் மூலம் அவரை அறிய நாம் ஏன் சிரமப்படவேண்டும்?

கவிஞரின் வாழ்விலே அன்னரது ஐம்பதாம் ஆண்டு அளவில் ஒரு மாறுதல் ஏற்பட்டது. இந்தக் கட்டத்தில் ஒரு குறிப்பிட்ட "பிரம்மோயிசம்" என்ற மதத்தைத் தீவிரமாக பின்பற்றுபவராக அவர் நமக்குக் காணப்படவில்லை. இவருடைய மனம் பல கருத்துக்களை இணைப்பதில் (Synthesis) ஆர்வம் காட்டியது. பிரம்மோயிசத்தின் நற் கருத்துக்களுடன் இந்து மதத்தின் சிறந்த கருத்துக்களைத் தேர்ந்தெடுத்து அவைகளை இணைத்து ஒன்று படுத்துவதில் இவர் இப்பொழுது தம் கருத்தைச் செலுத்துகிருர். பிரம்மோயிசமே தன் பரந்த நோக்கத்தின் மூலம் இந்து மதத்தின் சிலக் கருத்துக்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இந்த கூட்டுக் கருத்துக்களின் மீதுள்ள நம்பிக்கை கவியின் தற்காலிக எண்ணமாகத் தெரிகின்றது. பிரம்மோயிசத்துக்கும், இந்து மதத்திற்கும் கூட்டுச் சமயத்திற்கும் மேம்பட்டு உயர்ந்து நோக்குகின்ருர். தற்போது இவருடைய மனது மனித சமயத்தின் கண்ணேட்டத்தைப் பெறுகின்றது. தர்மப் பிரச்சாரம் என்ற கட்டுரையில் கவிஞர் பிரம்மனை அல்லது மெய்யனை மனிதத் தன்மையால் உணரமுடியும். மனிதத் தன்மையால் மட்டுமே நாம் அவனை அடையலாம், பரவசமூட்டலாம் என விளம்பி யுள்ளார். இவ்வுலகில் நாம் செய்யக்கூடிய செயல்களே பரம்பொருளுக்குச் செய்யும் சீரான பிரார்த்தனை யாகும். நாம் மனிதத் தன்மையையே அதிகம் கவனிக்கிருேம். மனிதத் தன்மையே தெய்வீகத் தன்மையாகும். கடவுளின் மனிதத் தன்மை அல்லது மனிதனின் தெய்வீகத் தன்மை என்ற கருத்து தான் மனித சமயத்தின் மூல வித்தாகும்.

'சோனர்தாரி' (Soner Tari) என்ற கவிதையில் கவி இதே கருத்தைக் குறிப்பிடுகிருர். 'நான் கடவுளுக்குப் படைக்கும் எதையும் மனிதனுக்கும் படைக்கிறேன்; நான் மனிதனுக்குக் கொடுப்பதையே கடவுளுக்கும் கொடுக்கிறேன்; நான் கடவுளை மனிதனக்குகிறேன்; மனிதனைக் கடவுளாக்குகிறேன்.''

மனித சமயம் எந்தக் கோட்பாட்டுக்கும் கொள்கைக்கும் பணிவதில்லை. எந்தக் குழுவையும் கூட்டத்தையும் சார்ந்ததல்ல. இது காலை ஒளியின் நிறைவையும், எளிமை (Simple) யையும் போன்றது. மனித சமயம் மனிதத் தன்மையைப் பெறுகின்றது என்பதை நம்முடைய இருதயத்திலிருந்து பார்ப்பின் அறியலாம். இதன் (முக்கியத்துவம்) நிலையற்ற மனிதரில் மேம்பட்ட மனிதனைக் காண்பதில்தான் அமைகின்றது. என்னுடைய சமயம் மேம்பட்ட மனிதனையும் சாதாரண மனித ஆன்மாவையும் - என்னுள் ஒன்று சேர்ப்பதுதான்'' என்று கவி எழுதுகிருர். இரவீந்திரர் தன்னுடைய தத்துவத்தில் மனிதனுக்கு ஓர் உயர்ந்த

இடத்தை அளித்திருக்கின்றார். உண்மையில்' இவருடைய தத்துவத்தின் மையக் கருத்து - அழியா மனிதனுக்குமிடையே நிகழும் மிக நெருங்கிய அன்புறவாகும். கடவுளை அவர் தன் படைப்பினின்று தனித்து நிற்கும் ஓர் உயிராகக் கருதுவதில்லை. அழியும் உயிரிலும் பொருளிலும் - இவைகளின் மூலமாகவும் கடவுள் தன்னை வெளிப்படுத்திக் காட்டுகின்றார். முடிவுள்ள உயிரும் முடிவுற்ற தேவனும் கலைக்க முடியாத கட்டினால் பிணைக்கப்பட் டிருக்கிறார்கள். ஒன்றின் உண்மை மற்றதில் இருக்கிறது. மனிதன் தன் வாழ்க்கையின் பலனை—பூர்ணத்துவத்தைக் கடவுளிடம் தேடுகின்றான். இறைவன் மக்களின் நட்பைத் தேடுகின்றான். ஏனெனில், அவர் மக்களிடமிருந்து அன்பையையும், மதிப்பையையும் பெறுகின்றார். மனிதனுடைய அன்பிற்காக அவர் கொள்ளும் ஆசை அளவிடற்கரியது.

''ஒவ்வொரு நாளும்
என் இதயத்திலிருந்து
சூரிய உதயத்தை
நீ பெறுகின்றாய்
உன்னுடை அன்பு
என்னுடைய வாழ்க்கை
உருவத்தில் செதுக்கப்பட்டு
இருப்பதைநீ காண்கிறாய்!''

என்று கவிஞர் ''கனிகள் சேகரித்தல்'' என்ற கவிதையில் கூறுகிறார். இறைவனுக்கும் பக்தருக்குமிடையே யுள்ள இடைவிடா அன்பு நாடகம் கவிஞரால் 'ஜீவன் தேவதா' என்ற அவருடைய கருத்தில் விரிவாக விவரிக்கிறார். வாழ்க்கைப் பாதையிலும், மரணப் பாதையிலும் தன்னுடைய கடவுளால் தான் இட்டுச் செல்லப் படுவதாக ஒரு பக்தனைபோல் கவிஞர் உணர்கின்றார். இவ்விருவருக்குமுள்ள உறவு - மிக நெருங்கியது. அது அன்பே யன்றி வேறில்லை.

இரவீந்திர நாதரின் ''மனித சமயம்'' ஒரு கலைஞனின் சமயமும் ஆகும். ''என்னுடைய சமயம்'' குறிப்பாக ஒரு புலவரின் சமயமாகும். இதனுடைய தொடர்பு என்னுடைய இசை உணர்வுபோல மறைவாகவே அடிச்சுவடில்லாத வழியிலேயே என்னிடம் வந்தடைகிறது. என்னுடைய சமய வாழ்க்கை என் புலமை வாழ்வைப் போல அதே வியப்பான (Mysteries) வளர்ச்சி வழியைப் பின் பற்றியது என்று எழுதினார்.

கவிதை, இசை, ஓவியம் இவைகளின் மூலமாகவும் மனித மதிப்பு தெய்வீக மதிப்பை ஒத்தது என்ற உண்மையை வெளியிட் டிருக்கிறார் இரவீந்திரர். ''ஆதியும் அந்தமும் இல்லாத மனிதனுடன்'' ஒன்றி இருக்கின்றன என்று பரிபூர்ண மனிதனைப்பற்றி என்றுமே திட்டவட்டமாகக் கூறியிருக்கின்றார் அவர்.

ஒரு கலைஞன் என்ற முறையில் 'ஆம்' என்ற நிரந்தரத் தன்மையின் மீதுள்ள அவரது நம்பிக்கையை வெளிப்படுத்தி யிருக்கிறார். இவ்வையத்தைச் சூழ்ந்து பரவி வருகின்ற ஓர் இலட்சியத் (ideal) தத்துவமானது வெறும் கற்பனை சக்தியினின்று தோன்றிய சொர்க்கத்தின் கருத்தோ பிரதிபலிப்போ அல்ல. ஆனால், அதுதான் அங்கே எல்லாப் பொருள்களும் வாழ்ந்து வளர்ந்து வருகின்றதோ அந்த அழிவற்ற பரம்பொருளாகும்.

கல்வியின் இருப்பிடமாக விஸ்வ பாரதியை நிறுவியது கவிஞர் 'மனித சமயத்தால்' எப்படி ஆழமாக ஆட்கொள்ளப்பட் டிருந்தார் என்பதையே காட்டுகின்றது! 'இந்திய கலாச்சார மையம்' என்பதில் இவர் எழுதுகிறார். ''ஆக்கவேலைக்கு உணர்வூட்டும் சூழ்நிலையிலேயே கல்வி மிக

முக்கிய அம்சமாக இருக்கவேண்டும். எனவே, நம்முடைய பல்கலைக் கழகத்தின் முதற் காரியம் அறிவின் ஆக்க வேலையாக இருக்கவேண்டும். மனிதர்கள் ஒன்று சேர்க்கப்பட்டு அவர்களுடைய அறிவுக் கூர்மையான ஆராய்ச்சியும் - படைப்பும் - நடைபெற முழு வழிவகைகள் கொடுக்கப்பட வேண்டும். க்றபிக்கும் முறை கலாச்சார ஊற்றிலிருந்து எழும்பி வழிந்தோடும் நீர் போல, தன்னிச்சையாகத் தவிர்க்கமுடியாததாக சாதாரணமாக இருக்கவேண்டும், கல்வியானது வாழ்க்கையை ஒட்டி (நடைமுறை) வளர்கின்ற அறிவின் கனியாக என்று இருக்குமோ அன்று தான் கல்வி இயற்கையானதாகவும் பூரணத்துவமானதாகவும் இருக்கும்.

விஸ்வபாரதியின் சமயத்தைப் பொருத்த வரையில் மனித சமயத்தைத் தவிர, வேறு யாதொரு சமயமும், இங்குப் பின்பற்றப் படமாட்டாதென்பதைத் தெளிவாக்க விரும்புகிறார். இவர் விஸ்வ பாரதியைப் பல தரப் பிரிவினரும் ஒன்று கூடித் தங்களுடைய பேதங்களை மறக்கும் ஒரு புனித இடமாக ஆக்க விரும்புகின்றார். உண்மையின் தத்துவத்தைப் பல வேறு கோணங்களிலிருந்து நோக்கித் தெளிவு கொள்ளுகின்ற மனிதனது மனத்தைப் பற்றி ஆராய்வதும் மனிதப் பண்பாட்டினைத் தெய்வீக நெறிக்கு இட்டுச் செல்லும் மனிதனது நாகரிகத்தை ஆராய்வதும் தான் உலகப் புகழ்பெற்ற இவரது குருகுலத்தின் நோக்கமாகும்.

அருமை நண்பா! வேறுபட்ட தன்மைகளைக் கொண்டுள்ள மக்களைத் தாங்கும் அளவிற்கு இந்த உலகம் பரந்திருக்க வில்லையா? வானத்தில் காட்சி அளிக்கும் எண்ணிறந்த விண்மீன்கள் யாவும் ஒன்றுடன் ஒன்று போட்டியிட்டுத் தம் பெருமையை நிலைநாட்டுவதிலா தம் நாட்டத்தைச் செலுத்துகின்றன? எனவே, ஒவ்வொரு கோட்பாட்டையும் ஒவ்வொரு தனிமனம் தாங்கிக்கொண்டு அமைதியை இழக்காமல் இருக்க இயலாதா?

✱

மக்கள் பெரும் எண்ணிக்கையாகத் திரண்டெழுந்து கூக்குரல் எழுப்புவதால் உண்மை எதுவென்று உறுதி செய்துவிட முடியுமென்று எண்ணுவது அறிவீனமாகும்.

✱

ஒரு பெண்ணின் உண்மையான தொழுகைக்குரியவை, அவளுடைய கணவன், குழந்தைகள் என்ற உருவங்களில் அவளை நாடிச் சென்று அடைந்துவிடுகின்றன.

உள்ளத்தின் உண்மை

டாக்டர். கா. ஏ. சண்முகம், M.A., Ph.D.

1. உளநோய் உடைய இளைஞர்களுக்குக் கலியாணம் செய்து வைத்தால் அவர்களது நோயானது நிவர்த்தியாகி விடும் என்பது சாதாரண நம்பிக்கை. இதில் உண்மை உளதா?

உளநோய் உடையவர்களுக்கு மணம் செய்து வைத்தால் அவர்களது நோய் நிவர்த்தியாகும் என்னும் நம்பிக்கை நமது நாட்டு மக்கள் பலரிடம் இருந்து வருகிறது. இந்த நம்பிக்கையின் காரணமாகப் பல இளைஞர்களுக்கு அவர்கள் பெற்றோர்களும் உறவினர்களும் மணம் செய்து வைக்கின்றனர். அந்த இளைஞர்களது வாழ்க்கை துன்ப வாழ்க்கையாக முடிவதையும் அவர்கள் காண்கிறார்கள்.

மேற்கூறிய நம்பிக்கையின் அடிப்படையான கருத்து, உள நோயைத் தோற்றுவிப்பதற்குக் காம இயல்பூக்கம் மிகவும் முக்கியமாக அமைகிறது என்பதாகும். காம இயல்பூக்கம் ஒருசிலரிடம் மிகவும் வன்மையுடையதாய் உள்ளது. இந்த இயல்பூக்கம் வெளிப்பட்டுப் பூர்த்தி அடைவதற்கான வாய்ப்புக்கள் இல்லாத இளைஞர்கள் சிலர், உடல் நோயை அடைகிறார்கள் என்றும், அதைப் போக்குதற்குரிய வழி அவர்களுக்கு ம்ணம் செய்து வைப்பது ஆகும் என்றும் கருதப்படுகின்றன.

பொதுப்படையாகக் கூறின் இந்த நம்பிக்கையில் உண்மை ஒன்றும் இல்லை என்றே கூறவேண்டும். ஏனெனில், உளநோயானது திடீரெனக் குமரப் பருவத்தில் தோன்றுவது அன்று. உளநோயால் அவதியுறுபவர்களது வாழ்க்கை வரலாற்றை ஆராய்ந்தால் அவர்களது துன்பத்திற்குக் காரணமான அறிகுறிகள் ஓரளவுக்குக் குழந்தைப் பருவத்திலிருந்தே அவர்களிடம் இருந்திருப்பதை அறியலாம். மேலும், இந்நோய்க்கான காரணங்கள் பல உண்டு. சான்றாக உள நோய்களுக்கான அறிகுறிகள் சிலரிடம் மரபுவழியாக அமைவது உண்டு; சிலரிடம் பிரசவத்தின்போது, ஆயுதங்கள் உபயோகப்படுத்தப் படுவதின் காரணமாக எதிர்பாராத விதமாகத் தலையில் காயம் பட்டு மூளை பாதிக்கப் படுவதினால் ஏற்படுவது உண்டு. மற்றும் சிலரிடம் எதிர்பாராத விபத்துக்களினால் மூளைக்குச் சேதம் ஏற்படுவதனால் உண்டாவதும் உண்டு. இன்னும் சிலரிடம் அம்மை வைசூரி போன்ற உடல் நோய்களினால் ஏற்படுவது உண்டு. விடாமல் மது அருந்துபவர் சிலரிடம் உளநோய் ஏற்படுவது உண்டு. இவைகளோடு வாழ்க்கையில் எதிர்பாராத துன்பங்கள் ஏற்பட, இவைகள் காரணமாக உள்ளத்தில் போராட்டம் ஏற்பட்டு அதனால் உளநோய்கள் மனிதர்களிடம் ஏற்படுவது இயற்கை. எனவே, உளநோய்களுக்குப் பல காரணங்கள் இருப்பதை அறிய

லாம். இக் காரணங்களால் உள நோய் பெறும் ஒருவனுக்கு மணம் செய்து வைத்தால், அவன் எவ்வகையில் தன் நோயை நிவர்த்தி செய்ய முடியும் என்பதை உய்த்து உணரலாம்.

டைஃபாய்ட், காலரா, காச நோய் போன்ற உடல் நோயால் அவதி யுறுபவர்களுக்கு மணம் செய்து வைத்தால் அவர்களது நோய் நிவர்த்தியாகும் என்று ஒருவர் கூறினுல், அவரை எவ்வாறு மதிப்பிடுவேமோ, அவ்வாறே நம் பிக்கை யுடையவர்களைக் கொள்ள வேண்டும். உடல் நோய் உடையவர்கள். தம் நோயை முழுதும் நிவர்த்தி செய்துகொண்ட பிறகே தான், அவர்கள் மணம் புரிந்து கொள்ளவேண்டும்,

2. குடும்பத்தில் எவராவது ஒருவருக்குப் பைத்தியம் இருந்தால் அக்குடும்பத்தில் கலியாணத் தொடர்பு வைத்துக் கொள்ளக் கூடாது என்கிருர்கள். இதன் காரண மென்ன? பைத்தியம் தலைமுறையாக வரும் நோயா?

பைத்தியம் என்பது அன்றாட வழக்கில் இருந்து வரும் ஒரு சொல்லாகும். 'சுரம்' எனும் சொல் எவ்வாறு நச்சுக் காய்ச்சல் (Typhoid), முறைக் காய்ச்சல் (Malaria), சளிக் காய்ச்சல் (Influenza) எனப் பலவகையானவைகளைக் குறிக்கிறதோ, அவ்வாறே பைத்தியம் எனும் சொல் உளநோய்களையும் உளக் கோளாறுகளையும் குறிக்கும் பொதுச் சொல்லாகும். உளநோய்கள் சில மரபு வழியாக ஒருவனிடம் ஏற்படுகிறது என்பதில் ஓரளவு உண்மையே உள்ளது. அதாவது மூளையைப் பாதிப்பதற்கான காரணிகள் மரபு வழியாக ஏற்படுகின்றன என்பதாகும். இது சிபிலிஸ் (Syphlis) என்று ஆங்கிலத்தில் கூறப்படும் மேக நோய் காரணமாக ஏற்படும் உள நோய்களுக்கும், பொதுப்படையாக ஸ்கிஸோபிரேனியா எனப்படும் உளநோய்களுக்கும் ஓரளவுக்குப் பொருந்தும். இத்துறையில் ஆராய்ச்சி செய்துள்ளவர்கள் இன மேம்பாட்டு இயல் (Eugenics) அறிஞர்கள் ஆவர். அவர்கள் கருதுவதாவது இரண்டு மூன்று தலைமுறைகளுக்கு முன்பு ஒருவன் குடும்பத்தில் உளநோ யிருந்திருந்தால் பாதக மில்லை என்பதாகும். ஆனுல், உளநோயால் பீடிக்கப்பட்டிருக்கும் தாயை உடையவன், உள நோயால் பீடிக்கப்பட்ட தந்தையை உடைய பெண்ணை மணம் புரிந்து கொண்டால், அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் சில, உளநோய் உடையவைகளாக இருக்கும் என்று அவர்கள் கருதுகிருர்கள். இந்த உண்மை வலிப்பு நோய் (Epilepsy) உடைய குடும்பத்தினர்க்கும் பொருந்தும் என்பது அவர்கள் கருத்தாகும். ஆனுல், இது எதிர்பாராத விபத்துக்களின் காரணமாக மூளைக்குச் சேதம் ஏற்பட்டு அதன் காரணமாக ஏற்படும் உளநோய்களுக்குப் பொருந்தாது. இதோடு, உளக் கோளாறுகள் பலவற்றிற்கும் இந்த உண்மை பொருந்தாது. பிறழ்வான அச்சம், பீதி, கவலை, பிறழ்வான சினம் போன்றவைகள், சமூக வாழ்க்கையின் காரணமாக ஏற்படும் உளப் போராட்டங்கள் காரணமாக ஏற்படுவன முதலியவைகள் மரபு வழியாக அமைவது இல்லை. எனினும், பிறழ்வான மெய்ப்பாட்டு நிலை (Emotional instability) மரபு வழியெனக் கருதப்படுகிறது. உளக் கோளாறுகளை எளிதில் சிகிச்சை செய்யலாம். உளக் கோளாறு குடும்பத்தில் எவராவது ஒருவருக்கு இருந்தால், அக் குடும்பத்தினரோடு தொடர்பு கொள்ளக்கூடாது என்பது இல்லை.

ஞாலவெளிக் கடலோரம் கூடிவிளை யாடும்
கோலமணிச் சிறுவரெலாம் கூத்துநடம் ஆடும்
காலவெள்ளம் அசைக்காத வான்கவிப்பின் கீழே
கடலலைகள் கொந்தளிக்கும் மணற்கரையின் ஓரம்
மொய்க்கவரும் இளைஞரெலாம் கூத்துநடம் ஆடும்
முடிவற்ற உலகமெனும் கடற்கரையின் ஓரம்!

மண்ணளைந்து மாளிகைகள் மணற்கரையில் சமைக்கும்
மகிழ்ந்துவிளை யாடவெற்றுச் சிப்பிகளைச் சேர்க்கும்
காய்ந்துதிர்ந்த சருகுகளால் கப்பல்களும் கட்டும்
கரைகாணக் கடலதிலே மிதக்கவிட்டுப் பார்க்கும்
கோலமணிச் சிறுவர்களின் கூத்துநடம் சேரும்
முடிவற்ற உலகமெனுங் கடற்கரையின் ஓரம்!

முத்தெடுக்கப் பற்பலரும் கைமுதலை விற்றுக்
காசாக்க சிற்சிலரும் கூடுகையில் இவரோ
வெத்துக்கல் விளையாடச் சேகரிப்பர் அங்கே!
நெய்வதற்கும் நீந்துதற்கும் திறமறியாச் சிறுவர்
தேடரிய திரவியங்கள் அதைத்தேட லன்றி
கூடிவலம் வருவதுவோ வாழ்வின் கரையோரம்!

பொங்கியெழும் கடலலைகள் வெண்ணுரைகள் தானோ
புன்னகைத்துக் கரையழைக்கும் மென்சிரிப்புத் தானோ?
மறலிவரும் அடியோசை கடலலையே தானோ
மழலைமொழி தூங்குதற்குத் தாயளிக்கும் பாட்டோ?
கடலலையின் புன்னகையில் மகிழ்ந்துறவு காணும்
கோலமணிச் சிறுவர்எலாம் கூத்துநடம் ஆடும்

முடிவற்ற உலகமெனும் கடற்கரையின் ஓரம்
மொய்க்கவரும் இளைஞரெலாம் கூடிநடம் ஆடும்!
புயல்காற்று கொந்தளிக்கும் கடலலைகள் பொங்கும்
போகின்ற கப்பலினை மூழ்கடிக்கப் பார்க்கும்
சாவென்ற பயமின்றி வாழ்வென்ற கரையில்
கோலமணிச் சிறுவரெலாம் கூடிநடம் ஆடும். — கீதாஞ்சலி (60)



டாக்டர் இரவீந்திரநாத் தாகூர் (1884)



கவி இரவீந்திரர் – தம் மகள் பேலாவோடும்
மகன் இரதீந்திரநாத்துடனும் (1891)

தாகூர் 1934-ல்
பஞ்சாபில் திரு. முகுந்
லால் பூரி அவர்களுடன்

கவிஞர் தாகூர்
1925-ஆம் ஆண்டில்
இத்தாலியில்



டாக்டர் இரவீந்திரநாத் தாகூர்

ஓவியர் குருதேவர்

மூலம்: நந்தலால் போசு

தமிழாக்கம்: **திரு. வீ. இராசமாணிக்கம், M. A.**

குருதேவரது ஓவியங்களில் ஆழ்ந்து திளைக்க வேண்டுமென்று விரும்புகிறவர்கள் ஒரு கருத்தினை நினைவில் நிறுத்தவேண்டும். சமயம், அரசியல், சமூக வாழ்வியல் போன்ற பாடங்களில் தானே சிந்திக்கும் சுய அறிவுடையவராகவும் இலக்கியத் துறையின் வாயிலாக உலகமறிந்த ஒருவராகவும் புகழை நிலைநிறுத்திய பின்னரே குருதேவர் ஓவியக்கலையில் ஈடுபட்டார் என்பதை யறியவேண்டும். அவரது இசைப் பாக்கள் நாட்டுப்புற மக்கள் உள்ளத்தை எல்லாம் கவர்ந்துள்ளன. அதே நேரத்தில் கல்வித் துறையில் அவர் ஆழ்ந்து சிந்தித்துச் சொன்ன திட்டங்களும், துணிவான செய்முறைகளும் உலக முழுவதிலும் பரவியிருந்தன. இவைகள் அனைத்தையும் அவர், ஓவக் கோலையும் (brush) வண்ணப் பலகையையும் தொடுதற்கு முன்னரே பெற்று விளங்கினர்.

'அய்த்தரேய பிராமணம்' என்ற நூலிலே ''ஒரு கலைஞனது தன்னுணர்வு, ஒருமைப்பாடு (rhythm) என்பதனுள், அவனுடைய சொந்த கலை முயற்சியால் மூழ்கிவிடுகிறது'' எனும் ஒரு கருத்து காணப்படுகிறது. குருதேவர் அந்த நிலையை யடைதற்கு எழுபது ஆண்டுகள் கடினமாக உழைத்து, அவர் தலைமுறையில் யாவரையும்விட அந்த ஒருமைப்பாட்டில் மூழ்குவதில் வெற்றி கண்டார்.

செய்யுளுக்குக் கவர்ச்சியைத் தந்து அழகுருவத்தைக் கொடுப்பது எதுவோ, அதுவே சிறு வரிகளுக்கும் வண்ணங்களுக்கும் உயிரூட்டி விடுகிறது. குருதேவர் ஓவக்கோலுடன் விளையாடத் தொடங்கியபோது அவருக்கு வயது எழுபது. அந்த வயதிலும் சாதனைக்குரிய கடினமான உழைப்பையெல்லாம் கடந்து, இலக்கியமும் இசையும் ஒன்றியைந்த துறையில் சித்தியடைந் திருந்தார். அவர், வீதம், தேர்ந்தெடுத்தல் ஆகியவற்றுள் பொதிந்திருந்த மறைவுகளையும், கால அளவு, நிறுத்தம் ஆகியவற்றின் மதிப்பீட்டினையும் கற்றிருந்தார். இப்பாடங்களை அறிந்தாலன்றி எக் கலைஞனும் ஒன்றும் செய்யவியலாது. இவைகள் அத்துறையினர்க்கு இன்றியமையாப் பண்புகளாம். ஓர் ஆங்கிலத் திறனாய்வாளர் ''நேரடியான, தடையற்ற முழுமையான பார்வை'' எனக் குறிப்பிடுவதற்குத் தாழ்ந்ததன்று இது. இந்த முழுமைப் பார்வை

யானது, அவரால் வரையப்பெற்ற அல்லது திட்டப்பெற்ற ஒன்ருல் அவரது உண்மை நிலையைக் காட்டிவிடுகிறது. நடிக்கும் நாடகவாசிரியராம் இரவீந்திரர் இதை வரையறை யின்றிப் பெற்றிருந்தார். இவ்விதம் குருதேவரவர்கள், ஓவியக் கலைஞனுக விளங்குதற்கு முன்னரே ஒருமைப் பாட்டுணர்வு, வீதவுணர்வு, தெளியக் காணும் உணர்வு என்ற இன்றியமையாத முப்பண்புகளையும் ஏற்கெனவே வளர்த்திருந்தார்.

'சடா'வின் முன்னுரையாக அமைந்த செய்யுளைப் படித்தவர்கள் தொடர்பற்ற, நிலையற்ற, குறிக்கோளற்ற எண்ணங்கள் மிதந்து வருவதையும். பின்னர் ஒரு கருத்தானது அவை அனைத்தையும் ஒன்றுபடுத்திச் 'சடா' உருவாக்குவதையும் அறியலாம். இவ்வாறு வேற்று வடிவம் பெற்று வருகிற நிலையில் இணைக்கும் கட்டமானது மிகமிக இன்றியமையாதது. இந்த ஒன்றுகூட்டும் இணைப்புக்கள் இல்லையென்ருல், செய்யுளடிகள் எதுகைச் சுவையற்ற சக்கையாக விளங்கும்.

ஒரு கலை வடிவின் உள்நிலையிலே, ஏதேனும் ஒரு நோக்கத்தையோ, பொருளையோ கண்டுபிடிக்க நீங்கள் எதிர்பார்ப்பீராஞல் கண்டிப்பாக ஏமாற்றமடைவீர். தாஜ்மஹால் என்ற கோபுரம் எந்த ஒரு பொருளையும் அறிவிப்பதில்லை. அஃது ஓர் அழகுப் பொருளாக நிற்கிறது. கருத்தோட்டத்திலும், செயற்பாட்டிலும் கலைஞனுடைய திறமை அதனடிப் படையில் பொருந்தியிராவிட்டால், அஃதொரு சாதாரண கற்கட்டடமாகவே யிருந்திருக்கும். குருதேவரது ஓவியங்களைக் கூர்ந்து ஆராயுங்கால் இதை நினைவில் வைத்துக் கொள்ளுதல் நல்லது.

குருதேவர் இக் கலையில் எப்படி ஈடுபட்டார்? அவர் இளமைப் பருவத்திலேயே படங்கள் வரைய முயற்சி செய்திருக்கிருர். அந்தக் காலத்தில் வரைந்தவை யெல்லாம் எங்கேயோ பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன என்றெண்ணுகிறேன். ஆனல், தீவிரமான ஈடுபாடு எழுபதாவது வயதிலேதான் தொடங்கிற்று. குருதேவர் அவருடைய செய்யுட்களிலே, நீக்கப்பட்ட அல்லது இடையில் சேர்க்கப்பட்ட வரிகளை யெல்லாம், பேனு மையின் தடித்த கோடுகளால் அழிப்பது வழக்கம். இவ்வாறு கோடிட்ட பகுதியெல்லாம் சேர்ந்து அவரது எண்ணத்திலே ஓர் ஒருமைப்பாட்டினையேற்படுத்தும்; அதற்கேற்ப ஓரிரு சிறு கோடுகளால் அங்குமிங்குமாகச் சேர்த்துவிடுவார். பின்னர் அவை யெல்லாம் உருப்பெற்று, மலர் போலும், பறவைபோலும், விலங்கு போலும் காட்சியளிக்கும். மிகத் தூய்மைப்படுத்தப்பட்ட அவருள்ளம், சிறிய அளவோடு அமைதியுருது. அவ்வுள்ளம் அருவருப்பானவற்றை யெல்லாம் – வேண்டாதவற்றின்மேல் கோடிடுகிறபோதும்கூட— வெறுத்தொதுக்கியது. இவ்வண்ணம் சில உருவங்களை யுண்டாக்கும் கருத்துதித்துப் பின்னர் படிப்படியாக வண்ண ஓவியங்களைப் படைக்கும் அளவு வளர்ந்தது.

* * *

ஒருமைப்பாடு என்பது செய்யுளோடு நின்றுவிடுவ தில்லை. கலையும் தனக்கென ஓர் ஒருமைப் பாட்டினைக்கொண்டது. இவ்வொருமைப்பா டின்றிக் கலை நிறைந்த படைப்பு இல்லையாம். ஒரு படத்தில் அழகு வீற்றிருக்கிறது என்று கூறுவதெல்லாம், பல வகைப்பட்ட ஒருமைப்பாடுகளின் இணைப்பே யன்றி வேறில்லை. ஒருமைப்பாடுகள் வேறுபாடுடையன; இவைகள் ஒரு கலைஞனல் இணைக்கப்படுகின்றன.

✻

தாகூர் ஓவியங்கள்

✻









இவ்விணைப்பைப் பொருத்தே அக் கலைஞனுக்கு வெற்றியோ தோல்வியோ ஏற்படுகிறது. அரும்பிவரும் ஒரு மலர் ஒரு குறிப்பிட்ட ஒருமைப் பாட்டோடு இணைக்கப்பட் டிருக்கிறது. அதேபோல் கசங்கிய ஓரிதழ் வேறொன்றுடன் இணைக்கப்பட் டுள்ளது. இவைகள் ஒரு குறிப்பிட்ட ஆற்றலை வெளிப்படுத்தும் நிலையில் ஒன்றாக இணைக்கப்படலாம்; அல்லது தேவைப்படும் சூழ்நிலைக்கேற்பத் தனித்தனியேயும் பயன்படுத்தலாம்.

ஒருமைப்பாடு என்பது தனக்கென வுள்ள ஓர் உயிர்ச் சக்தியைப் பெற்றிருத்தல் வேண்டும். இதுவே இன்றியமையாத ஆற்றல், உயிர்ப்பு நிலை அல்லது 'பிராண சக்தி' ஆகும். குருதேவரது எவ்வகை ஓவியமேயானாலும், அவைகளி லெல்லாம், ஒருமைப்பாடானது செறிந்த ஆற்றல் வாய்ந்த அமைப்பில் இடம் பெற்றிருந்தது. எனவே, இவரது ஓவியங்கட் கருகே வைக்கப்பட்ட அதே காலத்திய பிற ஓவிய வல்லாரது படமெல்லாம் உயிர்த்துடிப்பின்றி வெளிறிக் காணப்பட்டன. அவரது படங்கள் வேறு எவற்றையும் பெற்றில்லாதிருந்தாலும் அவற்றின் வெறும் கலைத் திறனே அவைகட்குப் புகழைப் பெற்றுத் தந்திருக்கும்.

இரவீந்திரர் அவரது வாழ்நாள் முழுவதும் இயற்கையது கூறுகளையும், தன்மைகளையும் கூர்ந்து கவனிக்கும் மாணவனாகவே இருந்தார். அவ்வுருவங்களின் பின்னே மறைந்து கிடந்த புலனுணர்வுக்கப்பாற்பட்ட கருத்துக்களைப் புரிந்துகொள்வது அவர்க்கெளிது. எதையேனும் தீட்ட அவர் அமருவாராயின் அக் கருத்துக்கள் அவர் எண்ணத்தில் உடனே பறந்துவிடும்; அதை மிக விரைவில் அவர் பேனாவும் தாளிலே உருப்படுத்திவிடும். இவரது கலையில், ஒத்திசைதல் நிலையை உண்டாக்கப் புலனுணர்வுக் கப்பாற்பட்ட, உட்பட்ட கருத்துக்கள் எவ்வாறு ஒன்றுகூட்டப் படுகின்றன என்பதற்கு நிறைந்த சான்றுகள் உள்ளன. ஒவ்வொரு வளைவு நெளிவிலும் ஓவியவல்லானின் கைவண்ணத்தை யறியலாம்.

அவரது படங்களில் காணப்படும் மற்றொரு பண்பு உருவங்களின் உறுப்புக்களைச் சரியான வீதப்படி அமைத்தலாகும். அவரால் தீட்டப் பெற்றவைகளிலே, ஒழுங்கற்ற தன்மையையோ, தவறான கணக்கீட்டையோ காண முடியாது.

சுவர்களின் மேற்புறத்தே ஓதம் பாய்ந்து, பூசப்பெற்ற சுண்ணும்பு பட்டை பட்டையாக உதிர்ந்து கேலிச் சித்திரங்களைப் போன்ற உருவங்களைக் கொண்டு விளங்கும். குருதேவரது கண்கள் இவற்றைப் பார்த்துவிடும். இல்லம் வந்து அவற்றைப் போலவே, இன்னும் அழகுபட கலைத் திறன் ஒளிர வரைந்துவிடுவார். இவ்வகைப் படங்களிலும்கூடக் கலையின் பண்புகள் அனைத்தையும் காணலாம்.

கலையைத் தேர்ந்தெடுத்த நிலையில் குருதேவர் இந்திய மரபினையே பின்பற்றினர். அவருடைய படங்களெல்லாம் கருத்துக்களைக் குறிப்பால் உணர்த்துவனவாக இருக்குமே யல்லாது வெளிப்படையாக அறிவிப்பனவாக இருக்கா. இந்திய நாட்டுப் பாடல்களெல்லாம் அவற்றின் சிறப்பான குறிப்புணர்வினால்தான் நிலைபெற்றன; சொற்களும் அவற்றின் பொருளும் இரண்டாந்தரமாகத் தான் எண்ணப்பட்டன. இந்தியக் கலைகளிலும், கோடுகளும் நிறங்களும் இரண்டாந்தரமாகக் கருதப்பட, ஒருமைப்பாட்டோடு கூடிய குறிப்புணர்வு பெற்ற வளைவு நெளி

வுகளே முதன்மையாகக் கருதப் பட்டன. மேனுடுகளில் கலையானது அறிவியல் கண் கொண்டு நோக்கப் படுகிறது. படத்தின் அளவுகளெல் லாம் கணக்குப்படி சரிபார்க்கப்படு கின்றன அல்லாமல் முப்பருமன்(Three dimension) உருவங்கள் பெரிதும் இடம் பெற்றிருந்தமையால், ஒளி, நிழற் சேர்க்கைகள் காணப்பெற் றன. அதற்கு மாருக, நமது பழங் கால ஓவியங்களில் அகல நீளங்களைத் தவிர வேறு அளவுகள் இல்லை. அவை கள் எல்லாம் உண்மைத் தோற்றமளிக்க வேண்டுமென்ற முயற்சி ஏதுமின்றித் தட்டையாகச் சுவரிலோ, தாளிலோ தீட்டப் பெற்றன. இஃதே குருதேவரின் வழியுமாகும்.

குருதேவரது கலையானது "மெய்க் காட்சிபோலத் தோற்றஞ் செய்யா மல் மெய்யாகவே இருந்தது" என்று ஒரு காலத்தே விளக்கினேன். இதற்கு, மேலும் தெளிவு வேண்டு மென நினைக்கிறேன். மேல் நாடு களில், பொருளின் புறத் தன்மையே மிகப் பெரிதும் மேற்கொள்ளப்படு கிறது. இத்தகைய பிரிவினையைச் சேர்ந்த கலைஞர் ஒருவர், ஒரு பொருளைத் தீட்டுவதில் பழுதற்ற நுண் திறனை மேற்கொள்கின்றார். ஆனால், அப்பொருளின் பின்னே மெய்த் தோற்றத்தை தோன்றச் செய்ய இயலவில்லையாயின், அவர்



படம் 1

கலைத் தொழிலை வெளிப்படுத்து வதில் தோற்றுவிடுகிறார் என்பதாம். எடுத்துக் காட்டாக, ஒரு சிங்க மானது அதன் உடற்கூற்று வீதப் படி சரியாகத் தீட்டப்படலாம்; ஆனல், வலிமை, ஆண்மை, பீடு, அஞ்சாமை ஆகிய பண்புகளடங் கிய 'சிங்கத் தன்மை' அதில் காணப் படவில்லையென்றால், சிங்கம் போலும் உருவமாக அது எண்ணப் படுமே யல்லாது கலைத்திறன் உடை யது எனக் கருதப்படாது. மாருகக் கீழ்த்திசை நாட்டுக் கலைஞன், அச் சிங்கப் படத்தில் 'சிங்கத் தன்மை'க்கு முதலிடம் தந்து வலியுறுத்துவான். உடற்கூற்று விளக்கங்களைப் புறக் கணித்துவிடுவான். இருப்பினும் அப் படம் உண்மையான சிங்கத்தைப் போலவே காணப்படும். உண்மை யாக இருக்கவேண்டிய வீதப்படி வரையப்படவில்லையென்றாலும், பார்த்துப் பழகாத கண்களுக்கும் சிங்கமல்லாத வேறு விலங்காகத் தோன்ருது. இந்நிலையில் குருதேவர் இரண்டாவது கூறப்பட்ட கோட் பாட்டைத் தேர்ந்தெடுத்தார்.

சாதாரண மனநிலையிலுள்ள ஒரு வற்கு, உடற்கூற்று இலக்கணப் படியே வரைந்தவொன்ருனாலும், அதைச் சிங்கமில்லையென்றும் ஒரு மைப்பாட்டுடன் தீட்டப்பெற்ற



படம் 2

வொன்றைச் சிங்கம் என்றும் கூறு வது முரண்போலத் தோன்றலாம். இதை அடுத்துதரப்பட்டுள்ள படங் கள் தெளிவுபடுத்தும்.

முதல் படமானது, போல வரை யும் வகையைச் சார்ந்த கலைஞரால் தீட்டப்பெற்றது. படத்தைப் பார்த் தவர்கள், அஃது உடற்கூற்று இலக்

ருணங்களுக்கொத்த நிலையில் நல்ல முறையில் வரையப்பட்டுள்ளதை யுணரலாம்.

இரண்டாம் படம், அஸ்ஸீரிய நாட்டுச் சுவரோவியத்தினின்று எடுக்கப்பெற்றது. அது சிங்கத்தின் உடற்கூற்று இலக்கணப்படி வரையப்படவில்லை யென்றாலும் நம்முடைய உள்ளத்தைத் தொட்டிழுக்கக் கூடிய ஏதோ ஒன்று அதில் இருப்பதாகத் தெரிகிறது. நாம், வலிமையும், பீடும், ஆண்மையும் செறிந்துள்ள ஒரு சிங்கமே நிற்பதாக உணருகிறோம். அது சிங்கத்தைப் போன்றதன்று; சிங்கமேதான். இங்கே, இக்கலைஞர் பொருத்தமான ஒருமைப்பாட்டினை யுணர்ந்து கொண்டுள்ளார்; எனவே, அவர் உடற்கூற்று வீதங்களின் விளக்கங்களைப் புறக்கணித்துவிடலாம்.

படம் 3

மூன்றாம் படத்தில் ஒருமைப்பாடு என்பது காட்டப்பட்டுள்ளது. அது சிங்க வுருவத்தின் பின்னே யுள்ள, மனத்தாலறியக்கூடிய ஒரு கருத்தினைக் காட்டி நிற்கிறது; அவ்வுருவத்திற்கு அப்பாற்பட்டும், அதற்குத் தொடர்பின்றித் தனித்தும் இருப்பதுமாகும். கலைஞருங்கூட, மிகுந்த ஆராய்ச்சிக்குப் பின்னரே தான் கண்டுபிடிக்க முடியும். நான் முன்னரே குறிப்பிட்டதுபோலக் குருதேவர் இந்த ஒருமைப்பாட்டின் மறை பொருள்களை யெல்லாம், அவர் ஓவியக் கலையைத் தொடங்கு முன்னரே முடியக் கற்றுவிட்டார். இத்துறையில் அவர்க்குள்ள ஆழ்ந்த அறிவுக்கு அவருடைய வேலைப்பாடுகளே சான்றாக நிற்கின்றன. போல வரையப்பட்டனவாக இல்லாமில்லை யென்றாலும், இந்தக் கண்ணோட்டத்தில் பார்க்கிறபோது அவரது படங்கள் அனைத்தும் மெய்யர்கவே யுள்ளன.

ஒரு படத்தில் ஐந்து இணைப்புக்கள் உள்ளன. ஐந்தும் சேர்ந்தே முழுமை யெய்துகிறது, முதலாவது—எண்ணம், அஃதாவது, படத்தின் அடிப்படையில் அமைந்த நோக்கம். இரண்டாவது — தனித்திறன் அல்லது நுண் திறன். மூன்றாவது – சமநிலை. அஃதாவது, வேறுபாடுகளைச் சமநிலைப்படுத்துவது. நான்காவது—செயற்பாடு. ஐந்தாவது உயிரோட்டம். இவ்விறுதியில் கூறப்பட்டதே மிகமிக இன்றியமையாதது. பாகுபடுத்திக் கூறவே இவை தனித் தனியே யெடுத்துக் காட்டப்பட்டனவே யன்றி, முழுமை யெய்திய படமொன்றில் எந்த வொன்று எங்குத் துவங்குகிறது, அல்லது வேறெந்த வொன்று எங்கே முடிகிறது என்று உணர முடியா வண்ணம் இவை யெல்லாம் பின்னிப் பிணைந்துள்ளன.

கலைஞன் பொதுவாகவே எண்ணத்தை முதலாவதாகக் கொண்டே தொடங்குகிறான். அடுத்து, அதற்கொரு உருவம் தர முனைகிறான். இப்பழக்கம் எங்கும் — கீழ்நாடேயாயினும் மேனடேயாயினும் ஒன்றாகவே யுள்ளது. ஆனால், குருதேவரது தனிச் சிறப்பென்ன வென்றால், எக் கருத்தும் மனத்தகத்தே ஒரு வடிவம் பெறுவதற்கு முன்னரே, நேரடியாக உருவங்களை வரையத் தொடங்கிவிடுவார். முதலில் அவர், ஏதோ சில வரைகோடுகளுடன் விளையாடுகிறார், அல்லது கலவையில் உள்ள வண்ணத் திறனைச் சோதித்துக் கொண்டிருக்கிறார் என்றுதான் தோன்றும். ஆனால், முடித்து மெருகேற்றிய பின்னர் எல்லா உறுப்புக்

களும் அடங்கப் பெற்று உயிரோட்டங் கொண்ட ஒரு கலை உருவமாகக் காட்சி நல்கும். குருதேவரையொத்த திறமையுள்ளார்க்கே இஃது இயலும். கற்பதற்கு எள்ளளவு கவலையும் படாத, செல்வாக்குப் பெற்ற உண்மையாக விளங்கி வந்த வழக்கங்களையும் உடைத்தெறிந்திடுவார்; இருந்தும் அவரது படங்கள் என்றும் இயல்புக்கு மாருக இருந்ததில்லை. உண்மைக்கு என்ன பொருளோ அந்நிலையில் அவை இருந்தன.

கலைஞன் தன் வேலையைத் தொடங்குவதற்குக் காரணமாயிருந்த முதல் எண்ணமாவது, நடைபெறும் இடை நிகழ்ச்சியிலேயே திருத்தம் பெற்றுவிடுவதை நாமேயுணர்ந்திருக்கிறேம். படம் முடிவெய்திய பின்னர் இந்த இணைப்புக்கள் எவ்வாறு முற்றிலும் வேறுபட்ட ஒரு கருத்துக்குட்பட இணைந்து கொண்டன என்றும், அதே நேரத்தில், விரும்பத்தக்க அழகான உருவத்தைத் தந்துள்ளன என்றும் வியப்புறுகிறேம். குருதேவர் இத்தகு உணர்வுகளைப் பன்முறை பெற்றிருக்கிறர். மற்றும் அவர் வெளிப்படையாக எந்தப் பொருளையும் புறக்கணிக்கமாட்டார், அஃதோடு அதற்கு வரம்பு மீறிய சிறப்பையும் தந்துவிடமாட்டார். இதற்காகவுங்கூட குருதேவரது படங்கள் சில வகைத் தனிச் சிறப்புப் பெறுவதில் உரிமை கொண்டாடலாம்.

குருதேவர் ஒருமுறை, மெய்ம்மை எனப்படுவது — எவ்வாறெல்லாம் விளக்கப்பட்டாலும் — இயற்கையாகவே அதில் பொதிந்துள்ள, கருத்தை யீர்க்கும் ஆற்றலைக்கொண்டுள்ளது எனக் கூறினர். அஃது உங்களுடைய உள்ளுணர்வினை அல்லது உள்முனைப்பினை யீர்ப்பதாயிருக்க வேண்டும், அஃதோடு எந்த அளவுக்கு உம் உள்

தாகூரின் பொன்மொழிகள்

"மிகவும் உறுதியான மனம் பெற்ற கதாசிரியரும் தம் கற்பனையில் வடித்தெடுத்து எழுத இயலாத பெரும் வியப்புக்குரிய நிகழ்ச்சிகள் வாழ்க்கையில் உண்மையிலேயே நிகழக் காண்கிறேம்."

"சோகம் என்னும் உணர்ச்சி உள்ளநிலை என்ற அளவிலேயே அமைந்து விடுவதில்லை. அது கடினமான செயலொன்றை ஆற்றி முடிப்பதன் வாயிலாக நிறைவெய்தத் தூண்டுகிறது."

"உண்மை அன்பு தன் உரிமையைச் சமூகம் ஒப்புக்கொள்ளக் கூடிய வகைகளில் நிரூபிக்க இயலாது — அவ்வாறு செய்ய அது முயற்சிப்பதுமில்லை; மாருக, தான்பெற்ற பெரும் பேற்றை இருமடங்கு ஆர்வங் கொண்டு தொழுகின்றது."

முனைப்பினைத் திறக்கின்றீரோ அந்த அளவுக்கு மயக்கு நிலையை (Hypnotism) நீர் உணர்வீர். புதுமையாகத் தோன்றும்படியான இச் செயற்கையானது ஒரு சிறிது காலத்திற்கு நம்மை யீர்க்கலாம்.

நம் பழங்காலத்துக் கலைஞர்கள் 'போல வரைபவராக' இல்லை. எடுத்துக்கொண்ட ஒரு பொருளை, அறிவியல் நிலையில், கையாளுவது அவர்கட்குத் தெரியாத வொன்று. இருப்பினும் அவர்கள் அழகுருவங்களின் படைப்பாளர்கள். எடுத்துக்காட்டாக, ஒரு வீட்டின் முன்னே ஒருவன் நின்றிருக்கும் காட்சியை யெடுத்துக்

கொள்ளுங்கள். 'போல வரையும்' கலைஞன் நின்றிருக்கும் மனிதனின் பார்வையின் எல்லைக்குள்ளே அடங்கிய அவ்வீட்டின் ஒரு பகுதியைமட்டும் அப்படத்தில் காட்டி, அதனால், அறிவியலின் நுட்பத் திறனுக்குத் தனித்தன்மையை விட்டுக்கொடுத்து விடுகிறான். ஆனால், இந்தியக் கலைஞன் அதற்கு மாறாக, அவ்வீட்டையும், மனிதனையும் அப்படத்தில் முழுமையாகக் காட்டி, ஒவ்வொன்றிலும் தனித் தன்மையை வலியுறுத்துவான். உண்மைக் கவிஞன் கைகளில் பின்னர் கூறப்பட்டதானது ஐயமின்றி ஒரு நல்ல விளைவினைப் பெற்றிருக்கும். அஃது உள்ளது உள்ளவாறே வரையப்பட்டதன்று என்றாலும், அஃது உயிருடன் விளங்கும் படமாக இருக்கும். குருதேவர் இந்திய முறையையே பின்பற்றி யிருப்பார் என்று இங்குக் குறிப்பிடத் தேவையில்லை.

வண்ணங்களைப் பயன்படுத்தும் நிலையில் குருதேவர் பகட்டான நிறங்களைக்கொண்ட செருமானிய நாட்டு நீர்த்தன்மையை யுடைய மையையே பெரிதும் விரும்பினார். நமது பழங்காலத்து ஓவியங்களும் நிறங்கள் மிக்குடையனவாய் இருந்தன. அவற்றின் பளபளப்பை இன்றுவரையிலும்கூடப் பாதுகாத்து வந்துள்ளனர். மேல் நாட்டுக் கலைஞர்கள் சற்று மங்கலான நிறங்களை விரும்புவது எவ்வாறு இயற்கையோ, அதேபோல, நமக்குப் பளபளப்பான, பகட்டான நிறத்தை நாடுவது இயல்பாம். இதற்குக் காரணம் தட்பவெப்ப நிலையும், வானிலைச் சூழ்நிலையுமே காரணமாம். குருதேவரது ஓவியங்கள் முதன்முதல் ஐரோப்பாவிலே கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்தபோது அவைகளின் பகட்டான வண்ணங்கள் அனைவரது கவனத்தையும் ஈர்த்தன. எனினும், அவரது வண்ணப் பூச்சில் எப்போதும் எக்குறையும் காணப்படாத வகையில், குருதேவரது சுவையுணர்வு மிக்க தூய்மையுடையதாகவும் வண்ணத்தைப்பற்றிய உணர்வு உயர்நிலைக்கு வளர்ந்துள்ளதாகவும் இருந்தது. எப்போதாகிலும், சில படங்களில், செறிந்த நீல நிறத்தை மிகச் செறிந்த கருப்பு நிறத்தின் பக்கமாக அமைப்பதைப் போல் ஆழ்ந்த இரு நிறங்களைப் பக்கம் பக்கமாக அமைக்கவும் துணிந்துவிடுவார். ஆனால், அவற்றை ஆளுகின்ற வன்மையானது, ஒத்தியைந்த வளர்ச்சியைப் பின்னோக்கித் தாழ்த்தாமல் முன்னோக்கி உயர்த்தும் அளவுக்குச் செவ்வையாக இருந்தது.

'சித்திரலிபி'யின் முன்னுரையில் குருதேவர், அவரது சொந்த ஓவியங்களைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளார். அவற்றிலிருந்து, ஒருசிலவற்றை மேற்கோளாக எடுத்துக்காட்டுவதற்கு நான் மன்னிப்புக் கேட்க வேண்டியதில்லையென எண்ணுகிறேன். ஏன் என்றால், கலையை உண்மையாகச் சுவைப்பதற்கும் போற்றுதற்கும் துணையாகும் என்பதால் அவர், ''மக்கள் நான் வரைந்த படங்களுக்குப் பொருள் என்னவென்று அடிக்கடிக் கேட்கிறார்கள். நானோ என்னுடைய ஓவியத்தினும் மௌனியாக இருக்கிறேன். அவைகள்தாம் வெளிப்படுத்தவேண்டுமேயல்லாது, கருத்துக்கள் தேடிப் பார்க்கவும், சொல் விளக்கங் கூறுவதற்கும் உரிய நிலையில் அவைகள் எவ்வித மறை பொருளையும் கொண்டிருக்கவில்லை. அஃதோடு, அந்தத் தோற்றங்கள் முடிந்த முடிவான மதிப்பைக் கொண்டிருந்தால் என்றும் நிலைபெறுகின்றன; இன்றேல், அவைகள் நீதிகட்குட்பட்ட அல்லது அறிவியல் உண்மைகளைப் பெற்றிருக்கும்படியான ஒன்றேயாயினும், ஒதுக்கப்படுகின்றன அன்றி மறந்துவிடப்படுகின்றன.''

அண்டவெளியில் ஆலன் ஷெப்பர்டு

முதல்லாவது அமெரிக்க விண்வெளி விமானி விண்வெளியில் பயணம் செய்து பூமிக்குப் பத்திரமாகத் திரும்பி வந்துள்ளார்.

அவர் பெயர் ஆலன் பி.ஷெப்பர்டு-வயது 37; அமெரிக்கக் கடற்படையில் தளபதி (கமாண்டர்) பதவி வகிப்பவர்.

விண்வெளிப் பயணத்தில் உச்ச நிலையை அவர் அடைந்தபொழுது "ஆகா! என்ன அழகான காட்சி!" என்று பரபரப்புடன் கூறினர்.

கண்காணிப்பு நிலையத்துடன் அவர் இடைவிடாமல் தொடர்புகொண்டு பேசிவந்தார்.

வெள்ளிக்கிழமை யன்று பிளாரிடாவின் கிழக்குக் கடற்கரை யோரத்திலிருந்து ஷெப்பர்டு விண்வெளியைக் குறித்து ஏவப்பட்டார். விண்வெளியில் அவர் 115 மைல் உயரம் போனதும் வானம் ஒரே கருமை நிறமாக இருந்தது. 2,000 ராத்தல் எடையுள்ள அவருடைய மெர்க்குரி விண்வெளிக் கப்பல், ரெட்ஸ்டோன் ஏவுகணையிலிருந்து பிரிக்கப்படுவதற்குமுன் மணிக்கு 5,100 மைல் வேகத்தை அடைந்தது.

302 மைலுக்கப்பால்

விண்வெளிக் கப்பல், ஷெப்பர்டை நீண்ட வட்டத்தின் பகுதி போன்றதான பாதை வழியாகக் கொண்டு வந்து அட்லாண்டிக் பெருங்கடலில் மெதுவாக இறக்கியது. இப் பாதை வழியாக ஷெப்பர்டு வருகையில் எடையை உணரமுடியாத நிலை அவருக்கு இருந்தது. கடலில் அவர் இறக்கப்பட்ட இடம் ஏவப்பட்ட இடத்திலிருந்து 302 மைலுக்கப்பால் ஆகும். விண்வெளிப் பயணத்திற்கு மொத்தம் $16\frac{1}{2}$ நிமிடம் பிடித்தது.

தண்ணீரைத் தொட்டுச் சுமார் ஐந்து நிமிடங்களுக் கெல்லாம் விண்வெளிக் கப்பலிலிருந்து அவரை ஹெலிகாப்டர் ஒன்று தூக்கியது. விண்வெளிக் கப்பலும் ஹெலிகாப்டருக்குக் கீழே தொங்கவிடப்பட்டது. சில நிமிடங்களில் ஷெப்பர்டு "யு. எஸ். லேக் சாம்ப்லேயின்" என்ற மீட்புக் கப்பலின் தளத்திற்குக் கொண்டுவரப்பட்டார்; ஹெலிகாப்டரும் கொண்டுவரப்பட்டது.

தமது இரும்புத் தொப்பியை எடுத்துக்கொள்ள ஷெப்பர்டு மீண்டும் விண்வெளிக் கப்பலுக்குள் ஊர்ந்து சென்றார்.

* * *

"அது முடியும் என்பது எனக்குத் தெரியும்! அது முக்கியம் என்பதையும் நான் அறிவேன்! அதைச் செய்ய வேண்டும் என்பது எனது விருப்பமாகும்."-மெர்க்குரி திட்டத்துக்காக முதலில் ஏழு பேர்களில் ஒருவராகத் தேர்ந்து எடுக்கப்பட்டபொழுது ஆலன் பி. ஷெப்பர்டு "லைப்" பத்திரிக்கையில் எழுதிய சொற்கள் இவை. இன்று விண்வெளியில் பிரயாணம் செய்த முதல் அமெரிக்கர் என்ற முறையில் அவர் தமது சொற்களை மெய்ப்பித்துக் காட்டிவிட்டார். தம் விருப்பமும் நிறைவேறப் பெற்றுவிட்டார்.

விண்வெளி விமானிகள் ஏழு பேருக்கும் முதலாவதாக வரவேண்டும் என்று ஆசைதான். ஷெப்பர்டு ஏன் முதல்வராக இருக்க விரும்பினர்?

அமெரிக்கச் செய்தித்துறை உதவியது.

காரணங்கள் பல என்கிறார் அவர். ஆனால் சுருக்கமாகச் சொன்னால், ''விண்வெளிப் பயணம் நம் திறமையைச் சோதிப்பது. அதிலும் முதல் பயணம் பெரிதும் சோதனையாக இருக்கும். ஆகவே, அதை ஏற்பது என்று முடிவு செய்தேன்'' என்று அவருடைய சொல்லிலேதான் கூற வேண்டும்.

மெர்க்குரித் திட்டத்தை நடத்தி வைக்கும் கடமை ''தேசிய விமான இயல், விண்வெளி நிர்வாகம்'' என்பதைச் சேர்ந்ததாகும். இதுதான் "நாஸா" (NASA) என்று சுருக்கமாகக் குறிக்கப்படுகிறது. கடற்படை வீரர் ஷெப்பர்டின் பணி இதற்கு இரவலாக வழங்கப்பட்டுள்ளது.

''விண்வெளிச் சூழ்நிலையில் மனிதன் பிழைத்திருந்து செயலாற்ற முடியுமா என்பதை அளவிட்டு அறிவதுதான் இத்திட்டத்தின் நோக்கம். விண்வெளிப் பிரயாணம் உருவாவதற்கு இது முக்கியம்'' என்று ஷெப்பர்டு தமது பயணத்தைத் தொடங்கும் முன் நிருபர்களிடம் பேசுகையில் குறிப்பிட்டார்.

தயங்கவில்லை

''திட்டத்தில் கலந்துகொள்ளும்படி என்னைக் கேட்டதுமுதல் நான் தயங்கவில்லை. நாட்டுக்கும் பணிபுரியவேண்டும். என்னைப் பொறுத்தவரை இது அறிவுடைமைப் பணியேயாகும். பெற்ற அனுபவத்தைப் பயன்படுத்தவில்லை என்றால், கடந்த காலமெல்லாம் வீண் காலம்தான். அது தனக்கே துரோகம் இழைப்பதாகும்'' என்றார் ஷெப்பர்டு.

ஷெப்பர்டு அமெரிக்கக் கடற்படைக் கழகத்தில் படித்துப் பட்டம் பெற்றவர். அது 1944-ஆம் ஆண்டு. இரண்டாவது உலகப் போரில் பசிபிக் கடலில் ஒரு போர்க் கப்பலில் அவர் பணியாற்றினார். பின்னர் கடற்படை விமானியராகப் பயிற்சி பெறச் சென்றார். பயிற்சி மிக மெல்ல நடப்பதாக அவருக்குத் தோன்றியது. உடனே, படைத்துறை அல்லாத விமானப் பயிற்சிக் கழகம் ஒன்றில் சேர்ந்து ஓய்வு நேரங்களில் பயின்று விமானம் ஓட்டும் ''லைசென்சு'' பெற்றுவிட்டார். கடற்படை விமானி என்ற பட்டம் அதற்குப் பிறகு 1947-இல் தான் அவருக்குக் கிடைத்தது.

தரையில் தளம் அமைத்துச் செயலாற்றும் போர் விமானங்களில் ஷெப்பர்டு பணிபுரிந்துள்ளார்; அநேக விமானந் தாங்கிக் கப்பல்களிலும் பணியாற்றியுள்ளார். 1950 முதல் அவர் பெரும்பாலும் சோதனை விமானியாகவும், பயிற்சி ஆசிரியராகவும் இருந்து வருபவர். மிக உயரத்தில் பறக்கும் சோதனைகள் பலவற்றுள் அவர் கலந்துகொண்டுள்ளார். விமானம் பறக்கும்போதே இன்னொரு விமானத்திலிருந்து எண்ணெய் பிடித்துக்கொள்ளும் முறையை உருவாக்க அவர் உதவி செய்துள்ளார். விமானந் தாங்கிக் கப்பலில் விமானம் வந்திறங்கும் நுட்பம்பற்றிய ஆராய்ச்சிக்குப் பெரிதும் உதவி புரிந்துள்ளார். அவர் கடற்படைப் போர்க் கல்லூரியில் படித்து 1958-இல் பட்டம் பெற்றார். அவர் விமானம் ஓட்டிய நேரம் மொத்தம் 3,700 மணி நேரமாகும்: இதில் 1,800 மணி நேரம் ஜெட் விமானங்களை ஓட்டிய நேரமாகும்.

உடல் உரனும் மதி நுட்பமும்

ஷெப்பர்டு தம்மைப்போன்ற விண்வெளி விமானிகள் மற்ற ஆறு பேரையும் போலவே உடல் உரமும் அறிவுக் கூர்மையும் ஒருங்கே அமையப் பெற்றவர்.

விண்வெளி விமானிகளாகத் தேர்ந்து எடுக்கப்பட்ட ஏழு பேர்

களுக்கும் திட்டத்தின் எல்லா அம்சங்களிலும் 'பயிற்சி யளிக்கப்பட்டது. அத்துடன் ஒவ்வொருவருக்கும் ஒரு தனித் துறையில் சிறப்பான பயிற்சி யளிக்கப்பட்டது. அவர்கள் தத்தம் தனித் துறைபற்றி மற்றவர்களுக்கு உதவவேண்டியது கடமை.

மெர்க்குரித் திட்டத்தில் ஷெப்பர்டு பயிற்சிபெற்ற தனித் துறைகள் இரண்டாகும். ஒன்று, உலகம் சுற்ருத விண்வெளிப் பயணத்தைப் பற்றியது; முகப்புக் கூண்டு செல்லும் வழியைக் கண்டுபிடித்துக்கொண்டே வருவது, முகப்புக் கூண்டை மீட்பது ஆகிய வேலைகளுக்கான ஏற்பாடுகளை உருவாக்குவது பற்றியது. மற்றது, இனி நிகழவிருக்கும் உலகம் சுற்றும் விண்வெளிப் பயணத்தைப் பற்றியது. செயற்கைக் கோள் செல்லும் திசையை உலகம் எங்கும் இருந்து அறிவது குறித்த பிரச்சினைகளைப் பற்றியது.

விண்வெளி விமானிகள் ஏழு பேர்களிலும் நெட்டையானவர் இவரே. இவர் உயரம் ஆறடிக்குச் சற்றே குறைவு. ஒல்லியான உடல், இயல்பான இனிய தோற்றம், வேடிக்கையாகப் பேசும் இயல்பு படைத்தவர் இவர். மெர்க்குரித் திட்டத்தின் தொழில் நுட்பங்கள், பொறியியல் முறைகள் முதலியவை யெல்லாம் இவருக்குத் தண்ணீர் பட்டபாடு. அவற்றைப்பற்றிக் கேட்டுவிட்டால், சளைக்காமல் பேசத் தொடங்கிவிடுவார். இவ்வாறே தமக்கு விருப்பமான எப் பொருள்பற்றியும் நன்கு பேசக்கூடியவர் இவர். தலைவர் ஒருவருக்கு இருக்கவேண்டிய பண்புகள் இவரிடம் பொருந்தி யுள்ளதை யாரும் எளிதில் கண்டு கொள்ளலாம். மற்ற விண்வெளி விமானிகள் இவரிடம் மிக்க மதிப்பு வைத்துள்ளதற்கு இதுவே காரணம்.

விளையாட்டில் வல்லவர்

ஷெப்பர்டு விளையாட்டிலும் வல்லவர். கால்ப் (Golf), பனிக்கட்டிச் சறுக்கு, நீர் மிதவைச் சறுக்கு முதலிய விளையாட்டுக்கள் இவருக்கு விருப்பமானவை. வேகமாகப் பந்தயக் கார் விடுவதிலும் மிக்க விருப்பம் உள்ளவர். இதற்கென்றே அந்தக் காரில் தனி ''டயர்கள்'' மாட்டி யுள்ளார்.

இவருக்கு மனைவியும் இரண்டு பெண் குழந்தைகளும் இருக்கிருர்கள். வீட்டில் இவர்களுடன் எட்டு வயது மருமகள் ஆலிஸ் என்ற குழந்தையும் இருக்கிருள். மகள் லோராவுக்கு 13 வயது, ஜூலியானுவுக்கு 9 வயது. திருமதி ஷெப்பர்டு தம் கணவர் தெரிந்தெடுத்த பணிக்கு முழு ஆதரவு அளிக்கிருர். இதை "லைப்" பத்திரிக்கையில் அவர் எழுதி யுள்ள ஒரு கட்டுரை விளக்கும்.

பயிற்சித் திட்டத்தைப்பற்றி நிருபர்களிடம் ஷெப்பர்டு பேசுகையில் மனதிலே தைரியம் உண்டாவதுதான் அதில் முக்கியமாகும் என்ருர். ''நம்மோடு பாடுபடும் மக்களிடத்தில் ஏற்படும் நம்பிக்கை, நாம் கையாளப்போகும் கருவிகள், பொறியியல் அமைப்புக்களைப்பற்றிய நம்பிக்கை; மூன்ருவது, தன்னம்பிக்கை — இம்மூன்றிலும் பறப்பதுதான் அந்தத் தைரியம் என எண்ணுகிறேன்'' என்ருர். இவர்தாம் அமெரிக்காவின் முதல் விண்வெளி விமானி ஷெப்பர்டு.

ராக்கெட்டில் பயணம்

விண்வெளி விமானி ஷெப்பர்டும் அவருக்கு மாற்று விமானியா யிருந்த ஜான் எச். கிளென்னும் வெள்ளிக்கிழமை காலை 1·5 மணிக்குப் படுக்கையி லிருந்து எழுப்பப்பட்டனர். ஆரஞ்சுப் பழம், ரொட்டித் துண்டு, முட்டை, பன்றி இறைச்சி முதலியன

காலை உணவாக அவர்களுக்குக் கொடுக்கப்பட்டன.

காலை உணவுக்குப் பிறகு இருவரும் மருத்துவச் சோதனை செய்யப்பட்டனர். அப்பொழுதுதான் ஷெப்பர்டு விண்வெளிக்குச் செல்பவர் என்று உறுதியாயிற்று.

அவருடைய இதயத் துடிப்பை அளக்கும் 4 சிறிய கருவிகள் அவருடைய நெஞ்சில் பொருத்தப்பட்டன. அவர் மூச்சு விடும் வேகத்தைப் பதிவு செய்ய மூச்சளக்கும் சிறிய கருவி ஒன்று அவருடைய கழுத்தில் மாட்டப்பட்டது. மருத்துவர் ஒருவர் ஒரு சிறிய வெப்ப அளவுக் கருவியை மலக்குடலுக்குள் செலுத்தினார்.

படம் 1

விண்வெளியில் சென்று மீண்ட முதல் அமெரிக்கர் ஆலன் ஷெப்பர்ட் தன் விண்வெளி உடையை உடுத்திக் கொள்ளும் காட்சி.

அடுத்தபடி ஒரு நிபுணரின் உதவியுடன் ஷெப்பர்டு 'காற்றழுத்த உடையை உடுத்திக் கொண்டார். இந்த உடை வெளியே அலுமினியம் கலந்த நைலான், உள்ளே ரப்பர் கலந்த நைலான் ஆகியவை கொண்டு செய்யப்பட்டது. குறுக்கிலும் நெடுக்கிலும் சிப்பும் (Zip) வார்களும் கட்டப்பட்டன. இரும்புத் தொப்பி தலையில் வைக்கப்பட்டது. அதன் திறந்து மூடக்கூடிய பாகம் மூடப்பட்டது.

ஏதாவது ஒழுக்கு இருக்கின்றதா என்று பார்க்க விண்வெளி உடையில் காற்றடைக்கப் பட்டது. காற்று வெளியே விடப்படும் வரை ஷெப்பர்டு பார்ப்பதற்கு வெள்ளி பலூன் மனிதன் போல் காணப்பட்டார்.

தொப்பி மூடி மீண்டும் திறக்கப்பட்டதும், அவர் விமானக் கட்டடத்திலிருந்து வெளியே வந்தார். இங்குதான் அவர் விண்வெளிப் பயணத்திற்குப் பல நாட்களுக்கு முன்பு இருந்து வசித்து வந்தார். காற்று குளிரச் செய்யும் கருவியை அவர் எடுத்து வந்தார். இது அவருடைய உடுப்புடன் பொருத்தப்பட்டிருந்தது. விண்வெளிக் கப்பலில் அவர் ஏறும்வரை அவர் நலமாக இருக்க அது பொருத்தப்பட்டது.

விண்வெளிக் கப்பல் ஏவப்படும் இடம் மூன்று மைலுக்கு அப்பால் இருந்தது. இந்த இடத்திற்கு அவர் ஒரு வண்டியில் கொண்டு போகப்பட்டார். இப்பொழுதும் அவருக்குக் கடைசி மருத்துவ சோதனை கொடுக்கப் பட்டது. ஏவும் தளத்தில் சில நிமிடம் அவர் நின்று வெள்ளை ராக்கெட்டைப் பார்த்தார். பிறகு 'லிப்டி.'ல் ஏறிக்கொண்டார். அவருடைய உடுப்பைச் சற்று சரிசெய்து கொண்டு பக்கத்தில் இருக்கும் திட்டி வாயில் வழியாக முதலில் கால்களை விட்டுக் கொண்டு மெர்க்குரி விண்வெளிக் கப்

பலில் புகுந்து கொண்டார். பிறகு இருக்கையில் அமர்ந்து கொண்டார். சுமார் ஒரு மணி நேரத்திற்குப் பிறகு வாயில் மூடப்பட்டது.

ஆலன் பி. ஷெப்பர்டு தமது விண்வெளிப் பயணத்திற்குத் தயாரானார்.

காலக் குறிப்பு நடந்தது. கீழ்த் திசை நேரப்படி காலை 9.34 மணிக்கு ராக்கெட் சுடப்பட்டது.



படம் 2

மெர்க்குரித் திட்டம்

விண்வெளிக் கப்பலின் அமைப்பு

1. பாரசூட்டுகள்,
2,12, கட்டுப்படுத்தும் ஜெட்கள்
3. கருவித் தொகுதி,
4. பக்கக் கதவு,
5, சன்னல்,
6. தொலைபேசி அமைப்பு,
7. வெப்பக் காப்புறை,
8. உணர்ச்சி நிலைக் கட்டுப் படுத்தி,
9. தப்புவிக்கும்,
10. அமரும் இடம்,
11. சூழ்நிலை கட்டுப்படுத்தி
13, பெரிஸ்கோப்,
14. மீண்டும் வர துணைச் சாதனைகள்
15. உணர் சாதனைகள் இருப்பிடம்,
16. பாதை உணரும் கருவிகள்.

ராக்கெட்டின் வேகம் அதிகரித்தது. மேகங்களையும் தாண்டிச் சென்றுவிட்டது. இரண்டு நிமிஷங்களுக்குப் பிறகு அது கண்ணிலிருந்து மறைந்துவிட்டது. சில விநாடிகளுக்குப் பிறகு ராக்கெட் எரிந்து போயிற்று, விடுவிப்பு மேடையும் தள்ளப்பட்டது. விண்வெளிக் கப்பலும் சுலபமாக ராக்கெட்டிலிருந்து விடுபட்டது. விண்வெளிப் பயணத்தின்போது ஷெப்பர்டுதான் விண்வெளியில் ஒரு கப்பலைச் செலுத்திய முதலாவது மனிதரானார். சிற்சில நடவடிக்கைகள் தாமே நிகழ்பவையாயினும் விண்வெளிக் கப்பலைத் திருப்பும் அசைக்கும் பணிகளைச் செய்யும் சிறிய ஜெட்டுகளை அவர்தான் இயக்கினார். அவர் விண்வெளிக் கப்பலை, வேகக் குறைப்பு ராக்கெட்டுகள் சுடப்படுவதற்காக, சரியான நிலையில் வைத்துக்கொண்டார். அடுத்தடுத்து சுடப்படுவதற்காக, வேகக் குறைப்பு ராக்கெட்டுகளையும் சரியான நிலையில் வைத்தார்.

விண்வெளிக் கப்பலின் வேகத்தை வேகக் குறைப்பு ராக்கெட் சற்றுக் குறைத்ததும், விண்வெளிக் கப்பல் திரும்பி வரும் பாதைக்குள் புகுந்து வாயு மண்டலத்தின் மீது மோதியது. பெரிலியம் (Beryllium) கொண்டு செய்யப்பட்ட அதன் முகப்பு மூடி இந்த அதிர்ச்சியையும், காற்று மோதலினால் ஏற்பட்ட கடும் வெப்பத்தையும் தாக்கியது. ஷெப்பர்டு அவருடைய இருக்கைக்குள் இந்தச் சக்தியினால் தள்ளப்பட்டார். இந்தச் சக்தி அவருடைய எடையை விட 9 பங்கு அதிகமாக இருந்தது.

21,000 அடி உயரத்தில் சிறிய பாராசூட் ஒன்று திறந்தது. அவர்

படம் 4
மீண்டு வரும்பொழுது விண்வெளி விமானி ராக்கெட்டின் ஒரு பகுதியில் தக்க பாது காப்புக்களுடன் பாரசூட் ஒன்றின் துணைகொண்டு அட்லாண்டிக் பெருங்கடலில் விழுவதை இப்படத்தில் காணலாம்.

கீழே இறங்குவதை அது ஒரு நிலையில் கொண்டு வந்தது. முக்கிய பாரசூட் 10,000 அடி உயரத்தில் விரிந்தது. விண்வெளிக் கப்பலின் இறங்கும் வேகத்தைக் குறைத்து மெதுவாக தண்ணீரின்மேல் இறக்கியது.

ஷெப்பர்டு விமானம் தாங்கிக் கப்பலுக்குக் கொண்டுவரப்பட்டார். பிறகு மருத்துவ சோதனைக்கும் இதர சோதனைகளுக்கும் அவர் கிராண்ட் பஹாமா தீவில் இருக்கும் மெர்க்குரி திட்ட நிலையத்திற்குக் கொண்டு போகப்பட்டார்.

சிறப்பான அமைப்புக்கள்

முதலாவது அமெரிக்க விண்வெளி விமானி தமது விண்வெளிக் கப்பலில் தனிமையாகத்தான் இருந்தார்; அவரைப்பற்றி ரகசியமாக ஏதும் இருக்கவில்லை என்பதே குறிப்பிடத்தக்கது.

ஆனால், ஷெப்பர்டின் $16\frac{1}{8}$ நிமிட விண்வெளிப் பயணத்தின்போது அவருடைய ஒவ்வொரு அசைவும், வார்த்தையும் தரையில் கண்காணிப்பு நிலையத்தில் இருந்த பார்வையாளர்களால் கவனிக்கப்பட்டும் கேட்கப்பட்டும் வந்தன.

தரையிலிருந்து மருத்துவர், அவர் மூச்சு விடுவதையும், அவருடைய இதயத் துடிப்பையும் உன்னிப்பாகக் கேட்டனர்; இவை மெர்குரி விண்வெளிக் கப்பலி லிருந்து ஒலிபரப்பப்பட்டன. பயணத்தின் ஒவ்வொரு விநாடியிலும் அவருடைய உடலின் வெப்பத்தை மருத்துவர்கள் அறிந்து கொண்டனர். இதுவும் ஒலிபரப்பப்பட்டது. இத்தகைய தக்க பல பாதுகாப்புக்களுடன் ஆலன் ஷெப்பர்டு அண்டவெளியில் சென்று நலமாக மீண்டு வந்தார். ●



படம் 3
விண்வெளியில் பறப்பதற்கான சோதனைகள். விண்வெளிக் கப்பலில் இருப்பதைப் போன்ற அதே அமைப்பு ஒன்றில் பூமியிலிருந்த வண்ணம் விண்வெளி விமானி ஒருவர் பயிற்சி பெறுவதைக் காணலாம்.

தாகூரின் சிறுகதைகள்

திரு டி. டபிள்யூ. கிளார்க்

தாகூரின் கவிதைகளைப் பற்றியும் ஓரளவுக்கு நாடகங்களைப் பற்றியும் இலக்கியச் சிறப்புள்ள திறனாய்வுகள் ஆங்கிலத்திலும் வங்க மொழியிலும் இருக்கின்றன. ஆனால், அவருடைய உரைநடையை எவரும் விரிவாக ஆராயவில்லை. இரவீந்திரர் சுமார் பன்னிரண்டு நாவல்களையும், நூற்றுக்குமதிகமான சிறுகதைகளையும், பலப்பல கட்டுரைகளையும் எழுதியிருக்கிறார். அவர் ஆற்றிய உரைகளும் எழுதிய கடிதங்களும் ஏராளமானவை. ஆனால், அவை வெளிநாட்டினருக்கு கிடைக்கவில்லை. மேனாட்டு இலக்கியத் திறனாய்வாளர்கள் தாகூரின் கவிதைகளைச் சுவைத்து ஆய்வுரைகளை எழுதியது போல, அவருடைய உரைநடையைப்பற்றி எழுதாததற்கு இதுதான் காரணம். தாகூரின் சில சிறு கதைகளும் நவீனங்களும் ஆங்கிலத்தில் வெளி வந்துள. ஆனால், அவை தாகூரின் புகழை எடுத்துக் கூறும் முறையில் மொழிபெயர்க்கப்படவில்லை. நூற்றாண்டு விழாக் கொண்டாடும் இந்த ஆண்டே அவருடைய இலக்கியங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பதற்கான முயற்சி எடுத்துக்கொள்வதற்கு ஏற்ற தருணம். தாகூரின் சிறந்த கவிதைகளில் காணும் கம்பீரமும் தெளிந்த ஓட்டமும் கற்பனைச் செறிவும் அவருடைய உரைநடையிலுமுண்டு என்பதே என் கருத்து. கவிதையை உரைநடையுடன் ஒப்பு நோக்கும் அவசியமில்லை. உரைநடைக்கு சிறப்பியல்பும் இசைவுமுண்டு. தாகூர் அவற்றைக் கைவரப்பெற்று சிறந்து விளங்கினார்.

கருணை உள்ளம்

சென்ற நூற்றாண்டின் இறுதியில் தாகூர் தமது ஜமீன் கிராமத்தில் தங்கியிருந்தபோது ஏழை எளியவர்களுடன் நெருங்கிப் பழகினார். அறியாமையிலும் வறுமையிலும் உழலும் அவர்களுடைய வாழ்க்கையைக் கண்டு மனம் நெகிழ்ந்தார்; அவர்களுடைய அவல நிலையை உலகுக்கு எடுத்துக்காட்ட விரும்பினார். இலக்கிய மெருகேற்றும் முயற்சியின்றி, நீதி போதனைகளை வழங்காமல் "சிறுமை வாழ்க்கையையும் துயர நிகழ்ச்சிகளையும்" வருணிக்கும் கவிதை உருவாயிற்று. பிறகு அவர் கல்கத்தாவுக்குத் திரும்பியபோது அங்கும், ஏழைகள் துன்பமும் துயரமும் சூழ வாழ்வதைக் கண்டார். அந்தக் காட்சிகள் மனத்தில் பதிந்துவிடவே பிற்காலத்தில் சிறந்த சிறுகதைகளாக மலர்ந்தன.

தாகூரின் சிறுகதைகளில் சிறந்த தொகுப்பான 'கல்ப கச்சாவில்' நாம் பலப்பல காட்சிகளைக் காண்கிறோம். வீட்டில் நடைபெறும் சம்பவங்களையும் சமூக சமய சூழல்களை

யும் சமுதாயச் சிக்கல்களையும் விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சியையும் காண்கிறோம். ஏழை எளியவர்களுடைய அவல வாழ்வை விவரிக்கும் கதைகள் உள்ளத்தைத் தொட்டுவிடுகின்றன. தாகூரின் கதைகள் அழியாப் புகழ் பெற்றவை என்று தாம்ஸன் கூறுவதை நான் முழுமனதுடன் ஏற்கிறேன். தாகூர் உள்ளக் குமுறலுடன் ஏழை மக்களுடைய துன்பங்களையும் துயரங்களையும் விவரிக்கிறார்; அவர்களுடைய சோகக் கதைகளைக் கூறுகிறார்; துன்பச் சேற்றில் அவர்களை அமுக்கி வைக்கும் சமூகத்தையும் சம்பிரதாயங்களையும் சாடுகிறார். அவருடைய கதைகளில் கருணை உள்ளத்தை—மனிதாபிமானத்தைக் காண்கிறோம்.

தாகூரின் படைப்புக்களில் குறைகள் இல்லாமல் இல்லை. உணர்ச்சிவசப்படும்போது இலக்கிய வரம்புக்குள் நிற்கத் தோன்றுது; வேலியைக் கருதாது வேகத்துடன் எழுதுவதால் தான் அவை சிறப்புறுகின்றன. படைப்பாளன் அச்சில் வார்த்த கரணைகளைக் கோத்த சங்கிலி அல்ல. அவனுடைய படைப்புக்கள் ஒரே சீராக இருக்க முடியாது. உள்ள நிலைக்கேற்றபடி அவை அமையும். தாகூர் சிறப்பு மிக்க கதைகளையும் கவிதைகளையும் படைத்துத் தனது புகழை நிலைநாட்டிக்கொண்டிருக்கிறார்.

ஊமைப்பெண்ணின் கதை ஒன்றை அவர் கூறுகிறார். பிறவி மூங்கையான அந்தப் பெண்ணுக்கு ஸுபாஷினி (தேன்மொழி) எனப் பெயரிடுகிறார். இளமைப் பருவத்தில் அவள் பிரதாபன் என்ற சிறுவனுடன் புனலிலும் பொழிலிலும் விளையாடுகிறாள். அவள் மங்கைப் பருவமடைகிறாள். தந்தை அவளுக்குத் திருமணம் செய்ய முனைகிறார். பெண் ஊமை என்ற செய்தி மாப்பிள்ளைக்குத் தெரியாது.

''நல்லதோர் நாளில் திருமணம் நடைபெறுகிறது. தங்களுடைய மூங்கைப் பெண்ணைக் கணவன் வீட்டாரிடம் ஒப்படைத்துவிட்டு ஸுபாவின் பெற்றோர் வீடு திரும்புகிறார்கள். இறைவன் கருணையால் அவர்கள் இகத்திற்கும் பரத்திற்கும் ஏற்றதோர் நற்செயலைச் செய்துவிட்டார்கள்'' என்கிறார் கதாசிரியர்.

அந்த மூங்கைப் பெண்ணின் வாழ்வு எப்படி இருந்தது? ''பத்து நாட்களுக்குள் அவள் ஊமை என்பதை ஊரிலிருந்த அனைவரும் தெரிந்துகொண்டார்கள்...... அவளுடைய கணவன் பேசும் திறனுள்ள ஓர் பெண்ணை இரண்டாம் தாரமாக ஏற்றுக்கொண்டான்'' என்று கதையை முடிக்கிறார்.

வாசகர்களுடைய சிந்தனையைத் தூண்டும் முறையில் கதையை முடிப்பது அவருடைய சிறப்பாகும். ''முடிவு வந்துவிட்டது. ஆனால், அது முடிவல்ல'' என்கிறார். அதைக் கர்ம பலன் என்று கூறலாமா அல்லது சமூகக் கேடு என்று கூறலாமா?

கடைசி இரவு என்ற கதையில் உயிருக்கு மன்றாடிக்கொண்டிருக்கும் ஜோதினுடைய கட்டிலுக்கு அருகில் அன்புருவான அத்தை மாசியைச் சந்திக்கின்றோம். மனைவியின் அலட்சிய புத்தியை மருமகன் அறிந்துகொள்ளக்கூடாது என்று பொய்களைக் கூறவும் துணிந்துவிடுகிறாள் அவள். 'அவன் படும் துன்பத்தைக் காணச் சகியாமல் அவனுடைய மனைவி மணி, சமையல் கட்டில் அமர்ந்து கண்ணீர் விடுகிறாள். உறங்கும்போது அவனைப் பார்த்துவிட்டுச் செல்கிறாள்' என்று கூறுகிறாள் அத்தை. ஆனால், மணியோ அண்மையில் தன்னுடைய பிறந்த வீட்டில் நடக்கவிருக்கும் கல்யாணத்திற்குச் செல்வது பற்றித் திட்டமிட்டுக்கொண்டிருக்கிறாள்.

மனைவியைப் பற்றி, அவளுடைய அன்பைப் பற்றித் தனது அத்தை கூறுவது அனைத்தையும் ஜோதின் நம்பிவிடுகிறான். தன்னிடம் உயிரையே வைத்திருக்கும் மனைவி வசதியுடன் வாழவேண்டும் என்று கருதி குடும்பச் சொத்துக்களையும்—அத்தையின் சொத்துக்களையும் கூட அவள் பேருக்கு எழுதி வைத்துவிடுகிறான். அவனிடமுள்ள பாசத்தால் அத்தை மாசி தன்னுடைய சொத்துக்களை மீட்க முடியாமல் தவிக்கிறாள். ஆனால், ஜோதினுக்கு அதிவிரைவில் தன் மனைவியின் உண்மை நிலை தெரிந்துவிடுகிறது. அத்தைக்கு அநீதி இழைத்துவிட்டோமே என்று அவன் வருந்துகிறான். தனது தவற்றைத் திருத்திக்கொள்ள நேரமளிக்காமல் மரணம் அவனை அணைத்துக் கொள்கிறது.

இந்தக் கதையிலும் ஒரு முடிவு இருக்கிறது. ஆனால், அது முடிவல்ல. மணியை நல்லவளாகவே காட்டி முடிவுவரையில் தனது நாடகத்தை அத்தை நடித்துவிடுகிறாள். மணிக்குக் கூறுவதுபோல அவள் கூறுகிறாள். "அழாதே, அழவேண்டிய காலம் விரைவில் வரும்" என்று.

துயரக் கதை

விதியின் கரங்கள் பெண்களை மட்டும் தொடவில்லை; ஆண்களையும் பிடித்து ஆட்டுகிறது. வறுமையில் உழலும் ஹரலால் மிகவும் குறைந்த ஊதியத்தை ஏற்றுக்கொண்டு வேணுவுக்குக் கல்வி புகட்ட முன்வருகிறான். வேணுவோ செல்வத்தால் சீரழிந்த குழந்தை. அவனுடைய தந்தை சுக்காஞ்செட்டி, அன்னை ஆணவத்தின் உருவம். மாணவனுக்கும் ஆசிரியனுக்குமிடையே பாசம் வளருகிறது. அதைக்கண்டு அன்னை வெதும்புகிறாள். அவர்களைப் பிரிக்கத் திட்டமிடுகிறாள். அயோக்கியன் என்று குற்றஞ்சாட்டி ஹரலாலை வெளியேற்றுகிறாள். பிறகு... வேணுவையும் கொடுமைப்படுத்துகிறாள். வேணு தன்னுடைய விருப்பங்களை நிறைவேற்றிக்கொள்ள தகாத வழிகளில் செல்கிறான். இதன் நடுவே ஹரலாலுக்கு நல்ல ஊதியமும் பொறுப்புமுள்ள வேலை கிடைக்கிறது. வேணு ஹரலாலை அடிக்கடி சந்திக்கிறான். ஒரு சமயம் ஹரலால் தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட பெருந்தொகையை வீட்டில் வைத்திருக்க வேணு அதைத் திருடிச் செல்கிறான். வேணுவின் மீதுள்ள பாசத்தால் அவனைக் காட்டிக் கொடுக்க மனமில்லாமல் ஹரலால் தண்டனையை ஏற்கிறான். வேலையிழந்து வறுமையில் சிக்கித் தவிக்கும்போது கூட வேணுவைக் குறைகூற அவனுடைய மனம் ஒப்பவில்லை. துயர் துடைக்க வழியறியாத அவன் கடைசியில் ஓர் வண்டியைக் கூப்பிட்டு அதில் ஏறிக்கொள்ளுகிறான். மைதானத்தைச் சுற்றி ஓட்டிச் செல்லுமாறு சாரதிக்குப் பணித்துவிட்டு இருக்கையில் சாய்கிறான். தாகூர் தமக்கே உரித்தான நடையில் கதையை முடிக்கிறார். கேளுங்கள்.

"மாதா கோவில் மணி ஒன்று அடித்தது. இருள் சூழ்ந்த அந்த மைதானத்தில் வண்டி சுற்றிச் சுற்றி வந்தது. வண்டிக்காரன் பொறுமையிழந்தான். "பாபு நீங்கள் எங்கே செல்ல வேண்டும்?" என்று உரத்த குரலில் கேட்டான். பதில் இல்லை. அவன் வண்டியை நிறுத்தினான். கீழே இறங்கி ஹரலாலைத் 'தொட்டு உசுப்பினான்', எங்கே செல்ல வேண்டும் என்று மீண்டும் கேட்டான். பதில் இல்லை. வண்டிக்காரனுக்குப் பயமேற்பட்டது. அவன் உள்ளே எட்டிப் பார்த்தான். ஹரலாலின் உடல் விறைத்துக் கிடந்தது, மூச்சு நின்றுவிட்டது......

எங்கே செல்ல வேண்டும்? இந்தக் கேள்விக்கு ஹரலால் பதில் கூறவே இல்லை. அமைதி......... மயான அமைதி......... இருளை விலக்க ஒளி இல்லை."

பாரதத்தின் முதல் உரிமைப் போராம் 'சிப்பாய்க் கலகம்' முழங்கிய நான்கு ஆண்டுகளுக்குப் பின் 1861-ஆம் ஆண்டு மே திங்கள் 8-ஆம் நாள் அவதரித்தார் அண்ணல் தாகூர். நாட்டுமக்கள் அவரது 80-ஆம் ஆண்டு விழாவினைக் கொண்டாடிச் சரியாக மூன்று மாதங்கள் ஆனபின் அதாவது 1941-ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 7-ஆம் நாள் அவர் இம்மண்ணுலகைவிட்டுப் பிரிந்தார். இந்நாட்களில் 80 வயது நல்ல வயது என்று எல்லா இடங்களிலும், குறிப்பாக நம் நாட்டிலும் கருதப்படும். ஆனால், தாகூரின் குடும்பம் நீண்ட ஆயுளைத் தன்னகத்தே கொண்டதாகும். இம் காட்சியாக இருந்தது. 'கவிஞர் தம் 80-ஆம் ஆண்டை நெருங்கும்போது. இவ்வம்மையாருக்கு 82 ஆண்டுகள் ஆகியிருந்தது. அவ்வம்மையார் ரவீந்திரநாதரை ''நன்கு வாழ்ந்து தங்கள் குடும்பத்திற்குப் பேரும் புகழும் தேடித் தரவேண்டும் என வாழ்த்தினர். நல்லவனுக இருப்பதாகவும் குடும்பப் பெயரைக் காப்பாற்றத் தன்னுல் ஆன முயற்சிகள் எடுப்பதாக மிகவும் பணிவுடன் ''சின்னவன்'' வாக்குறுதி கொடுக்கும்போது அங்கும் இங்கும் திரிந்து கொண்டும் ஒட்டுக் கேட்டுக்கொண்டும் இருந்த எங்களால் பீரிட்டுக் கொண்டு வந்த சிரிப்பை அடக்க முடியவில்லை.

மாந்தருள் மாணிக்கம்

திரு. அனில் குமார் சந்தா

மாகவியின் தந்தையாம் மாரிசி தேவேந்தரநாதர் மரணம் அடைகிற போது அவருக்கு வயது 85 ஆகும். இவரது மூத்த அண்ணுவும் காந்தீஜீ அவர்களால் அன்பாகப் ''பெரிய அண்ணு'' எனவும் அழைக்கப்பட்டவருமான துவிஜேந்திரநாதர் 92-ஆம் ஆண்டுவரை வாழ்ந்துள்ளார். மற்றும் இவரது மூன்று சகோதரர்களும் சகோதரிகளும் வாழ்க்கையின் 80 ஆவது படிகளைக் கடந்துள்ளார்கள்.

கவிஞர் மடிவதற்குச் சில மாதங்களுக்கு முன் இவரது நீண்ட ஆயுளுக்காக இவரது மூத்த சகோதரி பர்ணகுமாரி அம்மையார் அவர்கள் இவரை வாழ்த்தியது கண்காணுக்

தாகூர் முதிர்ந்த வயதுவரை வாழ்ந்தபோதிலும் அவர் என்றுமே வயோதிகராகத் தோன்றவில்லை. 'காலத்தின் சுழல்' என்பதில் தோன்றிய குமரர்களின் கூட்டத்தினரின் மகிழ்ச்சிக் குரலாகிய ''நாம் என்றுமே முதுமையடைய மாட்டோம்'' என்பதைத் தமது வாழ்க்கையிலே பிரதிபலித்துக் காட்டினர். இது தான் அவரது வாழ்க்கையின் முக்கியக் குறிக்கோளாக இருந்தது. அவரது உடல் கூனிற்று. அவரது இறுதி நாட்கள் கொடிய நோயால் ஆழ்ந்த துயரத்தில் கழிக்கப்பட்டன. ஆனல், அவரது உள்ளம் என்றுமே முதுமை அடையவில்லை.

தமிழாக்கம்: **திரு. தே. இ. முத்துவெங்கிட்டராமன்.**

அவர் தம் வாழ்க்கையின் இறுதிக் காலம்வரை இன்பத்தின் நிறைகுடமாகவே வாழ்ந்தார். புத்தம் புதிய கருத்துக்களை என்றும் அவர் வரவேற்ருர். நடைமுறையில், அவற்றைச் சோதித்துப் பார்ப்பதிலும் அவர் பின்வாங்கியதில்லை. சிலவேளைகளில் மிகவும் அபாயகரமான சோதனைகளிலும் ஈடுபட்டு இருந்திருக்கின்ருர். புதுமையில் ஒரு சொல்லொணு மோகம் அவருக்கு இருந்த போதிலும், வாழ்க்கையின் அடிப்படைத் தத்துவங்களை உறுதியாக மேற்கொண்டார். அவைகளை ஒரு போதும் விட்டுக்கொடுத்ததோ அன்றி மாற்றியதோ கிடையாது.

அறுபதாண்டை நெருங்கிக் கொண்டிருந்த அவர் பெரும் நிலக்கிழார் பரம்பரையில் தோன்றிய போதிலும் ரஷ்ய நாட்டுத் தொழிலாளர் புரட்சிதனை தம் மனதார வரவேற்ருர். அவர் தம் எழுபதாம் ஆண்டினிலே பொதுவுடைமைத் தத்துவத்தின் நடைமுறைச் சோதனையை நேரடியாகக் கண்டுவர ஏழு கடலைக் கடந்து ரஷ்ய நாட்டிற்குச் சென்ருர். மார்க்ரெட் சாங்கர் என்பவர் இவரைச் ''சுதந்திர நோக்கும், புத்துணர்ச்சியுமுள்ள ஓர் ஒப்பற்ற இந்தியன்'' என வர்ணித்தார். ஆத்மீகத் தன்மையும் ஆழ்ந்த மதப் பற்றும் உள்ள அவர் 'குடும்பக்கட்டுப்பாட்டுப் பிரசாரம் செய்வோருடனும், இன்றைய நிலையில் இந்தியாவின் தேவைகளில் 'குடும்பக் கட்டுப்பாடு' இன்றியமையாத தொன்று எனக் கருதுபவர்களின் கூற்றையும் உற்சாகத்துடன் ஒத்துக்கொண்டார். இயற்கையிலேயே நடைமுறைவாதியான (realist) அண்ணல் தாகூர் அவர்கள் 'சுயக் கட்டுப்பாடு' என்ற உறுதியற்ற நெறியின்மூலம் பரந்த அளவில் நாட்டில் குடும்பக் கட்டுப்பாட்டைப் பரப்ப முடியாது எனக் கருதினுர். வளரும் மக்கள் தொகையினைக் குறைக்கப்பயனுள்ள வழி ஒன்று இருக்குமானுல் அது விஞ்ஞான முறையினை விவேகமாகவும் சீராகவும் பயன்படுத்துதல் மூலமே ஆகும் எனக் கூறியுள்ளார்.

நமது மொழியின் எழுத்தினை இலத்தீன் மொழியின் எழுத்து வடிவமாக்குவதில் (romanisation of the scripts) அவர் நம்பிக்கை கொண்டிருந்தார், ஆயினும் இக்கருத்தினை அவர் அதிகாரபூர்வமாக வெளியிட்டுள்ளாரா என நான் உறுதியாகக் கூறுவதற்கில்லை. அவர் தம் வாழ்க்கையின் இறுதிக் காலத்தில் கல்கத்தா சர்வகலாசாலைக்கு, வங்காள மொழிப் பரீட்சை என்னும் புத்தகம் எழுதுவதில் ஈடுபட்டிருந்த அவரை அப்புத்தகத்தில் இலத்தீன் எழுத்து வடிவங்களைப் பின்பற்றும்படி வாதித்து எழுதவேண்டும் எனவும் இது விஷயத்தில் இது அவரது இறுதிக் காணிக்கையாக இருக்கும் எனவும் விவாதித்தேன்—வேண்டினேன். ஆனுல், அவரோ புதிய தேசீயவாதிகளின் தாக்குதல்களையும் பண்டிதர்களின் சொல்லம்புகளையும் தாங்கும் அளவிற்குத் தனது முதுமையடைந்த எலும்புகள் உறுதியாக இல்லை எனப் பதிலளித்தார். மேடைப் பேச்சு மூலம் ஒரு தனி இனத்தாரின் வாழ்க்கையில் அடிப்படை மாற்றத்தைச் செய்ய இயலாது. ஐந்து பேர்கள் கூடிவிட்டால் ஆறுவிதமான மாறுபட்ட கருத்துக்களை எழுப்புவார்கள் என அவர் கூறுவதுண்டு. ''அப்படிப்பட்ட மாற்றங்களுக்கு ஒரு 'கமால் பாட்சா' தேவை. ஆனுல், ஏழை ரவிதாகூர் ஒரு கமால் அல்லவே'' எனவும் கூறுவார்.

புதுமையின்பால் விருப்பும், சோதனை செய்வதில் ஆர்வமும் உள்ளதானது மாற்றத்தில் ஆவல் உண்டு என்பதையே காட்டுவதாகும்.

மகாகவி தாகூரிடம் ஏதேனும் குறை இருக்குமானல் — இது குற்றமெனக் கருதப்பட்டால் — அது மறுமலர்ச்சி யின்பாலுள்ள மாருத ஆவலே யாகும். மனிதன் முதுமை அடைய அடைய அவர்களது பழக்க வழக்கங் களும், வாழ்க்கையும் நிர்ணயிக்கப் பட்ட வழிகளில் செல்வதையே பெரும்பாலும் பார்க்கின்ருேம். ஆனல், தாகூர் அவர்களோ இப் பொதுப்படையான உலக நியதிக்கு முற்றிலும் விதிவிலக்காக விளங் கினர்.

பிரதி வாரமும் அன்னரின் அறை யின் அமைப்பின் மாற்றத் திட்டம் தீட்டுவார். பின்னர் அத்திட்டத் தினை மற்றவர்கள் சம்மதித்து ஒத்துக் கொள்ளும் முறையில் விவாதிக்கவும் செய்வார். இவர் தமது மனதைக் கவரக் கூடிய தாக எது இருந் தாலும் அதை உறுதியாகப் பின் பற்றக் கூடியவராக இருந்தார். இவ் வித மாற்றமா னது வெறும் கற்பனு சக்தியினல் ஏற்பட்டதல்ல. ஆனல், அம்மாறுதல் ஒரு தேவையின் காரணமாகத்தான் ஏற்பட்டது என் பதை எங்கட்கு நிரூபிப்பதில் தனிப் பட்ட மகிழ்ச்சி கொள்வார். அவரது உணவு விசயத்திலும் இம்மாதிரி மாற்றத்தைக் காணலாம். சைவமும் அசைவமுமான உணவுகளை அடிக்கடி மாற்றி வந்தார். சமைத்த உணவை உட்கொள்ள வேண்டும் என்ற நிய தியை இயற்கை அன்னை மனிதனுக்கு விதிக்கவில்லை என அவர் நம்பினர். இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை பச்சைக் காய்கறிகளையும், கீரையை யும், உருளைக் கிழங்கையும் உட் கொள்வார். எங்களுக்கும் அவருக் கும் நல்ல காலமாக இச் சோதனை நிலைத்த தில்லை. தான் மட்டும் அனுபவிக்கும் சோதனையில் திருப்தி கொள்ளாத அவர், புலால் உண வில் பற்றுள்ள எனக்கும் பச்சைக் காய் கறி வகைகளில் கணிசமான பங்கைக் கொடுத்தனுப்புவார். இவ் வாறு கொடுத்ததுமட்டு மல்லாமல் நாங்கள் அதைச் சுவைத்துப் புசித் தோம் என்று எங்களை நம்புமாறும் செய்வார். இவ்வுணவின் சத்தின் தன்மையைப் பற்றிய எவ்வித மறுப் பையும் எழுப்ப இயலாதவாறு செய் துவிடுவார். ஆயுர்வேத மருத்துவ முறைப்படி தயாரிக்கப்பட்டதும், இரத்தத்தைச் சுத்தி செய்வதுமான வேப்பம், சித்திரத்தைப் போன்ற ஐந்து வகைசெடி கொடிகளிலிருந்து, வேர்களிலிருந்து தயாரிக்கப்பட்ட கியாழத்தை ஒரு பெரிய கிண் ணத்தில் ஊற் றிச் சாப்பிடு வார். இன்பச் சுடர் மிளிரும் கண்களுடன் ஜாடை காட் டிய வண்ணம் சில வேளைகளில் எங்களையும் அப் பானத்தை அருந்தச் செய்வார். பிரி தொரு சமயம் இதை அருந்துபவரது நிறம் மாறுபடும் என்ற அம்பை என் மீது எய்தார். காரணம், சாதாரண மாகக் கூறின் எனது நிறம் அவ்வளவு வெண்மை யல்ல.

தாகூரின் பொன்மொழிகள்

தூசு மக்களை வேறுபடுத்தி மதிப் பைத் தருவ தில்லை — பெரியவர்களை யும் சிறியவர்களையும் ஒரே வகையி லேயே துன்புறுத்துகிறது.

* *

காதலும் இறப்பும் தம் இலக்கு களை மிகவும் கவனித்துத் தேர்ந் தெடுப்ப தில்லை.

சாந்திநிகேதனத்தைக் காணச் செல்வோர் பெரும்பாலோர், அவர் வசித்து வந்த பகுதியான உத்தரா யணம் என்னுமிடத்தில் பல கலைக் கட்டிடங்களையும் பல்வகை வடிவங் களைக் கொண்ட குடிசைகளையும் காண்பர். ஒரு குடிசையிலிருந்து மற்ருெரு குடிசைக்கு அவர் அடிக்கடி மாறிக்கொண்டே இருப்பார். குரு

தேவருக்கு மறுமலர்ச்சியிலும் மாற்றத்திலும் வற்றாத ஆவலிற்கு இது ஓர் எடுத்துக்காட்டு. அவர் பிரயாணம் செய்வதில் மிகுந்த ஆர்வம் உடையவர். அந்திக் காலத்தில் அவரது உடல்நிலை குறைவான காரணத்தால் பிரயாணம் செய்ய இயலாத நிலையில் இருந்தார். இத் தருணத்தில் குடிசைக்குக் குடிசை மாறுவதானது அதிகமாகிவிட்டது. கவிஞருடன் பிரயாணம் செய்வதென்பது சிரமம் மிகுந்த காரியமாகும். கடைசி நேரத்தில் பிரயாணங்கள் ஒத்திப் போடப்படும். அவரது பிரயாணங்கள் நிஜமாக மேற்கொள்ளும்வரை உறுதியானதாகக் கூற இயலாது. இரண்டுமுறை வாங்கிய பிரயாணச் சீட்டுக்களைத் திருப்பிக் கொடுத்ததும் இருமுறை வெறுமனே திரும்பி வந்ததும் என் மனக் கண்முன் நிற்கின்றது.

''பாபு தனது மனதை அடிக்கடி மாற்றுவார் என்று உங்கட்குத் தெரியுமல்லவா?'' எனக்கூறி அநேக எதிர்ப்புக்களில் தப்பித்துக்கொள்வார். இவ்வாறு அவர் கூறும் சாக்குப்போக்கிற்கு ஒரு கதையே உண்டு. மகா கவிக்கு மாற்றத்தில் உள்ள விருப்பமானது அவரது இரத்தத்தில் ஊறிப்போன குணமாகும். இவரது பாட்டனார் இளவரசர் துவாரகநாத தாகூர் ஐரோப்பாவிற்குச் சென்ற முன்னோடி இந்தியர்களில் ஒருவராகத் திகழ்ந்தார். இரண்டாவது முறை அவர் இங்கிலாந்திற்குச் சென்றபோது அவர் மரணமடைந்துவிட்டார், கென்சால் கிரீன் மயானக்கரை எனும் இடத்தில் இவரை அடக்கம் செய்தனர்.

இவர் எப்போதும் சமுதாயத்தின் உச்ச நிலையில் உள்ளவர்களுடன் கூடிக் குலாவுவார். இங்கிலாந்தில் இவருக்கிருந்த அலுவல்களின் அன்றாட நிகழ்ச்சிகளை இவரது செயலாளராக இருந்த கிஷோரிலால் சட்டர்ஜீயின் கடிதங்களின் மூலம் தெரியவருகின்றோம். நல்லமுறையில் பழகும் பழக்கங்கள் இவருக்கு மிகுதியாக இருந்ததாகவும், இவரது விலையுயர்ந்த ஆடை ஆபரணங்களையும், வேலைப்பாடமைந்த விலையுயர்ந்த காஷ்மீர் சால்வையையும், அலங்கரிக்கப்பட்டிருந்த எடுப்பான தலைப்பாகையையும் நவநாகரிக உலகில் பலரும் விரும்பினர். அவற்றிற்கு மிக்க தேவை (demand) ஏற்பட்டது. பதினைந்து தினங்கட்கு ஒருமுறை வீட்டிற்கு அனுப்பக்கூடிய கடிதத்தில் துவாரகநாத் தாகூரை எதிர்நோக்கியிருக்கும் நீண்டதோர் நிகழ்ச்சிப் பட்டியலை அனுப்புகின்றவர், ''திட்டமாக ஏதும் கூறுவதற்கில்லை, ஏனெனில் பாபு தனது மனதை அடிக்கடி மாற்றிக்கொள்கின்றார்!'' என்று கடிதத்தின் இறுதியில் குறிப்பிடுகிறார். இதேபோல நூறு வருடங்கட்குப் பின் கவிஞருடன் சுற்றுப் பிரயாணம் செய்யுங்கால் 'திட்டவட்டமாக எதுவும் கூறுவதற்கில்லை. குருதேவரது மனம் அடிக்கடி மாறும் என்பது உங்களுக்குத் தெரிந்ததுதானே'! என நானும் சாந்தி நிகேதனத்தி லுள்ளோருக்கு எழுதி யிருக்கின்றேன்.

ஆனால், மாணவர்களிடமும், அவரது சகாக்களிடமும் அவருக்கிருந்த பெருந்தன்மையான பற்றுதலில் என்றுமே மாறுதல் ஏற்படவில்லை. நான் அறிந்த இவ்வையத்து மாந்தருள் பேரன்பு கொண்ட மனிதர் அவரே. ஓர் ஒப்பற்ற மனிதரும் ஆவர். எவ்வகையிலும், எதிலும் அவர் ஒரு சீலர், ஒரு சான்றோர். வற்றாக் கடல்போல் ஆழ்ந்த மனிதாபிமானமும் நம்ப இயலாத அளவு இரக்கச் சிந்தையும் உள்ளவர். அப்பெரியார் இவ் வையகத்தே அவதரித்த காரணத்தால்தான் இன்று நம் வாழ்க்கையில் பசுமையும் இனிமையும் தென்படுகின்றன. ●

நான்கண்ட தாகூர்

திரு. தே. கி. முத்துவெங்கிட்டராமன், B. A., D. S S. A.

இரவீந்திரரைப் பற்றிக் கேள்விப் பட்டது முதல் அவர் நிறுவிய சாந்தி நிகேதனத்தைப் பார்க்க வேண்டு மென்ற பேரவா என்னுள் புதைந்து கிடந்தது. எங்கள் பள்ளியில் இருந்து விடுமுறையில் கல்கத்தாவிற்கு உல் லாசப் பயணம் சென்றோம். அங்கு பார்க்க வேண்டியவைகளைப் பார்த்து விட்டு எங்களது திட்டப்படி சாந்தி நிகேதனத்தைப் பார்க்கச் சென் றோம், 1941–ஆம் ஆண்டினிலே.

புகழ் பெற்ற சைத்ரிகர் திரு. நந்த லால் போஸ் அவர்களிடம் கலா பவனத்தில் ஆசிரியராகப் பணி யாற்றி வரும் தமிழன்பர் திரு பெரு மாள் அவர்கள் எங்களை வரவேற் றுப் பார்க்கவேண்டிய எல்லா இடத் திற்கும் அழைத்துச் சென்று காண் பித்தார். அன்று மாலையே ஊர் திரும்புவதாக இருந்தது எங்களது திட்டம். ஆனால், திரு. பெருமாள் அவர்கள் அன்று இரவு நடைபெற இருக்கும் கலா நிகழ்ச்சியையும் நாட கத்தையும் பார்த்துவிட்டுச் செல் லுங்கள் என்று கட்டாயப் படுத்தி னார். எங்களது ஆசிரியர் அதற் கிணங்கவே அங்கு தங்கும் வாய்ப்பு எங்களுக்குக் கிடைத்தது. சாந்தி நிகேதனத்து இயற்கை அழகை நன்கு கண்டு மனமகிழ்ந்தோம். இயற்கை எழிலும் பெரிய பெரிய மாமரங் களும், சால் மரங்களும் ஆலும், வேலும், ஏனைய செடி, கொடிகளும் நிறைந்து இருக்கின்ற வனாந்தரத் தில் அமைந்திருக்கும் சாந்தி நிகே தனம் தன் பெயருக்கேற்ப அமைதி இல்லமாகவே திகழ்கின்றது.

அன்பும், பண்பும், கலையும், கண் ணியமும், அமைதியும், கருணையும் அந்தச் சுதந்திர சூழ்நிலையிலே ஒன் றரக் கலந்து திகழ்கிறது.

எதிர் நோக்கியிருந்த மாலை நேர மும் வந்தது, கலா நிகழ்ச்சிகள் ஆரம் பமாயிற்று. உதட்டிலே சாயம் தீட்டி மேனி தெரியும் மெல்லிய ஆடையை அணிந்து குதிகால் அணியை மாட் டிக்கொண்டு குதிகால் எவ்வளவு உயர்ந்திருக்கிறதோ அதற்குத் தக்க வாறு நாகரிகமும் மனிதத் தன்மை யும் உயர்ந்து விட்டதாக மனப்பால் குடிக்கும் மாதரைப்போல் அல்லாது இயற்கை அழகினிலே அடக்க ஒடுக் கத்துடன் நாரீமணிகள் நாட்டிய மாட கலா நிகழ்ச்சிகள் ஒன்றன்பின் ஒன்றாக ஆரம்பமாயின. பின்னணிப் பாட்டும் ஆடை யலங்காரமும் காம உணர்ச்சியைத் தூண்டாது கலை உணர்ச்சியைப் பிரதிபலித்தது.

திறந்தவெளி அரங்கினிலே குத்து விளக்குகளும், அகல் விளக்குகளும் அங்கங்கே பல சுடர்விட்டன. பழ மையும், புதுமையும் நட்புறவு கொண்டு நாட்டியமாடிக்கொண் டிருப்பதைக் காணப் பரவசமாக இருந்தது. அமைதி இல்லத்துச் சுற் றுப்புரத்தையும் சூழ்நிலையும் நேரில் கண்ட எனக்கு நம் நாட்டுக் கலாச் சாரத்தை நன்முறையிலே காக்கப் பாடுபட்டு முயன்று வரும் செம்மை யான இந்த இடந்தனிலே கல்வி கற்க வேண்டுமென்ற அவாவும், எண்ணமும் தோன்றியது. (படம் 1)

படம் 1

எது எப்படியாயினும் சரி என்று 1943-ஆம் ஆண்டினிலே சாந்தி நிகேதனத்திற்குச் சென்றேன் வரவேண்டாம் இடமில்லை யென்ற 'தந்தியுடன். விதிவிட்ட வழி என்பர் சான்றோர்; அது போலத்தானே என்னவோ நான்கு ஆண்டுகள் அந்த வங்க மண்ணில் வாழும் வாய்ப்பும் எனக்குக் கிட்டியது. வாழ்க்கை விசித்திரமானது, வியப்பானதும் கூட.

சாந்தி நிகேதனமானது கல்கத்தாவிலிருந்து நூறு கல் தொலைவில் வடமேற்கு திக்கு நோக்கி உள்ளது. பல்லாண்டுகட்கு முன்பு சிறையிலிருந்து தப்பிவரும் குற்றவாளிகளும், கொலையாளிகளும், பயங்கரவாதிகளும் இங்கு ஒளிந்துகொண்டிருப்பார்களாம். இன்று சாந்தி நிகேதனம் என்று அழைக்கப்படும் இந்த அடர்ந்த காட்டுப்பக்கலில் செல்லவே மக்கள் தயங்குவர், அஞ்சுவர். ஆயினும், இவ் வையத்து வேந்தராம் இரவீந்திரரின் தந்தை மாரிஷி தேவேந்திர நாத் தாகூர் அவர்கள் இவ்விடத்தின் எழிலையும், அமைதியையும் நோக்குற்று இவ்விடத்தையே தெய்வீகத் தியானத்திற்காகத் தேர்ந்தெடுத்தார். மணிக் கணக்கில் இவர் தியானத்தில் ஆழ்ந்து விடுவதுண்டு. சாந்தி நிகேதனத்தில்தான் இவருக்கு ஞானோதயம் ஏற்பட்டது. ஞானோதயம் உண்டான அந்த இடம் "சாதீம் தாலா'' என அழைக்கப்படுகின்றது. சாந்தி நிகேதனத்திற்கு வரும் பார்வையாளர்கள் இதைப் பாராமல் செல்வதில்லை.

தாகூர் புதுமையில் ஆர்வம் கொண்டவராக இருப்பினும் பழமையின் முக்கியத்துவத்தை மறக்கவில்லை. புதுமைப் பலகணியை அவர் வரவேற்றார் ஆயினும் பழமையெனும் அடிக்கல்லை அவர் ஒதுக்கி வைக்கவில்லை. மரமேறுகின்றவனின் அடிப்பிடிகள் பலமாக இருந்தால்தான் அவன் மேலே ஏறி முன்னேறிச் செல்ல முடியும் என்றும், பழமையென்னும் தளம் பலமாக இருந்தால்தான் புதுமை யென்னும் கட்டிடத்தை எழுப்ப முடியும் என்ற கருத்தையும் கொண்டவர் தாகூர். இவர் நிறுவிய விஸ்வபாரதியே இதற்குச் சாலச் சிறந்த எடுத்துக்காட்டாகும். நம் நாட்டின் கலாச்சாரத்தின் அடிப்படையிலே, வனாந்தரத்தில் வாழ் முனிவர்கள் நிறுவிய குருகுலத்தைப் போல் இவர் தனது ஆசிரமத்தை நிறுவினார். உலக அறிஞர்கள் பலர் அழைக்கப்பட்டார்கள் இங்கு வர.

''செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத் தேன்வந்து பாயுது காதினிலே, எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே.'' எனப் பாரதி பாடியதுபோல், இந்த இனிமையற்ற வரண்ட உலகினில் சாந்தி நிகேதன் என்று சொல்கின்றபோதே இனிமையும், மென்மையுமானதோர் உணர்ச்சி உள்ளத்தினிலே எழுகின்றது. அவரது சாலச் சிறந்த கொள்கையைச் சொல்லாமலே சொல்கின்றது, போதிக்காமலே போதிக்கின்றது அவரது உள்ளக் கோவிலாகிய "அமைதி இல்லம்''(சாந்தி நிகேதன்).

இவர் இயற்றியுள்ள கவிதைகளும் காவியங்களும் கணக்கி லடங்கா. இம் மா கவியுடன் நெருங்கிப் பழகிய திரு. அனில் குமார் சந்தா அவர்கள் ''தாகூர் எழுதியவை யெல்லாம் ஒருவன் படிக்க வேண்டுமென்ருல், கிட்டத்தட்ட தனது வாழ்நாள் முழுமையும் இதற்கெனவே செலவிட்டாலன்றி ஒருவனுல் தாகூரின் அனைத்து நூல்களையும் படித்து முடிக்க இயலாது'' என அடிக்கடி கூறுவதுண்டு. தெய்வீகச் சக்தியின் மூலம் தான் இவ்வளவு காவியங்களையும், கீர்த்தனைகளையும் நாடகங்களையும், இயற்ற முடிந்தது. சாதாரண ஒரு மனிதனுல் இவ்வளவையும் படைத்திருக்க முடியாது. எனவே, தாகூரை ஒரு தெய்வீகப் பிறவி எனப் பல பெரியோர்கள் கருதுகின்றனர்.

இம் மா கவி மனிதாபிமானம் உடையவர், பண்புடையவர். அன்பு ஊற்று மனிதனை மனிதனுக மதிப்பவர். இவர் ''மனிதன், மனிதனை மனிதனுக நடத்தக் கற்றுக் கொள்ள வேண்டும்.'' எனப் பன்முறை கூறியுள்ளார். இவர் இயற்றியுள்ள பாக்களும், கவிதைகளும் காலத்தைக் கடந்தவை, கருத்து மிக்கவை. தியாகராயர் கீர்த்தனைபோல் உண்மையை உணர்த்துபவை.

நெருப்பிற்குக் கரையான் பிடிக்குமா? என தியாகராயர் தனது கீர்த்தனை மூலம் எழுப்பிய குரல் போல பொருள் செறிந்த பாக்கள் பல இயற்றி யுள்ளார் தாகூர்.

''உன் அழைப்பினைக் கேட்டு உன்னைப் பின்பற்றி யாரும் வாராவிடினும், தன்னந்தனியே முன்னேறிச் செல்.'' எனப் பாடியுள்ளார். கடினமான கருத்துக்களையும், சிக்கலான சிந்தனைச் செல்வங்களையும், ''போற்றுபவன் போற்றட்டும், ஏசுகின்றவன் ஏசட்டும்; மனம்தளராதுமுன்னேறிச் செல்ல வேண்டும்'' என்ற உயர் தத்துவத்தை எளிதாகவும் இனிமையாகவும் எடுத்துக் கூறியிருக்கின்ருர் கற்பனைக் களஞ்சியமாகிய நம் கவி.

இத் தருணத்தில் பாரதியாரின் ''இச்சகத்தி லோரெலாம் எதிர்த்து நின்ற போதிலும் அச்சமில்லை, அச்சமில்லை'' என்ற வீர கானம் நம் மனக்கண் முன் வந்து நிற்பது இயற்கை. இவரது பாக்கள் பல வகை கொண்டவை. வைகறையில் பாடும் பாக்கள் உள. அந்தி வேளைப் பாடல்களும் உள, கார் காலத்திற்கு எனவும் வசந்த காலத்திற் கெனவும் கோடைகாலத்தில் பாடும் பாக்களும் பல இயற்றியுள்ளார். இவர் இயற்றிய பாக்களை யெல்லாம் திரட்டி ''கிதபிதான்'' பாமாலை என்ற தலைப்பில் வெளியிடப்பட் டிருக்கின்றது.

இயற்கையின் தத்துவத்தில் ஆழ்ந்த பற்றுதல் கொண்டவர் தாகூர். இயற்கையினை ஒட்டியே கல்வி கற்பிக்கப்பட வேண்டும், அப்பொழுதுதான் அது மக்களது உள்ளத்தையும், உடலையும், கற்பனைத் திறனையும் ஒன்ருக இயக்க வைத்து மனிதனுக்கு முழுவளர்ச்சியும் சிந்திக்கும் தன்மையும் கொடுக்கும்.

''புத்திமான் பலவான் ஆகலாம்; ஆயினும் கருணையின் மூலம்தான் நாம் பூரண பக்குவ நிறைவை அடைகின்ருேம். ஆனுல், இம்மனித மாண்பானது நம் பள்ளிகளில் இருந்து ஒதுக்கப்பட்டு நசுக்கப்பட்டு வருவதை நாம் பார்க்கிருேம், வாழ்வை விட்டு விலகி நிற்கும் வெறும் விஷய அறிவை மட்டும் புகட்டாது இயற்கையின் எல்லாப் படைப்பிடத்தும் ஒன்றரக் கலந்து உலகத்தோடு நம் வாழ்க்கையை ஒட்டியதாக செய்வதே, சிறந்த கல்வியின் சீரிய நோக்கமாக இருக்க வேண்டும்''

எனக் கருதுகின்றார் தாகூர். இயற்கையின் லீலைகள் யாவற்றையும் உணர்ந்து சுவைத்து மகிழ வேண்டும் என்பது. இவரது கொள்கை.

இக்கருத்தினை வள்ளுவர் கூறிய ''உலகத்தோடு ஒட்ட ஒழுகல்; பல கற்றும் கல்லார் அறிவில்லாதார்'' என்ற வாக்குடன் நன்கு ஒப்பிடலாம். ''மெய்ப் பொருளின் ஐக்கியத்தினை (The unity of truth) மனிதனுக்குக் புகட்டுவது கல்வியின் நோக்கமாகும் எனவும் காலத்தின் கருத்தைப் புரிந்து கொண்டு அதை நிறைவேற்றுவதில் ஒவ்வொரு குழைந்தைக்கும் சக்தி ஊட்டுவதாகக் கல்வி திகழ வேண்டுமே யன்றி தேசிய வேறுபாடுகளையும் பிரிவினைகளையும் ஊக்குவிப்பதாக இருக்கக்கூடாது'' எனவும், ''கருத்து கால எல்லையற்றது. ஆனால், அதன் தோற்றம்தான் புதியனவாக அமைகின்றது என்பதை கல்வி போதிக்க வேண்டும்'' என்றும் தாகூர் கருதினார். இவரது கல்வியானது பயிலும் குழந்தைகளின் உள்ளத்தினையும் வாழ்வையும் மையமாகக் கொண்டதாகும். இவ்வுயர் கருத்தை நடைமுறையாக்கவே 1901-ஆம் ஆண்டில் சாந்தி நிகேதனத்தில் ஓர் குருகுலத்தை நிறுவினார். இங்கே வகுப்புகட் கெனத் தனியாகக் கட்டிடங்கள் இல. ஓங்கி வளர்ந்த பல மரங்களினடியில் வகுப்புகள் நடைபெறும். இயற்கைக் காட்சிகள் நிறைந்த திறந்த வெளி தனிலே, அன்புடன் கலந்த தென்றல் வீச கல்வி கற்று வருகின்றார்கள் மாணவர்கள்.

பருவ காலங்கள் இயற்கையன்னை மனிதவர்க்கத்திற்கு ஈயும் அன்பளிப்பாகும். எனவே, எல்லாக் காலங்களிலும் நன்கு அனுபவித்து வாழ வேண்டுமென்று கவி கருதினார். கார் காலங்களில் மழை பெய்யும்போது அங்குள்ளோர் வீட்டிற்குள் ஓடி ஒளியாது மழையில் நனைந்து கொண்டே ஆடிப்பாடி மகிழ்வதுண்டு. மழை பெய்தால் அன்று விடுமுறைதான். கார் காலத்தில் மழை வருவது இயற்கை. அன்றும் மழை பெய்தது. எங்களது புத்தகங்களை வாரிச் சுருட்டிக் கொண்டு பக்கத்திலே உள்ள எங்கள் விடுதிக்குச் சென்றோம். சிறிது நேரத்தில் கல்லூரி மாணவர்கள் அனைவரும் மழையில் நனைந்து கொண்டே வாருங்கள் வெளியே, என்று கூக்குரலிட்டபடியே புதிதாக வந்துள்ள மாணவர்களது அறையை நோக்கி வந்துகொண் டிருந்தனர். சிலர் வெளியே வந்தனர் பலர் மழையில் நனைந்தது இல்லை. எனத் தயங்கினர். இறுதியில் கல்லூரி மாணவ, மாணவிகள் எல்லோரும் ஒருங்கே சென்றோம் இரு கல் தொலைவில் உள்ள கூவாய் நதிக்கரைக்கு. இதில் கவனிக்கவேண்டியது யாதெனில் எங்களது பேராசிரியரும், முதல்வரும் தாகூரின் செயலாளராக இருந்தவரும் தற்போது மத்திய அரசாங்கத்தின் உப அமைச்சராகவும் பணியாற்றி வரும் திரு. அனில்குமார் சந்தா அவர்களும் அவரது மனைவியாரும் ஏனைய ஆசிரியர்களும் மாணவர்களுடன் கலந்து கொண்டு மழைதனில் மகிழ்ந்ததே யாகும்.

இலைகள் உதிர்ந்து தலையில் வீழ்ந்து தரையில் வீழ்கின்ற இயற்கைக் காட்சியுடன் வகுப்பினில் வீற்றிருக்கும் போதும் சரி, மழைதனிலே நனைந்து திரிந்து சென்றபோதும் சரி, அங்கிங் கெனாதபடி பல இடந்தனிலே சுற்றித் திரியும்போதும் சரி, மனஅமைதி மன நிறைவு ஓர் திருப்தி இருப்பதை உணர்ந்தேன். இந்த உணர்விலே தான் தாகூரது உயிரைக் கண்டேன்.

போல்பூர் புகை நிலையத்தி லிருந்து இரு கல் தொலைவில் உள்ளது சாந்தி நிகேதன். சாந்தி நிகேதனில் நுழைந்

தவுடன் இந்திபவனம் இருக்கின்றது. இதற்கடுத்து சீனபவனம் இருக்கிறது. சீனத்து முக்கிய ஏடுகளும், இலக்கியங்களும் இங்கு இருக்கின்றன. பல சீனர்கள் இங்கு ஆராய்ச்சி நடத்தி வருகின்றனர். பேராசிரியர் டான்யூன்சான் என்பவர் சீனபவனத்திற்குத் தலைவராக இருந்து நடத்தி வருகின்றார். சீனபவனத்தைத் தாண்டிச் சென்றால் கல்லூரியைச் சேர்ந்த விஞ்ஞான பகுதியும் வேறு சில கட்டிடங்களும் கூட்டுறவு பண்டகசாலையும் இருக்கிறது. பண்டகசாலையின் எதிர்ப்புறம் வட்டவடிவத்தைக் கொண்ட மாடி வீடு போன்ற ஓர் உயரமான கட்டிடம் உள்ளது. இதை ''சாசக்கர்'' (தேனீர்வட்டம்) என்பர். ஓய்வு நேரத்திலும் மாலை நேரத்திலும் பல துறையில் பணியாற்றி வரும் ஆசிரியன்மார்கள் இங்கு வந்து ஒருவரோடு ஒருவர் தேனீர் அருந்திப் பழகுவதற்கெனவே இக் கட்டிடம் கட்டப்பட்டது. இங்கிருந்து கொண்டே மைதானத்தில் விளையாடுவதை நன்கு காணமுடியும்.

இந்தி பவனத்திற்கு எதிர்ப்புறம் வடக்கு நோக்கி கலாசாலையும் (சிக்ஷ பவன்) மாணவர் விடுதியும் உள்ளது. இதற்கு மேற்கே சென்றால் சிறு குழந்தைகள் பயிலும் இடமும் (சிசு விபாக்) அவர்கள் தங்குமிடமும் உள்ளது. அதை அடுத்து உயர்நிலைப் பள்ளி (பதாபவன்) உள்ளது. இதைச் சேர்ந்து மாணவர்கள் விடுதியும் உள்ளது. இதற்கடுத்தாற் போல் சின்ஹாசதன் என்றதோர் இடம் உள்ளது. இங்குதான் சாதாரணமாக நாட்டியமும், நாடகமும், கலா நிகழ்ச்சியும் நடைபெறும். இக்கட்டிடத்தின் மாடிமீது ஒரு பெரிய மணி வைக்கப்பட்டு இருக்கிறது. இது மாதா கோவிலின் மணியைப்போல் பெரிதாக இருக்கும் கீழே இருந்து கொண்டே மணியை அடிக்க முடியும். இங்கு மணியை அடித்தால் அனேகமாக சாந்தி நிகேதன் முழுவதிலும் கேட்கும். காலையிலும் மாலையிலும் தியானிப்பதற்கு மணி, உணவு நேரத்தை குறிக்க மணி, அபாயத்தைக் குறிக்க மணி, எனப் பலவகையாக மணி அடிக்கப்படும். (எனது ஞாபகசக்தி சரியாக இருந்தால்) ஐந்து ஐந்தாக மணி அடிக்கப்பட்டால் எங்கோ ஏதோ ஆபத்து ஏற்பட்டிருக்கிறது எனப் பொருள்படும். எல்லோரும் சின்ஹாசதனத்திற்கு ஓடிவந்து விபரம் தெரிந்து அந்த இடத்திற்கு உதவி செய்யச் செல்வர். தாகூரை கண்டதில்லை யெனினும் இதுபோன்ற நிகழ்ச்சியிலே அவரது அன்புக் கட்டளையை கண்டிருக்கிறேன் நான்.

சிசுவிபாகிற்கு எதிர்புறம் உள்ளது பார்வையாளர்கள் தங்கும் விடுதி. இதைச் சுற்றி நிறைய மரங்கள் அடர்ந்து உள்ளது. "அம்ரகுஞ்சு" என்ற மாஞ்சோலை உள்ள இடத்தில் தான் பல முக்கிய நிகழ்ச்சிகளும், வரவேற்புகளும், பட்டமளிப்பு விழாக்களும் நடைபெறும். இவ்விடமானது பார்வையாளர் விடுதிக்கும், சிசுவிபாகிற்கும் மையத்தில் உள்ளது. பார்வையாளர் விடுதிக்கு எதிர்புறம் வடக்கே அமைந்துள்ளது மந்திர் என அழைக்கப்படும் தேவாலயம். இவ்வாலயம் புதுமையானது. **எம்மதமும் சம்மதம், உண்மைதான் அந்த மதம் என்ற கவிஞரின் கருத்தை பிரதிபலிப்பது போல்** அமைந்துள்ளது, இக் கோவில். நீண்டசதுர வடிவமாய் ஒரே பெரிய அறையாய் இருக்கின்றது. கோவிலைச் சுற்றிக் கண்ணாடியிலான சுவர்களும், கதவுகளும், பலகணிகளும் உள்ளன. இங்கு சிற்பமோ வடிவ வழிபாடோ கிடையாது. இரண்டொரு கீர்த்தனைகளைப் பாடி சிறிது, சொற்பொழிவும் தெய்வீக வழிபாடும் நடைபெறும். வாராந்திர விடுமுறையன்று காலையிலும், விசேட தினங்களிலும் இதுபோல் தெய்வ வழிபாடு நடை



படம் 2

பெறும். பள்ளிக்கூடத்திற்கு எதிர் புறம் வாசகசாலை கட்டிடம் அமைந்துள்ளது. (படம் 2) இதற்குப் பின்புறமும் பக்கலிலும் ஆசிரியர்கள் தங்கும் விடுதி உள. வாசகசாலைக்கு மேற்கே சாந்தி நிகேதனது மத்திய அலுவலகம் உள்ளது. இதற்கு மேற்கே உணவு விடுதி இருக்கிறது. உணவு விடுதிக்கு எதிரில் நான்கு தெருக்களும் சந்திக்குமிடத்தில் சிறியதொரு காட்சி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு சித்திரங்களும் கவிதைகளும், பொம்மைகளும் காட்சிக்கு வைக்கப்படும். இதற்குப் பின்புறம் பெரியதொரு விளையாட்டு மைதானம் உள்ளது. மைதானத்தைத் தாண்டி தெற்கே சென்றால் பூர்வப்பள்ளி என்ற இடம் இருக்கிறது. உணவு விடுதிக்கு மேற்குப் பக்கம் பெண்கள் தங்கும் விடுதி இருக்கிறது. இதைத்தாண்டிச் சற்று மேற்கே சென்றால் கலா பவனம் தென்படும். இங்கு மாணவ மாணவிகள் சித்திரம் சிற்பம் போன்ற கலைகள் பயின்று வருகின்றனர். இதையும் தாண்டிச் சென்றால் கலா பவனத்து மாணவர் விடுதி உள்ளது. இதற்கடுத்து சங்கீத பவனம் உள்ளது. இங்கு மாணவ மாணவிகள் சங்கீதம் நாட்டியம் முதலியன பயின்று வருகின்றனர். இரவீந்திர சங்கீதம் இங்கு போதிக்கப்படுகிறது.

பார்வையாளர் விடுதிக்குச் சற்று மேற்கே உள்ளது "சாதீம்தாலா" என்று அழைக்கப்படும் இடம். அமைதி மிகுந்த இந்த இடந்தனிலே தான் மாரிஷி தேவேந்திரர் ஞானோதயம் அடைந்தார். இங்கிருந்து வடக்கே சற்றுத் தொலைவில்தான் உத்தராயண் இருக்கின்றது. பரவலான இந்த இடத்தினிலே நல்லதொரு மாளிகை உள்ளது அதுதான்



படம் 3

இரவீந்திரரின் இல்லமாகும். இதைச் சுற்றிலும் பெரிய பூந்தோட்டங்களும், குடிசைகளும் உள. பிரமாண்டமான மாளிகை இருப்பினும் அங்கு இருக்க விரும்பாது இவர் வசிப்பதற்கென சிறியதோர் வீடு நல்ல கைத்திறனைக் காட்டும் நூதன முறையில் அமைக்கப்பட் டிருக்கிறது. காந்திஜீ அவர்களுக்கெனவே மிகவும் எளிமையான ஆனால், சுவர்களில் சிற்ப, வேலைப்பா டமைந்த குடிசை ஒன்று கட்டி வைத்துள்ளார்கள். இப்பக்கம் மாடி வீடு ஒன்று உள்ளது. சூரிய உதயத்தைக் கண்டு

மகிழ குருதேவ் அவர்கள் அந்திய காலத்தில் இந்த மாடிவீட்டில்தான் இருந்தார்கள். தாகூரது பொருட் காட்சிசாலை ஒன்றும் இங்கு நிறுவி யுள்ளார்கள். தாகூர் எழுதிய, உப யோகித்த பல பொருள்களையும், புத்தகங்களையும், நோபல் வெகு மானச் சின்னத்தையும் இங்கு பார் வைக்கு வைத்துள்ளனர்.

கள்ளம் கபடமற்ற குழந்தை உள் ளம் கொண்ட கவிஞர் குழந்தை களின் உள்ளத்து உணர்ச்சிகளை ஊடு ருவி, தான் பெற்ற இன்பம் இவ்வை யமும் பெற என மிகச்சிறந்த முறை யில் அவைகளை உலகத்துக்கு அர்ப் பணித்துள்ளார்.

மண்ணில் விளையாட விருப்ப முள்ளவர்கள் குழந்தைகள். அவர் களது உள்ளமும் உடலும் மலர் களைப்போல் சூரிய வெளிச்சத்தினை யும், காற்றினையும் பெற ஏங்கு கிறது.

ஆடம்பரமான ஆடைகளையும் விலை யுயர்ந்த அணிகலன்களையும் அணிந்துள்ள குழந்தை ஆடைகள் கெட்டு விடுமே எனப் பயந்து உலகத் தவரிட மிருந்து ஒதுங்கி நிற்கின்றது. விளையாட்டில் உற்சாகத்தை இழக் கின்றது.

மாதாவின் மடியாகிய மண்ணி லிருந்து ஒருவனைப் பிரித்துத்தனித்து வைக்குமெனில், மனித வாழ்க்கை யென்னும் சந்தைக்குள் நுழையும் உரிமையைப் பறிக்கும் எனில், அன்னையே! அந்த ஆடை அலங்கார பந்தம் பயனற்றது, வீணனது, வேண்டாம்.

தாகூர் ஓர் பண்பு கொண்ட பாட கர். சிறந்த சைத்ரிகர் குழந்தை யின் தூய உள்ளத்தைப் புரிந்து கொண்ட தந்தை. இவர் ஒரு ஞானி மட்டுமல்ல ஆராய்ந்து தேர்ந்த விஞ் ஞானி. அறிவுக் களஞ்சியம்.

''அன்பிற்கும் உண்டோ அடைக் கும் தாழ்'' என்ற பண்பினிலே வந்த அன்புத் தெய்வம். புத்தரைப்போல் யாவற்றினிடமும் கருணை கொண் டவர். கம்பனைப்போல் கவிதை நயம் கொண்டவர். காந்தியைப் போல் நாட்டுப்பற்றுக் கொண்டவர். வள்ளுவனைப்போல் சொல் நயம் மிகுந்தவர். பாரதியைப்போல் இயற்கைப் பற்றுள்ளவர். நக்கீர ரைப்போல் அஞ்சா நெஞ்சம் கொண் டவர். இவை யாவும் ஒருங்கே அமையப்பெற்ற ஒப்பற்ற கவி ரவீந் திரரை வையத்து வேந்தர் என அழைப்பது மிகையாகாது. இவரது பாக்களிலும், பாடல்களிலும் கருத் துக்களிலும், கற்பனைகளிலும் மனித அபிலாசைகளும் விருப்பு, வெறுப் பும் நன்கு சித்தரித்துக் காட்டப்படு கின்றன.

நான் அவரது உடலைக் கண்ட தில்லைதான். ஆனல், அவரது உள்ளம் அங்கே நடமாடுவதைக் கண்டேன்.

அவரது அன்பை நான் பெற வில்லைதான். ஆனல், அவரது உயர்ந்த பண்பை அங்கே கண்டேன். அவரது குரலை நான் கேட்டதில்லை தான். ஆனல், அவரது கருத்தை அறிந்தேன் நான் அங்குள்ள மக்க ளிடம்.

அவரது புன்னகையைப் பார்த்த தில்லைதான். ஆனல், அவரது எண்ணத்தைப் புரிந்துகொண்டேன் அவரது படைப்பின் மூலம்.

அவரது உருவத்தை நான் நோக் கியதில்லைதான். ஆனல், அவரது ஆத்மா சாந்தி நிகேதனத்து இயற்கை எழிலிலே, கலா நிகழ்ச்சிகளிலே, ஒவ் வொன்றிலும் எங்கும் பிரதிபலிப் பதைப் பார்த்திருக்கின்றேன். ●

வழியனுப்புதல்

சீவகனைக் காப்பாற்றிய சுதஞ்சணன் அவனைச் சுமந்தவண்ணம் தன் மலையின்மீது ஏறினான். அக்காட்சி சந்திரன் கதிரவனைச் சுமந்து கொண்டு மலையேறுவதுபோல இருந்தது என்பர் திருத்தக்கதேவர்.

“கானமர் அருவிக் குன்றிற்
காய்கதிர் சுமந்தோர் திங்கள்
மேனிமிர்ந் தேறி யாங்குத்
தேவன்வெற் பேறி னானே”

சீவகன் சிறைப்பட்டபோது அதற்காக அவன் வருந்தவில்லை; இப்போது சுதஞ்சணனால் விடுவிக்கப்பட்டபோது அதைக் குறித்து அவன் மகிழவும் இல்லை. அவை யெல்லாம் தன் ஊழ்வினையால் நேர்ந்தவை யென்று கருதினான்.

“விலங்கிவில் உமிழும் பூணன்
விழுச்சிறைப் பட்ட போழ்தும்
அலங்கலந் தாரி னான்வந்
தருஞ்சிறை விடுத்த போழ்தும்
புலம்பலும் மகிழ்வும் நெஞ்சிற்
பொலிதலு மின்றிப் பொன்னார்ந்
துலங்கலந் துயர்ந்த தோளான்
ஊழ்வினை யென்று விட்டான்”

(1167)

உயர்ந்தவர்களே இத்தகைய சமநிலை மனமுடையவராவர். சீவகனைச் சுதஞ்சணன் தன் நகர்க்கு அழைத்துச் சென்று அன்போடு இன்புறுத்தினான். தெள்ளிய நீரினால் அவனை நீராட்டி, மணிகளாலாய அணிகலன்கள் பல அணிவித்தான். பின்பு பொன்னாலும் முத்தாலும் ஆய குடை நீழலில் தன் இரு பக்கமும் கன்னியர் நின்று கவரி வீசச் சீவகன் அமர்ந்து இசை நாடகம் கண்டு மகிழ்ந்தான். சீவகன் அழகு சுதஞ்சணனின் தேவியர் கண்களைக் கவர்ந்தது. அவனோடு சுதஞ்சணனுக்கு எங்ஙனம் நட்பு உண்டாயிற்று என்று அவர்கள் சுதஞ்சணனை வினவினர். ‘என் நாய்ப் பிறவியை நீக்கி இத் தேவ உடம்பை எனக்கு இவன் அருளினான்’ என்று சுதஞ்சணன் விடை கூறினான். அதைக் கேட்டதும் அத் தெய்வ மகளிர், “இவனுடைய பகைவனை அழித்து நிலமகளை இவனுக்கு நாம் திருமணம் செய்து கொடுப்போம்” என்றனர். அதற்குச் சீவகன், “பொருகளத்தில் யானே என் பகைவன் உயிரைப் போக்குவேன். இதைப்பற்றி நீங்கள் எண்ணவும் வேண்டுமோ?” என்று கூறினான்.

சீவகசிந்தாமணி

முன்கதைச் சுருக்கம் :

ஏமாங்கத நாட்டு மன்னனாகிய சச்சந்தனை அவன்தன் முதலமைச்சன் கட்டியங்காரன் கொன்று அரசியலைக் கைப்பற்றினன். சச்சந்தனின் தேவியாகிய விசையை மயிற்பொறியில் ஏறி அரண்மனையிலிருந்து தப்பிச்சென்று, சுடுகாட்டில் ஓர் ஆண் மகவை ஈன்றனள். கந்துக்கடன் என்ற வணிகன் அக்குழந்தையை எடுத்துச்சென்று சீவகன் என்று அதற்குப் பெயரிட்டு வளர்த்து வந்தனன். நாளடைவில் சீவகன் பல கலைகளிலும் அறிவு நிரம்பி ஒப்பற்ற வீரனாகத் திகழ்ந்தான். ஆயர்தம் பசுக்களைக் கவர்ந்து சென்ற வேடர்களை எதிர்த்துப் பசுக்களை மீட்டு ஆயர்களுக்குத் தந்தான். ஆயர்தம் தலைவனாகிய நந்தகோன் மிக மகிழ்ந்து தன் எழில்மிக்க மகள் கோவிந்தையைச் சீவகனுக்கு அளித்தனன். சீவகன் அவளைத் தன் உயிர்த் தோழனாகிய பதுமுகனுக்கு மனைவியாக்கினன். பின்பு சீவகன் காந்தருவதத்தை என்ற வித்தியாதர மகளை யாழில் வென்று அவளை மணம் செய்துகொண்டான்.

நீர் விளையாடச்சென்ற குணமாலை, சுரமஞ்சரி என்ற இரு தோழியரும் தத்தம் சுண்ணமே சிறந்தது எனச் சொற்போர் புரிந்தனர். குணமாலையின் சுண்ணமே சிறந்தது எனச் சீவகன் தீர்ப்புக் கூறினன். சுரமஞ்சரி சீற்றங்கொண்டு ஆடவரைக் கண்ணெடுத்தும் பார்ப்பதில்லை என்று சூளுரைத்து அகன்றாள். எனினும், சுரமஞ்சரி சீவகன்பால் தீராக் காதல்கொண்டு, மணப்பதாயின் அவனையே மணப்பதாக உறுதி பூண்டாள்.

அரசன் பொன்னிலே பிறக்கும் விழாவை முன்னிட்டு மக்கள் அனைவரும் நீராடச் சென்றனர். சீவகனும் நீராடச் சென்றான். அவ்விடத்தில் அந்தணர் சிலரால் கொல்லப்பட்ட நாயின் காதில் அவன் ஐம்பத மந்திரத்தை ஓத அது சுதஞ்சணன் என்ற தேவனாக உருமாறி, சீவகனை வாழ்த்தி அவனுக்கொரு வரத்தையும் கொடுத்துச் சென்றது.

வீதியிலே சென்று கொண்டிருந்த குணமாலையைப் பட்டத்துயானை எதிர்த்துச் செல்வதைச் சீவகன் கண்டு அவ்யானையை அடக்கி அவளைக் காப்பாற்றினன். அவள் அவன் மீது காதல் மிக்கவளாய் வீடு சென்று தன் கிளியை அவனிடம் தூது அனுப்பினாள். சீவகனும் குணமாலையிடம் காதல்கொண்டிருக்கும் உண்மையைக் கிளி அறிந்து திரும்பிற்று.

கிளி வரும் வழியையே பார்த்துக்கொண் டிருந்த குணமாலையிடம், சீவகன் அவள்பால் அன்புடையனா யுள்ளான் என்ற நற்செய்தி யுடன், அவன் விடுத்த ஓலையையும் கிளி கொடுத்து அவளை இன்புறுத்தியது. மட்டற்ற மகிழ்ச்சியில் ஆழ்ந்திருந்த குணமாலையிடம் அவளுடைய செவிலித்தாய் மாமன் மகனை மணம் புரியுமாறு வற்புறுத்திக் கூற குணமாலை தன்னைக் களிற்றி நின்று காத்தருளிய சீவகனைத் தவிர வேறு யாரையும் கணவனாக ஏற்றுக் கொள்ள இயலாது என்று கூறினாள். இச்செய்தி அறிந்த குணமாலையின் தந்தை சீவகனுக்கே தன் மகளை மணம் முடித்துக் கொடுக்க முடிவு செய்தார்.

சீவகன் குணமாலையை மணந்து அவளோடு இன்பக்கடலில் ஆழ்ந்தான். தன் பட்டத்து யானையைச் சீவகன் அடக்கியதைக் கட்டியங்காரன் அறிந்து சீவகனைச் சிறைப்படுத்திக் கொண்டு வருமாறு தன் மைத்துனன் மதனனை வீரர்களுடன் அனுப்பினான். வீரர்கள் சீவகனைச் சிறைப்படுத்தி வீதி வழியே அழைத்துச் சென்றனர். சீவகன் தன் தோழனாகிய தேவமகன் சுதஞ்சணனை நினைத்தான். சுதஞ்சணன் புயலும் மழையும் உண்டாக்கிச் சீவகனைத் தன் தேவ நாட்டிற்குத் தூக்கிச் சென்றான். மதனன் கட்டியங்காரனிடம் சென்று தான் சீவகனைக் கொன்று விட்டதாகப் பொய் கூறினான்.

சீவகன் பல நாட்கள் சுதஞ்சண னின் விருந்தினனாக இருக்க விரும்ப வில்லை. எனவே, அவன் சுதஞ்ச ணனை நோக்கி, ''யான் நிலவுலகி லுள்ள மலைகளையும், காடுகளையும், நாடுகளையும், பொய்கைகளையும் என் கண்ணும் மனமுங் குளிரக் கண்டு களிக்க விரும்புகிறேன். வேற்று நாட்டுக் காட்சிகளைக் கண்டு இன் புறாதவர்கள் கிணற்றில் வாழும் மீன் களுக்கு ஒப்பாவர். எனவே, அவற் றைக் காண யான் போகிறேன்'' என்றான். சுதஞ்சணன் அவன் போதற்குரிய வழிகளைத் தெளிவா கக் கூறினான்:

''இம் மலையி லிருந்து இரண்டு காத தூரம் கடந்து சென்றால் அரண பாதம் என்ற மலை தோன்றும். அதன் அடியிடத்தில் சாரணர் பலர் இருப்பர். அவர்கள் எல்லாம் முன்பு அரசர்களாய் இருந்தவர்கள். தம் நல்வினை தீவினை ஆகிய இருவினைகளை யும் நீக்குதற் பொருட்டு அவர்கள் தம் அரச இன்பத்தைத் துறந்தவர் கள் ஆவர். இப்போது பற்றறத் துறந்தவர்களாய் அம்மலையடிவாரத் தில் உள்ளனர். அவர்கள் உள்ளம் ஒளி நிறைந்தது. அவர்களுடைய திருவடிகளை இறைஞ்சின் வன்மை யுடைய ஓர் இயக்கி தோன்றி, உன்னை எதிர்கொண்டு அழைத்துச் சென்று, இனிய உணவளித்து விருந் தோம்புவாள். அவ்விடத்தினின் றும் இருபத்தைந்து காத தூரம் கடந்து சென்றால் கங்கைக் கரை யிடத்துக் கடல்போல ஒரு காடு தோன்றும். அக்காட்டிடத்து யாரும் தனித்துச் செல்லமாட்டார்கள். அங்குத் தாமரை நிறைந்த தடா கங்கள் பல உண்டு. அவற்றின்கண் வாள் போன்ற வாளை மீன்கள் பாயும். இவற்றின் இடப் புறத்தே இருகாத தூரம் சென்றால் உயர்ந்த இரு குன்றுகளுடைய ஒரு காடு தோன்றும். அங்கே அச்சத்தைத் தரும் பேய்கள் மகளிரைப்போல் பொலிவு பெற்றுத் தோன்றுவர். அவர்கள் உன்மீது காதல் மிக்க வராய், 'யாங்கள் அறியாமல் எம் அழகிய நலங்களையெல்லாம் கவர்ந்த கள்வனே' என்று மனமுருகி வருந்து வார்கள்; வேட்கை மிகுதியினால் பழம் குழைந்ததுபோல் உடல் மெலிந்தவராய் உன்னை அணுகுவார் கள். அவர்களை முயங்கினால் உடனே அவர்கள் பேய்களாவர். அவர்களை முயங்காது அகன்று செல்க. அங் கிருந்து ஒரு காத தூரம் சென்றால் இனியதொரு நாடு தோன்றும். அங்குச் செந்நெல்லும் கரும்பும் செழித்து வளர்ந்துள்ள வயல்கள் எங்கும் நிறைந்திருக்கும். அந்நாடு பல்லவ தேயம் எனப்படும். வழி நடந்த வருத்தம் தீர அங்குத் தங்கு வாயாக. அங்கிருந்து சென்றால் கொடுமை நிறைந்த கல்வழி உண்டு. அவ்வழி யெங்கும் வேல்போன்று கூர்மையான நுனியையுடைய பருக் கைக் கற்கள் பரந்து கிடக்கும். இறந்துபட வேண்டும் என்ற விதி யுள்ளவர்தாம் அவ்வழியில் செல்வர். அவ்வழியிடத்துள்ள வெம்மையை எடுத்துச் சொல்கின்ற வாயும் வெந்து போகும். கன்றையுடைய தன் பெண் யானை வெயிலின் வெப் பத்தைத் தாங்க முடியாது என்று கருதி ஆண்யானை அதனைத் தழுவிக் கொண்டு வெயிலைத் தான் தாங்கிக் கொள்ளும். இவ்வாறே ஆண் புறா தன் பெண் புறாவைத் தழுவி அதன் மீது வெயில் படாதபடி தன் சிறகை விரிக்கும். அங்கு எங்கும் நிழல் இன்மையான் தன் பெண் மான் வெயிலின் வெப்பத்தைத் தாங்க முடியாது என்று ஆண் மான் மனங் கசிந்து, தான் நிலையாக நின்று தன் நிழலிலே பெண்மானை நிற்கச் செய் யும். யானையின் மதம் சொரிந்த நிலத்தை நீரென நினைத்து அதன் கண் வீழ்ந்த நாகப்பாம்பு வெம்மை பொறுக்கமாட்டாமல் முறுக்குவிட்ட

ஒரு யோசனை தூரம் ஒளிவீசும். அம்மலையினின்று அருவிகள் மிகப் பெருகி ஆறாக ஓடும். அவ்வாற்றின் பெயர் அஞ்சனமா நதி என்பது. அம்மலையின்கண் முனிவர் தவம் செய்யும் இடமுண்டு. நன்னெறியினின்றும் தவறிய சில தவசிகள் அவ்விடத்தே உள்ளனர். அவர்கள் நீண்ட சடையையுடையவர்கள். ஐம்பொறி யாசையால் தளர்பவர்கள். அவர்களைக் கண்டு அவர்தம் தன்மையைஅறிந்து செல்வாயாக.

அம் மலையை விட்டு இறங்கிச் சென்றால் பன்னிரண்டு காத தூரம் கொன்றைக் காடாக இருக்கும். அக்காட்டிடத்து விளை நிலங்கள் பரந்து கிடக்கும். அந் நிலங்களில் அரிவாளால் வரகினை அறுப்பவர் பாடலும், யாழின் இன்னிசையைப் போல வண்டின் பாடலும் கேட்கும். அக் காட்டின் எல்லையைக் கடந்து சென்றால் நீ அழகுமிக்க தக்க நாட்டை அடைவாய். அங்குள்ள கமுக மரத்தினின்றும் உதிர்ந்த பழம் தேனிறாலைக் கிழிக்கும். இவ்வாறு கிழிபட்ட இறாலினின்றும் துளிக்கும்

கயிறு போலப் பதைபதைத்துப் போகும். இத்தகைய வழியில் புதியவராக இருப்பவர் போகக் கருதுவது அறியாமையேயாம். நீயும் அவ்வழியில் மனம் வைக்க வேண்டாம். அதைவிடுத்து நீ வேறு வழியில் சென்றால் சித்திரகூட மலையை அடைவாய். கொழுவிய பழங்கள் நிறைந்த குலை வாழை மரங்களும், மாமரங்களும், பலா மரங்களும் அங்கு நெருங்கி வளர்ந்திருக்கும். அங்குள்ள பொன்னும் மணியும்

தேனினை வாளை மீன் நக்கி வரால் மீனோடு மாறுபட்டு நிற்கும். இத் துணைச் செழிப்பு மிக்க நாட்டினைக் கடந்து சென்றால் ஒரு யாறு தோன் றும். இவ் யாற்றினைக் கடந்தால் வேட்டுவர்களின் சிறு குடிசைகள் நிறைந்த காடு தோன்றும். அக் குடிசைகளின் கால்கள் யானை மருப் புக்களினால் இயற்றப்பட்டவை. அவற்றின் கூரைகள் கவரிமானின் மயிரால் வேயப்பட்டவை யாகும். அக் காடெங்கும் உடுக்கையின் ஓசை யும், கள்ளை அரிக்கின்ற ஓசையும், யானையின் பிளிறோசையும், அருவி யின் ஒலியும், புலியின் குரல் கேட்டு அஞ்சிய மானின் குரலும், சீழ்க்கை யின் ஓசையும் நிறைந்திருக்கும். அங்கு நான்கு நீர்நிலைகள் உண்டு. ஒன்று பொற்றாமரை நிறைந்தது; மற்றொன்று இரும்பைப் பொன்னா கச் செய்கின்ற இரதமாகிய நீரை யுடையது; இன்னொன்று எல்லா நோயையும் தீர்ப்பது; நான்காவது நச்சுப் பொய்கை. எனவே, குவளை பூக்கும் பொய்கையிலேதான் நாம் நீர் அருந்தலாம். மற்றவற்றில் நீர் அருந்தலாகாது. அப் பொய்கைகளை அக்காட்டுள் வாழும் வேட்டுவர் காத்து நிற்பார்கள். அவர்கள் கையில் வில்லேந்தியவராயும் தோற் பையை யுடைய உடம்புடையவரா யும் இருப்பர். அவர்கள் விரைந்து தோன்றி வழிப் போவோரைக் கொல்வர். அப் பொய்கைகளை நாடாமல் அவற்றின் வலப் பக்கமாக நீ சென்றால், அவ் வேடுவர்கள் உன்னை நல்வினை யுடையவன் என்று கருதித் தொழுது காண்பர். அங் கிருந்து ஐந்து காத தூரம் அழகு மிக்க ஆடல் மகளின் சாயல்போல இனிமை நிறைந்ததாய் இருக்கும். அவ்விடம் நிலத்தின்மீது மாலை வேய்ந்ததுபோல முல்லை மலரும் கத்திகை மலரும் இன்னும் ஏனைய மலர்களும் நிறைந்து, கற்புடை மகளிரின் மனம்போலச் செம்மை யான நெறியுடையது., அவ்வழியில் நடப்போர்க்கு, நிலத்தின் மீதன்றித் தாதின்மீது நடப்பது போன்றிருக் கும். அவ்வழியில் ஒரு சுனை உண்டு. அது மணிகளால் இயன்ற பாலிகை என்னும் பாத்திரம் போன்று இருக் கும். அதன்கண் அழகிய மணி போன்ற மலர்கள் நிறைந்து இனிய காட்சியை நல்கும். இன்னும் அங்கே பூவிடு பெட்டிபோல (மலர்ப் படலிகை) அழகிய மலர்கள் நிறைந்த ஒரு சோலை உண்டு. இவ் வற்றை யெல்லாங் கண்டு நீ அவ் வழியே செல்வாயாக. உனக்கு வலப் பக்கமாக வனகிரி ஒன்று தோன்றும். அஃது அருவிகள் ஆர்க் கும் சோலைகளை யுடையது; சந்தி ரனைப் போல் குளிர்ச்சி பொருந் தியது; குலமகளிரின் கற்பினைப் போல் திண்மை யுடையது; அம் மலைச் சாரலில் முனிவர் உறைவர். அவர்கள் அருகப் பெருமான் திரு மொழியி னின்றும் சிறிதும் பிறழா நெறியை மேற்கொண்டவர்கள். ஆகலின் அங்கே மன்மதனது கீதத் தைத் தவிர ஏனைய இயற்கை ஒலி கள் நிறைந்திருக்கும். அம் மலை யைக் கடந்து சென்றால் பரத்தையர் நெஞ்சம் போலப் பல கிளை வழிகள் தோன்றும். அவற்றுள்ளே நீ செல் லுதற் குரிய செந்நெறியைக் கூறு வேன்; கேட்பாயாக. குவளை மலர் கள் நிறைந்த ஒரு சுனை உண்டு. அச் சுனைப் பக்கத்தில் மணிகள் பதித்த ஒரு வட்டப்பாறை (சிலாவட்டம்) உண்டு. அதனருகே ஒரு வேங்கை மரம் இருக்கும். அவ் வேங்கையின் பக்கத்தே ஒரு செவ்விய வழி உண்டு. அவ்வழியே நீ செல்வாயாக. சென் றால் மத்திம தேயத்தை அடைவாய். அந்நாட்டு மன்னனை நீ காண்பாய். அவன் தன் மகளை உனக்குத் திரு மணம் செய்து கொடுத்து அங்கேயே தங்குமாறு செய்வான். நீ அங்கு இருக்குங் காலத்தில் நந்தட்டனும் உன் தோழரும் உன்னை அடைவர்.

(தொடரும்)

நிலவியல் தந்தை



ஜேம்ஸ் ஹட்டன்

நம்மை எல்லாம் வாழவைக்கும் இந்த நிலவுலகம் எவ்வாறு தோன்றியது? இன்று நாம் கண்டு களிக்கும் மலைகளும், ஆறுகளும், கடல்களும் எவ்வாறு தோன்றி அமைந்தன?—இதுபோன்ற பல்வேறு வினைக்கள் நம் மனத்தளத்தில் பிறந்து விடைபெறத் துடிக்கின்றன. பல நூற்றுண்டுகட்கு முன்னர் வாழ்ந்த பல்வேறு அறிஞர்களும் இவ் வினைக்களுக்கு விடை காண முயற்சித்துத் தம்மாலியன்ற விடைகளை அளித்துள்ளனர்.

தத்துவ ஞானிகளும், சமயப் பெரியார்களும் இத்தகைய வினைக்களுக்கு அவ்வக் காலங்களில் இறுத்துள்ள பதில்களைக் காணும்பொழுது அவர்களுடைய சிந்தனை அளவுக்குத் தக அவர்கள் பதிலிறுத்தனர் என்றே நாம் அமைதிகொள்ள வேண்டியுள்ளது. நம் நிலவுலகுக்குத் தொடர்பான இத்தகைய பல்வேறு வினைக்களுக்கும் சீரிய விடை தரும் அறிவியற் பகுதி நிலவியல் (Geology) எனப்படும். உலகின் தோற்ற வளர்ச்சிகளைப்பற்றியும், நிலவுலகின் புறத்தும் அகத்தும் நிகழ்ந்த, நிகழ்ந்து வரும், இனி நிகழ இருக்கும் பல்வேறு மாற்றங்களைக் குறித்தும் விளங்கக் கூறுவது நிலவியலே ஆகும்.

இத்தகைய சிறந்த அறிவியற் கூறு இரண்டு நூற்றுண்டுகட்கு முன்னர் தோன்றவே இல்லை என்று கூறும்பொழுது உங்களுக்குச் சற்று வியப்பாக இருக்கும். ஆனல், உண்மை அதுதான். அதற்கு முன்னர் உலகைப் பற்றிய சிந்தனைகளும் தெளிவற்ற கருத்துக்களும் இருந்தனவே தவிர ஒழுங்குபட்டதொரு இயலே இருக்கவில்லை.

அவ்வியலைத் துவக்கி வளர்த்துப் பல அரிய கருத்துக்களைக் கூறிய பெருமை ஸ்காத்லாந்து நாட்டைச் சேர்ந்த ஜேம்ஸ் ஹட்டன் என்பாரையே சாரும். அறிவியல் துறையில் இத்தகைய சீரியதொரு பணியாற்றிய பேரறிஞரின் வாழ்க்கையைக் குறித்தும் அவர்தம் கண்டுபிடிப்புகளைக் குறித்தும் ஓரளவு அறிய முயற்சிப்போம்.

திரு. பா. பாலசுப்பிரமணியன்,
M. A., B. Sc., Dip. in Anthropology.

நிலவியலில் ஈடுபாடு

ஜேம்ஸ் ஹட்டன் ஸ்காத்லாந்தில் 1726-ஆம் ஆண்டு ஜூன் 3-ஆம் நாள் பிறந்தார். இளமைப் பருவத்திலேயே மருத்துவத் துறையில் ஆர்வம் கொண்ட அவர், எடின்பரோ, பாரிஸ், லெய்டன் முதலிய பல்கலைக் கழகங்களில் படித்து முடித்து மருத்துவப் பட்டத்தைப் பெற்ருர். அதன் பின்னர் தம் ஊருக்கு மீண்டார். ஆனுல், எக்காரணத்தாலோ அவர் மருத்துவப் பணி ஆற்றுவதில் ஊக்கம் செலுத்தவில்லை. அதற்கு மாருக வேறு துறைகளில் ஈடுபாடு கொள்ளலானுர்.

அவருடைய கவனத்தை மிகவும் ஈர்த்த துறை, துறைகளிலெல்லாம் தலைசிறந்த உழவுத் துறையே ஆகும். தம் சொந்தப் பண்ணையிலேயே அவர் உழவினை மேற்கொண்டு அத் துறையிலும் பல புதுமைகளைப் புகுத்தலானுர். உழவுத் தொழிலில் ஈடுபட்ட நிலையில் அவர் இரசாயனத் துறையிலும் பெரிதளவு பற்று கொள்ளலானுர். அவருடைய இரசாயன ஆர்வம், உலோகங்களையும், அவற்றை வழங்கும் உலோக மண்களையும் (ores) கூர்ந்து ஆராயத் தூண்டியது. உலோக மண்களைப் பற்றிய ஆராய்ச்சி பாறைகளையும், அப் பாறைகள் படிந்துள்ள நிலப் பகுதிகளையும் புறத்தளவில் நின்று ஆராய்வதுடன் அவர் அமைதி கொள்ளவில்லை. அவற்றின் அகத்தையும் ஆழ்ந்து ஆராயலானுர். உலகின் நிலப்பகுதி எவ்வாறு தோன்றியது? எத்தகைய மாற்றங்களைப் பெற்றது? பாறைகள் எவ்வாறு தோன்றின? என்ற அடிப்படை வினுக்களுக்குரிய பொருத்தமான விடைகளைக் காணும் சீரிய ஆராய்ச்சியில் அவர் ஆழ்ந்துவிட்டார்.

இந்த ஆழ்ந்த ஆராய்ச்சியின் விளைவாக அவர் பல அரிய உண்மைகளைக் கண்டுபிடித்ததுடன், புத்தம் புதியதொரு இயலையே துவக்கிவிட்டார். அவ்வியலே நிலவியல் எனப் படுவது.

வெர்னரின் பேரதிர்ச்சிக் கொள்கை

அறிஞர் ஹட்டனுக்கு முன்னர் பாறைகளின் தோற்றத்தைப் பற்றிய கருத்துக்களே இருக்கவில்லை என்று கருதுவது தவறு. ஒருசில சிந்தனையாளர்கள் தத்தமக்குப்பட்ட கருத்துக்களை வெளியிட்டிருந்தனர். ஆனுல், அவை யாவும் ஒழுங்கான அறிவியல் ஆராய்ச்சியின் முடிபுகள் என்று கூறுவதற்கில்லை. இத்தகைய சிந்தனையாளர்களில் சற்று முன்னணியில் நின்றவர் பேராசிரியர் அப்ரஹாம் வெர்னர் (Abraham Werner) என்பவராவர். இவர் ஐரோப்பாவில், சாக்ஸனி (Saxony) என்ற பகுதியில், உலோகவியல் (Minerology) பேராசிரியராக இருந்தார். இவர், ஜெர்மனியிலுள்ள ஹார்ஜ்(Harz)மலைகளை ஆராய்ந்து நிலத்தின் புற அமைப்பைப் பற்றியதொரு கொள்கையை வெளியிட்டிருந்தார். இக்கொள்கை **பேரதிர்ச்சிக் கொள்கை** (Catastrophic Theory) எனப் பெயரிடப்பெற்றது.

இவ்வுலகம் மிக மிகப் பழங்காலத்தில் தோன்றியது. அப்பொழுது அது பெருங்கடலொன்ருல் சூழப்பட்டிருந்தது. அக்காலத்தில் உலகில் பல பயங்கர அதிர்ச்சிகள் தோன்றி பெரும் மாற்றங்களைத் தோற்றுவித்து வந்தன. அக் காலத்தில் பெரும் வெடிப்புக்களும் அதிர்ச்சிகளும் அன்ருட நிகழ்ச்சிகளாக இருந்தன. அத்தகைய நிலையில் பாறைகள் யாவும் உலகின் புறத்துக்குக் கொண்டுவரப்பட்டன. ஆனுல், அக்காலத்தில் எரிமலைகள் (Volcanoes) இல்லை. எரிமலைகளும் அவற்றின் விளைவான பாறைக் குழம்பும் (lava) பிற்பட்ட காலத்தைச்

சேர்ந்தவையே. மேலும், உலகெங்கும் காணப்படும் ஒரே தன்மையுடைய பாறைகள் ஒரே சமயத்தில் உண்டாக்கப்பட்டவை ஆகும். இதுவே வெர்னர் வெளியிட்ட பேரதிர்ச்சிக் கொள்கை.

இக் கொள்கையைப் பல அறிவியல் மேதைகளும் ஆதரித்தனர். ஆனால், பல்லாண்டுகள் நிலவியல் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த ஹட்டனுக்கு இக் கொள்கை சரி என்று தோன்றவில்லை. இக் கொள்கையில் பல குறைகள் இருக்கக் கண்டார். அக் குறைகளைத் துணிவுடன் எடுத்துக் கூறியதுடன், குறைகளற்றதொரு புதிய கொள்கையையும் வெளியிட்டார்.

ஹட்டனின் கண்டுபிடிப்பும் கொள்கை விளக்கமும்

வெர்னர் கொள்கையிலிருந்த முக்கியக் குறைபாடு கருங்கல்லைப் (Granite) பற்றியதாகும். அவர் கருத்துப்படி உலகப் பாறைகளில் முதன் முதல் தோன்றியது கருங்கற் பாறையே ஆகும். ஆனால், ஹட்டனோ நீண்ட ஆராய்ச்சிக்குப் பிறகு, கருங்கல் பல்வேறு காலங்களில் தோன்றி இருக்க முடியுமென்றும், அது சிறிது பண்படாத பாறைக் குழம்பிலிருந்தே தோன்றி இருக்கவேண்டுமென்றும் கூறினார். இக் கூற்றுக்களை மெய்ப்பிப்பதற்கான ஆராய்ச்சிகளிலும் இறங்கினார். எடின்பரோவிற்கு வடக்கே இருந்த கிராம்பியன் (Grampian) மலைகள் இவ்வாராய்ச்சிக்கு உறுதுணையாக அமைந்தன. இங்கு செந்நிறக் (கருங்)கற்பாறைகளும், சுண்ணும்புக்கல்லும், கருநிறத் தகட்டுப் பாறைகளும் (Schist) அமைந்திருந்தன. வெர்னரின் கருத்துப்படி கருங்கல்லே முதலில் தோன்றிய கல்லெனில் அடிப்பகுதியில் கருங்கற் பாறையும், அதன்மேல் சுண்ணும்புக்கல்லும், அதற்கும் மேல் தகட்டுப் பாறைகளும் அமைந்திருக்க வேண்டும். ஆனால், ஹட்டனோ கருங்கற் பாறைகள் அவற்றின் மேற்பகுதியிலுள்ள சுண்ணும்புப் பாறை, தகட்டுப்பாறை முதலியவற்றைத் துளைத்து வெளியே வந்து அமைந்திருக்கும் காட்சியைக் கண்டார். இதிலிருந்து, பிற பாறைகளைவிட கருங்கல் காலத்தால் பிற்பட்டது என்பதும் அது குழம்பு வடிவத்தில் இருந்தபொழுது மேலிருந்த பாறைகளைத் துளைத்து வெளியே வந்து, பிறகு குளிர்ந்தபொழுது உறுதிப்பட்டிருக்க வேண்டும் என்பதும் தெள்ளத் தெளிவாகிறது. எனவே, ஹட்டனின் கூற்றே உண்மை என்பது நன்கு விளங்கக் காணலாம். இவ்வுண்மையைக் கண்டதும் ஹட்டன் எல்லையில்லாத மகிழ்ச்சியைப் பெற்றார். ஆனால், அத்துடன் அமைதி கொண்டு விடாமல் பாறைகளின் தோற்ற வளர்ச்சிகளைப் பற்றிய மேலும் பல அரிய உண்மைகளை அறியும் முயற்சியில் ஆழ்ந்துவிட்டார்.

நாம் ஒவ்வொருவரும் நாள்தோறும் கண்டு வரும், ஆனால் அவற்றைக் குறித்துச் சிறிதும் சிந்தித்துப் பார்க்காத சில சாதாரண நிகழ்ச்சிகளைக் கொண்டே ஹட்டன் ஓர் அருமையான கொள்கையை உருவாக்கினார்

உலகின் பாறைகளும், மலைகளும் ஒவ்வொரு வினடியும் சிறிதளவேனும் மாறிக்கொண்டே இருக்கின்றன. பெய்யும் மழை, ஓடும் நீர், வீசும் காற்று முதலியவை எப்பொழுதும் பாறைகளைச் சிறுகச் சிறுக சிதைத்துக்கொண்டே இருக்கின்றன. அவ்வாறு சிதையுண்ட பகுதிகள் வண்டல் மண்ணுகவும், மணலாகவும் மாறி ஆறுகளால் கொண்டு செல்லப்படுகின்றன. அந்த

மண்ணும் மணலும் பன்னெடுந் தூரம் கடந்து முடிவில் கடலை அடைகின்றன. கடலை அடைந்ததும் கடலின் அடிப்பகுதிக்குச் சென்றுவிடுகின்றன. இதே முறையில் மேலும் மேலும் மண்ணும் மணலும் கொணர்ந்து குவிக்கப்படுகின்றன. இவ்வாறு மண்ணும் மணலும் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகள் குவிக்கப்படும்பொழுது அவற்றின் அளவு மிகவும் அதிகமாகின்றது. அந்நிலையில் கடலின் அடிமட்டம், பேரழுத்தத்தினால் சற்றுக் கீழ்நோக்கிச் செல்கின்றது. அத்தகைய பேரழுத்தத்தில் மண்ணும் மணலும் இறுகி உறுதிப்படுகின்றன. பிறகு உலகின் உட்பகுதியில் உள்ள பெரும் வெப்பத்தால் உறுதியான அப்பகுதிகள் உருகி நிலக்குழம்பாகப் புறத்தை நோக்கித் தள்ளப்படுகின்றன. நிலத்தின் புறப் பகுதிக்கு வந்த பிறகு நிலக்குழம்பு இறுகி பாறைகளாகப் படிந்துவிடுகின்றது. இவ்வாறு படிந்துவிட்ட பாறைகள் மீண்டும் முன்போலவே நீராலும், காற்றாலும் பாதிக்கப்படுகின்றன.

எனவே, பாறைகளின் தோற்ற அமைப்பு ஒரு சுழல் (circle) போன்று அமைந்துள்ளதைக் காணலாம். பழம் பாறைகள் சிதைக்கப்பட்டு, அந்த மண் கடலைச்சென்று அடைகின்றது; கடலின் அடிமட்டத்தில் பேரழுத்தத்தால் மண் திடப்படுகின்றது; பின்னர் உலகின் உள் வெப்பத்தால் திடப்பட்ட மண் பகுதியே பாறைகளாகப் புறத்தை நோக்கிச் செலுத்தப்படுகின்றது. ஏற்கெனவே உள்ள பாறைகளைப் பிளந்தும் நிலக்குழம்பு வெளிவந்து குளிர்ந்த பின்னர்ப் புதுப் பாறைகளாக அமைவதையும் எரிமலைப் பகுதிகளில் காணலாம்.

இதுவே ஹட்டன் தம் கூர்ந்த நோக்கினாலும், ஆராய்ச்சியாலும் வடித்துத் தந்த கொள்கை ஆகும். பழைய பாறைகளி லிருந்தே புதிய பாறைகள் தோன்றுகின்றன என்ற இவர் கொள்கையிலும் சில குறைகள் காண்பார் உளர். ஆனால், அவர் கொள்கையின் அடிப்படைக் கருத்து ஏற்றுக்கொள்ளப் பட்டது என்றே கூறவேண்டும்.

இதுவரை குறைந்தது பத்துமுறை இவ்வாறு பழைய பாறைகள் அழிந்து புதிய பாறைகள் தோன்றி இருக்கவேண்டும் என்று அவர் கூறியுள்ளார். ஒருமுறை இவ்வாறு பழைய பாறை அழிந்து புதிய பாறை தோன்றுவதற்கான இடைவெளியைக் கணக்கிட்டறிந்தால் உலகம் தோன்றிய காலத்தையும் உறுதிப்படுத்தமுடியும். ஆறு ஒன்று மலையை அறுத்துப் பள்ளத்தாக்கைத் தோற்றுவிக்க எத்தனை ஆண்டுகள் ஆகும் என்று அவர் கணக்கிட்டுப் பார்த்தார். அதற்கே எத்தனையோ ஆயிரக் கணக்கான ஆண்டுகள் பிடிக்கின்றன. அப்பொழுது மலைப் பாறைகள் சிதைந்து கடலை அடைந்து மீண்டும் புதுப் பாறைகள் தோன்ற எத்தனையோ இலட்சக் கணக்கான ஆண்டுகள் ஆகும் என்று கூறினர். இவ்வாறு பத்துமுறை நிகழ்ந்தது என்று கொண்டால் உலகம் தோன்றிப் பல கோடி ஆண்டுகள் கடந்திருக்க வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார். இன்னமும் எத்தனையோ முறை இம் மாற்றங்கள் நிகழ்ந்துகொண்டே இருக்கும் என்பதும் அவர் முடிவு. "உலகின் துவக்கத்தைக் கற்பனைக் கண்கொண்டும் பார்க்கமுடியவில்லை, அதன் இறுதிக் காலத்தை என்னால் எண்ணிப் பார்க்கவும் இயலவில்லை" என்று அவர் கூறியுள்ளார்.

ஹட்டன் தம் அரிய கண்டுபிடிப்புக்களைத் தொகுத்து "உலகைப் பற்றிய கொள்கை" (Theory of the Earth)

என்ற பெயரில் ஆராய்ச்சிக் கட்டுரையாக எடின்பரோ அரசினர் கழகத்தில் வெளியிட்டார். 1768-ஆம் ஆண்டு துவங்கிய இக் கட்டுரையைப் பல வகைகளில் செப்பம் செய்து 1795-ஆம் ஆண்டு பெரியதொரு நூலாகச் செய்தார். இந்நூலைப் படித்துப் புரிந்துகொள்வதே மிகவும் கடினமாக இருந்தது. ஜான் ப்ளேஃபேர் (John Playfair) அந்நூலை விளக்கி 'ஹட்டன் கொள்கையின் விளக்கங்கள்' (Illustrations of the Huttonian Theory) என்ற நூலை வெளியிட்டார். இந்நூலைப் படித்தபிறகு ஹட்டனின் கொள்கையைப் பலரும் புரிந்துகொண்டனர்.

வாழ்வின் பயன்

ஹட்டன் தம் வாழ்நாள் முழுவதையும் செலவிட்டு வெளியிட்ட தம் கொள்கையாலும், ஆராய்ச்சிகளாலும் பெருத்த மாற்றங்களைத் தோற்றுவித்தார். நிலவியல் என்ற புதியதொரு அறிவியற் பகுதியை அவர் துவக்கிவைத்ததுடன் அதற்குச் சிறந்ததொரு கொள்கையையும் அளித்தார். அவர் ஆராய்ச்சிகளின் விளைவாக நிலவியலில் பலரும் ஆர்வங் கொண்டு ஆராய்ந்து பற்பல உலோகங்களையும் கண்டுபிடித்துப் பயன்படுத்தலாயினர். அதனுல் உலோகவியலும் பன்மடங்கு வளர்ந்தது.

உலகின் வரலாற்றைத் தெளிவாக்கிய பெருமை ஹட்டனையே சாரும். உலகம் அன்று போலவே இன்றும் மாற்றங்கள் நிறைந்த ஒரு கோளாக உள்ளது; ஆனுல், ஆற்றல் மிக்க அம்மாற்றங்கள் நமக்குப் புலப்படாத வகையில் உள்ளும் புறமும் நிகழ்ந்துகொண்டே உள்ளன என்றும்; உலகின் நீண்ட வரலாற்றிலே மனிதனின் வரலாறு மிகமிகச் சிறியதொரு பகுதியே ஆகும் என்றும் அவர் தெளிவாக்கினுர். மழையின் தோற்றத்தைப் பற்றிய பல அரிய உண்மைகளையும் இவர் ஆய்ந்துரைத்தார்.

இவ்வளவு சீரிய பல கருத்துக்களை உலகுக்கு வழங்கிய பெருமகன் 1797-ஆம் ஆண்டு மார்ச்சு 26-ஆம் நாள் தாம் ஆய்ந்து பார்த்துப் பல உண்மைகள் கண்ட உலகினின்றும் பிரிந்துவிட்டார். நிலவியலுக்கு வித்திட்ட அப் பெருமகன் இன்றும் நிலவியல் தந்தை என்று போற்றப்படுகிருர்! ●

இது செய்தி

கார்ல்ஷ்ருகே — மே 1.

மனித குல நன்மைக்காக அணுச் சக்தியை ஆக்கவேலைக்கு எப்படி எல்லாம் பயன்படுத்த முடியும் என்பது பற்றி ஆராய்ந்து செயலாக்கி வருகின்றனர். ஆனுல், கதிரியக்கக் கிரண வீச்சுள்ள பொருள்களைக் கையாள்வதற்கு முன் சில பாதுகாப்பு முறைகளைக் கையாள்வது மிக முக்கியமாகும். கார்ல்ஷ்ருகேயிலுள்ள மேற்கு ஜெர்மன் அணுச் சக்தி ஆராய்ச்சி நிலையத்தில் மனித உடலில் இருக்கக்கூடிய கதிரியக்கச் சக்தியை உடனே கண்டுபிடித்துத் தெரிவிக்கக் கூடிய அருமையான கருவி வைக்கப்பட்டுள்ளது.

சென்னை — மே 6.

மைசூரில் உள்ள மத்திய உணவு ஆராய்ச்சி நிலையம் தயாரித்துள்ள திரவ மருந்து ஒன்றைப் பழங்களின் மீதும், காய்கறிகளின் மீதும் தெளிப்பதன் மூலம் அவை கெட்டுவிடாமல் பாதுகாக்கலாம்.

வார்ஸா — மே 18.

சந்திரன் நீங்கலாகப் பூமிக்கு மற்றும் இரண்டு துணைக் கோள்கள் இருப்பதாகப் போலந்து நாட்டு வானவியல் விஞ்ஞானி திரு. கோர்டிலூஸ்கி தெரிவிக்கிருர்.

இலேசான புகை மண்டலம் போல வான் வெளித் துகள்களால் ஆன இரண்டு துணைக்கோள்கள், ஏறத்தாழ சந்திரனுடைய வழியிலேயே பூமியைச் சுற்றி வருகின்றனவாம்.

கலைக்கதிர்

தமிழகத்தின் அறிவுப் பணியிலே
முன்னின்று முயல்வது.

○

கலைக்கதிர்

இன்றைக்கு வேண்டியது கருதி,
நாளைக்கு வேண்டியது கருதி,
நல்ல நூல்களையும் வெளியிடுகிறது.

○

எம் சிறந்த வெளியீடுகள் :	விலை ரூ.	அஞ்சல் செலவு
வான வெளிப் பயணம்	3–00	0–30
மனையியல் (விரிவான புதுப் பதிப்பு)	5–00	0–35
உதிரிப் பூ (இரண்டாம் பதிப்பு)	1–50	0–20
பூவும் கனியும் (மூன்றும் பதிப்பு)	0–70	0–15
உயிரியல்	5–60	0–35
வேதியியல்	3–70	0–35
கோகொரோ	1–00	0–20
சமணத் தமிழ்	2–50	0–30
குலசேகரர்	2–50	0–30
கானல்வரி	5–50	
தெ.பொ.மீ. மணிவிழா மலர்	10–00	

பதிவு அஞ்சலில் பெற அஞ்சல் செலவோடு ரூ. 0–50 காசு
சேர்த்து அனுப்புதல் வேண்டும்.

மற்றும் பல நூல்கள் வெளியாக விருக்கின்றன.

கலைக்கதிர் வெளியீடு, கோயம்புத்தூர் – 1.

Telegrams: "RANGAVILAS"

Telephones: 2536, 2537

Sri Ranga Vilas
Ginning Spinning & Weaving Mills Limited.

(Established in 1922)

PEELAMEDU P. O. :: COIMBATORE-4.

*

Spinners of Superior kinds of

CARDED YARNS from 2^s to 80^s Counts

and

CONE YARNS from 20^s to 80^s Counts

*

Managing Agents:

P. S. G. & SONS.

Sri Ranga Vilas Ginning & Oil Mills

POST BOX No. 151

COIMBATORE.

Grams: 'OILMILLS' *Phone:* **4151**

COTTON AND OIL DEPARTMENTS

Manufacture:

BEST QUALITY PROCESSED { **GROUNDNUT OIL & CAKE,** **COTTON & COTTON SEEDS**

★

Suppliers:

IN INDIA AND ABROAD

ALL VARIETIES OF SOWING COTTON SEEDS

★

PRODUCE COTTON SEED OIL AND COTTON SEED CAKE

Textile Department:

THE PIONEER TEXTILES,

RANGASWAMY NAGAR. VEDAPATTI.

Manufacturers of best 40s. 60s and 80s Cotton Yarn.

A LEADING HOUSE IN THE LINE IN SOUTH INDIA

Printed at Kalaikathir Achchagam, Avanashi Road, Coimbatore-1.